உயர்ந்த ரக உற்பத்திகளுக்கு

உகந்த இடம்

வந்து பாருங்கள்!

ஸ்டார் ஆப் இந்தியா
பென்சில்களுக்கு
மெட்ராஸ் பென்சில்
பாக்டரி

ஸ்டேஷனரி
சாமான்களுக்கு
வி. பெருமாள் செட்டி
அன் சன்ஸ்

சிறந்த லித்தோ
அச்சு வேலைக்கு

ஹோ & கோ

3, ஸ்டிரிங்கர் தெரு :: சென்னை-1

கண்ணன் தீபாவளி மலர்

84199

மலர்: 1

குழந்தைகளே!
காந்தியின் பேச்சே கல்கண்டு
தவிப்பு
கிரிக்கெட் கற்றுக்கொள் - போட்டோக்கள்
ஜக்கு துப்பறிகிறான்
காட்டு வீடு
க்விஸ்
கங்கா ஸ்நானமாச்சுதா?
தனரேகை
'ஜூ'வில் ஒரு நாள் - போட்டோக்களுடன்.
அம்புஜத்தின் தைரியம்
ஜிம்மிக்கு விருந்து
நாயும் திருடனும் (விளையாடும் கட்டம்)
பவழவல்லி
நோட்டில் நோட்டு
கிஷ்கிந்தா காண்டம்
காட்டுப் பூனையும் குழந்தையும்
சக்கர விளையாட்டு
குட்டிக் கதைகள்
ஒரே கோட்டில் படங்கள்
சாம்பார் சாதம்
வண்ண நீர் விளையாட்டு (வெட்டி ஒட்டும்
கறுப்பு முயல்
பனமரப் புதையல்
வனதேவதை
இரு சகோதரர்கள் - சித்திரக் கதை
கிளிகளின் தேசபக்தி
கண்ணன் கழக அங்கத்தினர்கள்
பாண்டியாட வாராயோ!
இந்த வருஷத் தீபாவளி - போட்டோக்கள்
ஊசிப் பட்டாசு
கண்ணன் தபால்

தபால் பெட்டி : 604,
மயிலாப்பூர்,
சென்னை, 4.

வருஷ சந்தா
ரூ. 3/-

கலைமகள்
மஞ்சரி
கண்ணன்
குடும்பச் சந்தா
ரூ. 12/-

கதைகளில் வரும் பெயர்கள்

22 NOV 1950
MADRAS

பொருளடக்கம்

இதழ்: 11

. . . . 4
. . . . கொத்தமங்கலம் சுப்பு 6
. . . . கி. சந்திரசேகரன் 8
. . . . ராம்சிங் 13
. . . . 'ஆர்வி' 17
. . . . தி. ஜ. ர. 23
. . . . 27
. . . . 'சுரபி' 28
. . . . எம். எஸ். ராஜேசுவரி 30
. . . . 33
. . . . கி. வா. ஜகந்நாதன் 41
. . . . 47
. . . . 48-a
. . . . கி. ரா. 49
. . . . ஜி. ஜயராமன் 54
. . . . 'ஸேனு' 59
. . . . 'சோமசன்மா' 65
. . . . 'சுண்டு' 69
. . . . 70
. . . . டி. வி. ரங்கசாமி 74
. . . . ஜி. எஸ். மணி 75
படம்) 80-a
. . . . 'ராஜி' 81
. . . . கா. ஸ்ரீ. ஸ்ரீ. 86
. . . . கல்பகம் 91
. . . . 98
. . . . பெ. தூரன் 106
. . . . 111
. . . . தேசிகவிநாயகம் பிள்ளை 113
. . . . 115
. . . . கே. ஆர். ராமசந்திரன் 119
. . . . 125

யாவும் கற்பனைப் பெயர்களே.

குழந்தைகளே!

தீபாவளி மலரைக் கண்டு படித்துப் பேசிச் சிரித்து அளவற்ற மகிழ்ச்சியை அடையப் போகிறீர்கள். இந்த இன்பம் அவர்களுக்கு இல்லையே!

இந்த மலரை வெளியிடுவதற்காக ராத்திரியும் பகலுமாகப் பல நாட்கள் செலவிட்டேன். என்ன என்ன போடவேண்டும், எப்படி எப்படி அமைக்க வேண்டும், யார் யார் கதையைப் போடவேண்டும் என்று மூளையைக் குடைந்துகொண்டிருந்தேன். 'விலை அதிகமாகப் போடக்கூடாது; விஷயங்களோ பிரமாதமாக இருக்கவேண்டும்' என்று எண்ணி ஏற்பாடு செய்தேன்.

இந்த மலரை வைத்துக்கொண்டு படிக்கலாம், படிக்கலாம், படித்துக்கொண்டே இருக்கலாம்—அத்தனை கதைகள் இருக்கின்றன. பெரிய எழுத்தாளர்கள் பலர் இதில் கதைகளை எழுதியிருக்கிறார்கள். கி. சந்திரசேகரன். தி. ஜ. ர, கி. வா. ஜகந்நாதன். கா. ஸ்ரீ.ஸ்ரீ., 'ஆர்வி', 'ஸேனு' 'சோமசன்மா', ஜி. எஸ். மணி, 'ராஜி', பெ. தூரன் ஆகியவர்களுடைய கதைகளை இந்த மலர் தாங்கி வருகிறது. அவைகளோடு குழந்தைகளின் கதைகளைக்கூட இந்த மலரில் வெளியிட்டிருக்கிறேன். ஜி. ஜயராமன், கே. ஆர். ராமசந்திரன் என்பவர்களின் கதைகளைப் படித்துப் பாருங்கள்.

குழந்தைகளுக்கென்று சின்னச் சின்னப் பாட்டுக்களைப் பாடும் புத்தேரித் தாத்தா கவிஞர் தேசிகவிநாயகம் பிள்ளை உங்க

கங்காஸ்நானம் ஆயிற்று?

தீபாவளிப் பண்டிகை எல்லோருக்குமே ஆனந்தம் உண்டாக்கும் பண்டிகை; குழந்தைகளும் கிழவர்களும், ஆண்களும் பெண்களும், ஏழைகளும் பணக்காரர்களும்—யாவரும் எண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்து கொண்டாடிக் குதூகலிக்கும் பண்டிகை இது இந்த ஆனந்தமான தீபாவளியில் உங்கள் ஆனந்தத்தை அதிகப்படுத்த இந்தத் தீபாவளி மலரை வழங்குகிறேன்.

ஒருவிதத்தில் உங்களுடைய தாத்தாவைவிட, அப்பா அம்மாவைவிட நீங்கள் பாக்கியசாலிகள். அவர்களெல்லாம் தீபாவளி என்றால் எண்ணெய் தேய்த்துக் கொண்டார்கள்; புதிய ஆடைகளை அணிந்தார்கள்; பட்சணங்களை உண்டார்கள்; பட்டாசுகளை வெடித்து மத்தாப்புகளை விட்டார்கள். நீங்களும் இத்தனை காரியங்களையும் செய்யப்போகிறீர்கள். ஆனால் அவர்கள் அதோடு நின்று விட்டார்கள்; நீங்களோ 'கண்ணன்'

ளுக்காகவே ஒரு பாட்டைப் பாடிக் கொடுத்திருக்கிறார். உடம்பு சரியில்லாமல் இருந்தாலும், தீபாவளிக்குக் குழந்தைகள் ஆடிப்பாடிக் களிக்கட்டும் என்ற அன்பினால் பாடியிருக்கிறார். கொத்தமங்கலம் சுப்பு, காந்தியைப்பற்றிய பாட்டை எழுதியிருக்கிறார். 'சுரபி' தீபாவளிக்காகவே ஒரு பாட்டுப் பாடியிருக்கிறார்; 'கங்காஸ்நானம் ஆச்சுதா?' என்று கவியிலேயே கேட்கிறார்.

அநேகமாக இந்த மலரில் பக்கத்துக்குப் பக்கம் படங்கள் வர்ண மத்தாப்பூப் போலே பளிச்சிடுவதைக் காணலாம். பெரிய படங்கள், சிறிய படங்கள், போட்டோப் படங்கள், வேடிக்கைப் படங்கள் என்று பல பல வகையில் பல ஓவியர்கள் சிரமப்பட்டு இந்த மலருக்குப் படங்களைத் தீட்டியிருக்கிறார்கள். வெட்டி ஒட்டும் படம் ஒன்று இதில் வருகிறது. கண்ணனுக்கும் கோபிகைக்கும் தனியே தீபாவளிக்காகப் புதிய ஆடை ஆபரணங்களை வைத்திருக்கிறேன். அவற்றை அவர்களுக்கு அணிந்து அழகு பாருங்கள். நாயும் திருடனும் என்ற கட்டப் படத்தை வைத்துக்கொண்டு நீங்கள் விளையாடலாம். தாயக்கட்டம், பரமபதசோபான படம் முதலியவற்றை ஆடி ஆடிச் சலித்துப் போன குழந்தைகளுக்கு இந்தக் கட்டம் குஷியாக இருக்கும். நாய் ஜயிக்கிறதா, திருடன் ஜயிக்கிறானா என்று பார்த்துவிடலாம்.

போன இதழில் 'கிரிக்கெட்'டைப்பற்றின படங்களைப் போடப் போகிறேனென்று சொல்லியிருந்தேன். இந்த இதழில் இந்தப் படங்கள் ஜாம் ஜாமென்று ஆரம்பமாகின்றன. இனிமேல் 'கண்ணன்' படிக்கிற குழந்தைகள் யாவருமே கிரிக்கெட் ஆட்டத்தில் பெரிய சாம்பியன் ஆகலாம் அல்லவா?

புலியையும் சிங்கத்தையும் பற்றிக் கதைகள் படிக்கிறீர்கள்; ஆனால் அவற்றை உங்களில் பலர் நேரே பார்த்திருக்கமாட்டீர்கள். உங்களுக்காக நான் 'ஜூ'வுக்குப் போய்ப் பார்த்தேன். அடடா! எத்தனை வேடிக்கையாக இருந்தது! உங்களையெல்லாம் கூட்டி வந்து காட்டவேண்டுமென்று ஆசைதான். ஆனால் அது முடிகிற காரியமா? அதற்காக அந்த 'ஜூ'வையே உங்களிடம் கொண்டு வந்துவிட்டேன்; உள்ளே திருப்பிப் பாருங்கள்; தெரியும். எட்டுப் பக்கத்தில் ஒரு கதையையே படமாக வரைந்திருக்கிறார் சித்திகாரர் தாணு. மந்திரம், மாயம், பராக்கிரமம் எல்லாம் வரும்கதை இது.

இன்னும் பல புதிய அம்சங்களும் இருக்கின்றன. எல்லாவற்றையும் பார்க்கப் போகிறீர்கள்; படித்துச் சபாஷ் போடப் போகிறீர்கள். அதிலே ஒரு சந்தேகமும் இல்லை. மலரைப்பற்றி நான் அதிகமாகச் சொல்வதைக் காட்டிலும், நீங்களே படித்துப் பார்த்துச் சொல்லுங்கள்; எனக்கும் எழுதுங்கள்.

உங்களுடைய 'சபாஷ்'தான் கண்ணனுக்கு உயிர். 'கண்ணன் தீபாவளி மலருக்கு ஜே!' என்று நீங்கள் கோஷமிடுவது என் காதிலே கேட்கிறதே!

—ஆசிரியர்.

காந்தியின்
பேச்சே
கல்கண்டு

கொத்தமங்கலம் சுப்பு

காந்தியின் பேச்சே கல்கண்டு
கருணையிருந்தால் களிப்புண்டு
கட்டின வேட்டி முழத்துண்டு
காசினி யெல்லாம் மதிப்புண்டு
கையில் மூங்கில் கம்புண்டு
பொய்மை விரட்டும் தெம்புண்டு
பொக்கை வாயில் சிரிப்புண்டு
பூரித்த அதுவே களிப்புண்டு
சாந்தம், அன்பு சத்தியமும்
காந்தித் தாத்தா சொன்னவழி
சமத்தாய் இந்தப் பாதையிலே
தனியாய் நாமே நடந்தாலும்
துணையா யிருக்க காந்திமகான்
தோன்றி வருவார் நம்மெதிரே
பொய்யைச் சொல்ல மாட்டோம் நாம்
பொல்லாக் கோபம் கொள்ளோம் நாம்
மெய்யைச் சொல்லி உலகத்திலே
மேலாய் என்றும் வாழ்வோமே.

ஜயிப்பு

கி. சந்திரசேகரன்

ராமு, சக்கு, சுசி மூன்று பேரும் சேர்ந்து விளையாடினார்கள். ஓடிக்கொண்டிருந்த மழைத் தண்ணீரில் காகிதக் கப்பல்களை மிதக்க விட்டார்கள்.

தன்னுடைய கத்திக் கப்பல் மற்றக் கப்பல்களைத் தாண்டி வேகமாய்ப் பறந்து செல்வதைக் காண, சக்குவுக்குச் சந்தோஷத்தை அடக்க முடியவில்லை. இரு கைகளையும் சேர்த்துக் கொட்டியபடியே, "பார்த்தயாடா, அண்ணா, என் கப்பல்தான் ஜயிச்சுது. உன்னுதுதான் ஜயிக்கும்னு சொன்னியே! இப்போ பாத்தயா?" என்று கூவினாள்.

"சரிதாண்டி, வாயாடி! அதோ பார், உன் கப்பலுக்கு வந்த ஆபத்தை" என்று இரைந்து சிரித்தான் ராமு. பாவம், சக்கு அறிவாளா ராமு செய்த சூழ்ச்சியை? ராமு ஒரு சிறு கல்லைப் பொறுக்கி அவள் கப்பலின்மேல் போட்டு முழுக வைத்ததை அவள்தான் பார்க்கவில்லையே!

சுசி சின்னவள். அவளுக்கு வயசு மூன்றுதான் ஆகியிருந்தது. ஆனாலும் அவள் ராமு செய்த காரியத்தைக் கவனித்திருந்தாள். சும்மா இராமல் அவள், "நானும் இதோ ஒரு கல்லு கொண்டு வந்தேனே!" என்று சொல்லி, தன் கையில் வைத்திருந்த ஒரு சட்டி ஒட்டை வீசி ராமுவின் கப்பலைப் பார்த்து எறிந்தாள். இருந்த இடம் தெரியாமல் ராமுவின் இரட்டைக் கப்பல் கவிழ்ந்து ஜலத்தினுள் சென்று

விட்டது. ராமுவின் கோபம் எல்லை கடந்தது. சுசியின் முதுகில் பளீரென்று ஒன்று வைத்தான். அடுத்த கணம் மிருதுவான மலர்க்கரங்களைக் காட்டிக்கொண்டு சுசி 'கோ' என்று அலறினாள்.

உள்ளே இருந்தபடியே அம்மாவின் அதட்டல் குழந்தைகளின் ஆரவாரத்தை இருந்த இடம் தெரியாது அடக்கியது. "ஏண்டா ராமு, குழந்தையைச் சீண்டினயோ, வந்து உதைப்பேன்" என்றது தாயின் குரல்.

ராமுவா பின்பு அங்கே தங்குவான்? சிட்டுக் குருவி போல் 'விர்' என்று வெளியே ஓடிவிட்டான்.

சுசி ராமுவின் கப்பலைக் கவிழ்த்ததில் சக்குவுக்கு வருத்தந்தான். தன் கப்பல் முழுகியதை அவள் மறந்துவிட்டாள். ராமுவின் கப்பலை ஜலத்திலிருந்து எடுத்து, நனைந்து கிழிந்து கிடந்த காகிதத்தைப் பார்த்தாள். வாஸ்தவத்தில் அவள் உள்ளமும் அதைப் போல் கிழிந்து நாராய்க் கிடந்தது. ராமுவின் சங்கடத்தையும் எப்படிப் போக்குவது என்றே அச்சிறு உள்ளமும் உள்ளூற யோசனை செய்தது.

நூலுருண்டை வாங்கத் தன் கையிலிருந்த காசை ராமுவிடம் நீட்டி, "அண்ணு, உனக்கு வேணுமா?" என்று பரிவுடன் அவனை நெருங்கினாள் அவள்.

வெடுக்கென்று அவள் கையிலிருந்து காசை ராமு பிடுங்கிக்கொண்டு அவசரமாய்க் கிளம்பினான். போதாததற்கு, "சக்கு, எங்கேயிருந்து காசை எடுத்தேன்னு தெரியும்டீ எனக்கு" என்று இரைந்து கத்தினான்.

தன் வாயைப் பொத்தி அம்மாவுக்குத் தெரியவேண்டாம் என்று சக்கு அவனுக்கு ஜாடை செய்தாள். "பெப்பரமிட் வாங்கப் போறேன்" என்று ராமுவின் குரல் ஒலித்ததை அவள் கேட்டு, "எனக்கும்டா" என்று சொல்வதற்குள் ராமுவைக் காணவில்லை.

* * *

ராமு 'லாலிபப்' ஒன்றை வாயில் சப்பிச் சுவைத்துக்கொண்டே எதிரே தோன்றினான். தான் தின்பதில் சக்குவுக்கோ சுசிக்கோ பங்கில்லை என்பதே அவன் அடைந்த திருப்திக்குக் காரணம்.

குழந்தைதானே சக்குவும்? அதிலும் அவனைவிட நான்கு வயசு சின்னவள். "எங் காசுதானேடா? எனக்கு ஏண்டா தரல்லே?" என்று அவள் அவனைக் கேள்வி கேட்டாள்.

"கடையிலெ போய்க் கேளு" என்றுன் ராமு குறும்பாய், பதிலுக்கு.

துக்கம் தொண்டையை அடைத்தது சக்குவுக்கு. அவளுக்குத் தோன்றியதெல்லாம், 'அம்மாட்டே சொல்றேன் பார்' என்பது மட்டுமே. பின்பு அம்மாவைத் தேடி உள்ளேயும் சக்கு சென்றுள்.

ராமு எதிர்பார்க்க இயலாதபடி அம்மாவின் ஆவேசம் கிளம்பியது. பாம்புப்புற்றில் பந்தை விட்டெறிந்தால் அது கிளம்பிப் படமெடுப்பது போல், அம்மாவிடம் சக்கு சொன்ன

சொல் விபரீதமாகியது. "ஏண்டா, தடியா! காசை எடுத்து, பெப்பரமிட் வாங்கி ஊயா? கழிசடை, உன்னை இப்படி ஆக்கினது உங்கப்பா தாண்டா. அவர் வறச்சே அழச் சொல்றேன் பாரு" என்று உறுமினதுடன் மொத்து மொத்தென்று அவன்மேலெல்லாம் அடிகளைப் பொழிந்து தள்ளினுள்.

ராமுவா அழுபவன்? சக்குவின் பேரில் அவனுக்கு வந்த கோபத்தை ஓர் அலட்சியப் பார்வையில் காட்டினுன் அவன். போதாததற்கு, "ஏண்டி, அழுவேன்னு நினைச்சையா? உன்னுட்டமா அசடில்லை நான்" என்று சொல்லித் தன் தலையை நிமிர்த்திக் கொண்டான். சொல்லமாட்டாத துக்கம், வெறுப்பு, வேகம்-மூன்றும் போராடின அவன் கருகிய வதனத்தில்.

சக்குவுக்குப் புத்தி கற்பிக்க வேண்டுமென்ற எண்ணம் வேறு அவனிடம் உதித்தது.

"இதோ பாருடீ, எதிராத்துச் சாம்புவும் நானும் அன்னிக்கிப் போனுமே சினிமா, அதுக்குப் போப்போறும். உன்னை அழைச்சிண்டு போப் போறதில்லை போ" என்று சொல்லி அவளைச் சங்கடப் படுத்திவிட்டான்.

சக்குவுக்கு மேலே ஒன்றுமே ஓடவில்லை. சினிமா பார்ப்பதில் அவள் ஆசைக்குக் கங்கு கரையில்லை.

"நானும் வறேண்டா - இனிமே அம்மாட்டே ஒண்ணுமே சொல்ல மாட்டேன் - சத்தியம்"! என்று கெஞ்சினுள்.

அவனு இனி இளகி அவளை அணைப்பான்? "போடி, உன்னே யாரு அழைச்சிண்டு போறது? நீ வரக் கூடாது. அந்தப் 'பெரிய பூனை'ங்கற படம் பலே ஜோராய் இருக்குமாம். சிங்கத்தை முழுக்க முழுக்கக் காட்டருணும். தாவுதாவுன்னு தாவறதாம் அது. இதோ இப்பவே போகணும்" என்று எக்காளமிட்டான் அவன்.

அவளால் இந்தச் சந்தோஷத்தைப் பொறுக்க முடியவில்லை. அவள் அப்பா அப்போதுதான் அங்கே வரவும், அவள் அவரிடமும் ஒரு குற்றச் சாட்டை நீட்டினுள். 'பாரு அப்பா அவனை! அன்னிக்கித்தான் அண்ணு சினிமா போனுன்னு நீ கோச்சுண்டே. இன்னிக்கும் போப்போருணும்" என்று ஆரம்பித்தாள்.

ராமுவின் விஷமமெல்லாம் அப்பாவிடம் பலிக்காது. அவர் தீர்மானம் செய்துவிட்டாருல் அப்புறம் திரிமூர்த்திகள் வந்து வேண்டியபோதிலும் மாற்ற முடியாது.

அவ்வளவுதான். அவர் ராமுவைப் பார்த்தார். ஒரு கோபச் சிரிப்புச் சிரித்தார்.

"சினிமாவா? பேஷ்! நாளைக்கு மாசப் பரீட்சைன்னு 'பிரைவேட் டீச்சர்' சொல்ருர். நீ சினிமா போக மாட்டையோ? போடா மேஜையிடம். உக்காந்து படி பாடத்தை. தெரியுமா? சினிமா கினிமா ஒண்ணும் மூச்சு விடப்படாது!" என்று ஒரு கர்ஜனை அவரிடம்

கிளம்பியது.

சிறிது நேரத்துக்கெல்லாம் அவர், "ஏண்டி சக்கு, உங்கம்மாவைக் கூப்பிடேன். வெளியே போகலாம். நீயும் சுசியும் கூட வாங்கோ" என்றார்.

சந்தோஷம் பொங்க, சக்கு உள்ளே சென்று புதுப் பாவாடை அணிந்து, சுசிக்கும் புதுச்சட்டை போட்டு அழைத்து வந்தாள். அம்மாவும் புதுப்புடவை கட்டிக் கொண்டு குனிந்து குனிந்து பார்த்துக்கொண்டே வெளியே வந்தாள்.

"தினந்தான் செக்கு சுத்த ருப்பலே நடக்கிறோம். அத்தே விட்டு இன்னிக்குச் சினிமாவுக்குத்தான் போவோமே! குழந்தைகள்ளாம் ஆசைப் படறதுகள்" என்றாள் அம்மா.

"உனக்கு ஆசை. அவா பேருலே என் போடறே?" என்றார் அப்பா.

"இப்போ, அப்பா, 'பெரிய பூனை'ன்னு வந்திருக்காமே. அதுக்குப போலாமே, அப்பா!" என்றாள் சக்கு, தன் அண்ணன் சொன்ன பெயரை மறக்காமல். சரி என்பதைப்போல் தலையை ஆட்டி அவர் தம் ஜேபியில் மணிபர்ஸ் ஒன்றைப் போட்டுக் கொண்டார். போகும் சமயம் ராமுவைக் கூப்பிட்டார்.

"டேய், வீட்டை விட்டு நகரப் படாது, தெரியுமா? வாத்தியார் வந்தா வாசி. இங்கேயே இரு" என்று கடுமையான உத்தரவு பிறந்தது அவர் வாயிலிருந்து.

அவர்கள் கிளம்பினார்கள். சக்குவுக்கு முதலில் தோன்றிய ஆனந்தமெல்லாம் வரவரக் குன்றியது. மெதுவாய் ராமுவிடம் குசுகுசுவென்று அவள், "அப்பாட்டே சொல்லட்டு மாடா, நீயும் வர ஆசைப்பட றேன்னு" என்றுதான் சொன்னாள். அவனா அவளிடம் வரம் பெறுவான்? "போடி" என்று சீறி விழுந்தான் அவள்மேல்.

படம் பார்க்கையில் சக்குவுக்கு ராமு ஞாபகமாகவே இருந்தது. தான் சினிமாவில் இருக்கையில் ராமு வீட்டில் தனியாக இருப்பானே! அதை நினைத்து அவள் உள்ளம் வேதனைப்பட்டது. அவள் ஒன்றையும் பிறகு படத்தில் கவனித்ததாகவே தெரியவில்லை.

இரவு வீட்டுக்கு வந்ததுமே, அவள் ராமுவிடம் தன் வருத்தத்தைத் தெரிவிக்க வேண்டும் என்றிருந்தாள். ராமு தன்னை ஏதாவது கேட்டால் படத்தைப் பற்றிச் சொல்வதெப்படி என்றும் தனக்குள்ளேயே வெதும்பினள்.

ஆனால் அவள் நினைத்த விதம் ராமு இல்லவே இல்லை. அலட்சியமாயும் சந்தோஷமாயும் அவன் காணப்பட்டான். அவனிடம் குற்றம் செய்த பாவனையில் அவள் அருகில் வரவும், அவன் அவளைத் தோளில் தட்டி, "சக்கு, நீங்கள்ளாம் போனப்பறம், சாம்பு 'கேரம் போர்டு' கொண்டுவந்தான். நான், அவன், அவனக்கா, தொப்பிளி, நாலுபேரும் விடாமே ஆடினோம். இனிமே ஆத்துலே நீங்கள்ளாம் வெளியே போறப்போ அவாள்ளாம் இங்கே விளையாட வருவா. 'கேரம்' ஆட்டம் ரொம்ப ரொம்ப ஜோராயிருக்கு. நான் நாலு ஆட்டம் ஜயிச்சேன். சாம்பு முழுக்கத் தோத்துட்டான்" என்றான்.

சக்குவுக்கு ஒன்றும் விளங்கவில்லை. "ஏண்டா அண்ணா, வாத்தியாரிட்டே வாசிக்கலையா?" என்றுதான் கேட்டாள்.

"அதுவா, வாத்தியாராத்துலேந்து அவரை அவசரமா அழைச்சிண்டு போயிட்டா. நான் அப்பறம் ரொம்ப நாழி ஆடினேன்." ராமுவின் முகத்தில் வெற்றிக்குறி தாண்டவமாடியது.

சக்குதான் இப்பொழுதும் தவித்தாள்.

கிரிக்கெ



ராம்சிங்

[illegible]

போட்டோ: வின்ஸென்ட்

[ராம்சிங் இட்துகை ஆட்டக்காரர். ஆகையால் நீங்கள் உங்கள் கை]வாட்டப்படி மட்டையை வைத்துக்கொள்ளுங்கள்.]



ஜக்கு

துப்பறிகிறான் - - - - - 'ஆர்வி'

அருணாசலம் அருகில் வந்ததும் அவனிடம் என்னவோ பேச ஆரம்பித்தார். ஆனால் ஜக்குவுக்கு நிற்க நேரம் இல்லை. "சுவாமிகளே, பாக்கி எல்லாம் நாளைக்குப் பேசிக்கலாம். நான் அவசரமாக வீட்டுக்குப் போக வேண்டும்" என்று சொல்லிவிட்டு, வேகமாக நடந்தான்.

போகும்போது அன்று நடந்த சம்பவம் ஒவ்வொன்றும் அவன் மனக்கண்முன் வந்தன. தடபுடா என்ற சத்தம், கத்திகள் உராய்ந்த ஓசை, சில்லறைகள் கலகலவென்று செய்த ஒலி, அணில் அடிக்கடி கீச் கீச்சென்று கத்தியது, அருணாசலம் தனியாகப் பேச வேண்டும் என்றது — இப்படிப் பல விஷயங்கள் அவனுக்கு ஒரே புதிராக இருந்தன.

இன்னும் ஒரு வேடிக்கையும் சேர்ந்தது. அவன் திரும்பி வந்து பாலத்தடியில் பஸ் ஏற நின்றான். அந்த இடத்தில் நல்ல இருட்டு. பஸ் வந்ததும் அந்த இடத்திலிருந்து அவனுக்கு முன்னால் நாலைந்து பேர்கள் வந்து ஏறிக்கொண்டார்கள். அதனால் அவனுக்கு அந்த வண்டியில் இடம் கிடைக்கவில்லை. அவர்கள் முகத்தைச்

சரியாகக் கவனிப்பதற்குள் கண்டக்டர், 'ரைட்' கொடுத்து விட்டான். ஒன்று மட்டும் ஜக்கு வுக்கு ஆச்சரியமாய் இருந்தது. அந்த நாலைந்து பேரும் அவன் வயதுப் பையன்கள்தான். நல்ல வேளையாக மறுநாள் ஞாயிற்றுக்கிழமையாக இருக்கிறதே என்று ஜக்கு எண்ணிக்கொண்டான். முதலில் அருணாசலம் எதற்குக் கூப்பிட்டார் என்று தெரிந்துகொள்ளுமுன் அந்தப் பங்களாவைச் சுற்றிப் பார்க்க அவன் தீர்மானித்தான்.

அன்று இரவு ஒரு விசேஷமும் இல்லை. பொழுது விடிந்ததும் ஜக்கு முதல் காரியமாக, தன் பெட்டியைக் குடைந்து அடியில் கிடந்த சில சாமான்களைத் தேடி எடுத்தான். அந்தச் சாமான்கள் இருப்பது வீட்டில் யாருக்கும் தெரியாது. அவ்வளவு பத்திரமாய் அவன் வைத்திருந்தான்.

'எல்லாம் சரி, துணைக்கு நந்துவை அழைத்துக் கொண்டு போவோமா, வேண்டாமா?' என்று யோசித்தான் முதலில். எதற்கும் நந்து கூட வருவதே நல்லது என்று பட்டது அவனுக்கு.

உடனே குளித்தான்; தன் அறைக்குள் நுழைந்தான். அன்றைக்கு அவன் டிரஸ் போட்டுக்கொள்ள அரைமணி கூடவே ஆயிற்று. வெளியில் வரும்போது ஜக்கு ஒரு சுற்றுப் பருத்தே காணப்பட்டான். அதற்குள் மாமாவின் பெண் கீதா வந்து, "ஏ, ஜக்கு, அம்மா கூப்படறா! சாப்பட வாயேன்" என்று கூப்பிட்டாள்.

ஜக்கு வெளியில் வந்து அவளைத் தூக்கிக்கொண்டு, "நீ தாதம் போத்தால்தான் சாப்பிடுவேன்" என்று கொஞ்சினான்.

"நா மாத்தேன் போ!" என்றாள் கீதா.

"அப்படின்னா உன்னைக் கல்யாணம் பண்ணிக்கமாட்டேன்!" என்றான் ஜக்கு சிரித்துக்கொண்டு.

"கண்ணியாலம் பண்ணிக்குவேன், போ" என்றாள் குழந்தை.

"கூடாது போ" என்று அவளைக் கீழே இறக்கிவிட்டான். ஆனால், என்ன துரதிருஷ்டம்! உள் உடுப்பிலிருந்த அமெரிக்கன் கைத்துப்பாக்கி தொப்பென்று கீழே விழுந்தது.

"அதைக் குடுடா" என்று கத்தினாள் கீதா.

ஜக்கு அதை டக்கென்று எடுத்து, "காக்கா, ஹோஷ்!" என்று சட்டைக்குள் மறைத்துக் கொண்டான்.

கீதா லேசில் விடுவதாயில்லை. ஓவென்று பெரிதாக அழுதாள். மாமாகூட, "எம்மா அழறே!" என்று கேட்டார். ஜக்குவுக்குத் திகில். ஆனால் கீதாவுக்கு அது என்னவென்று சொல்லிக் கேட்கத் தெரியவில்லை.

"சாயங்காலம் பப்பர்மெண்ட் கொண்டுவறேன். சினிமாவுக்கு அழைச்சிண்டு போறேன். காரிலே 'பம்பாம்-ப-பாம்'னு போகலாம்" என்று எவ்வளவோ சமாதானப் படுத்திப் பார்த்தான் ஜக்கு. அவள் கேட்டால்தானே?

"மாத்தேன் போ—அது வேணும் போ—கண்ணியாலம் பண்ணிக்க மாததேன் போ" என்று சொல்லிக்கொண்டிருந்தாள். மாமிக்கும் மாமாவுக்கும் சிரிப்புத்தான் வந்தது. நல்ல காலம், ஜக்குவின் குட்டு வெளிப்படவே இல்லை.

ஜக்கு சாப்பிட உட்காரும் சமயததில் நந்து வந்தான். ஜக்கு எழுந்து வந்து ரகசியமாக, "டேய், போய் ரெடியாக இரு. கொஞ்சம் வெளியிலே போகணும். இதோ சாப்பிட்டுவிட்டு வந்துவிடுகிறேன்" என்றான்.

மணி பத்தடிக்கும்போது ஜக்குவும் நந்துவும் அடையாறு போகும் பஸ்ஸில் இருந்தார்கள். ஜக்குவின் கையில் ஒரு பை இருந்தது. அதைப் பார்த்த நந்து, "என்னடா இது, பை? ஒரே நாளில் நீ கொஞ்சம் பெருத்துப் போயிருக்கயே, காத்து அடைச்ச ரப்பர் டயர் மாதிரி!" என்றான்.

"பாத்துண்டே இரு, சாயங்காலம் 'பங்ச'ரானது மாதிரி போயிடுவேன்" என்றான் ஜக்கு.

பாலத்தடியில் இறங்கிக் கொண்டார்கள். "அடேய் நந்து! இப்பவே சொல்லிப் பிடறேன். என்ன, ஏது, ஏன் என்று நீ வாயை திறக்கப் படாது. நான் ஏதாவது உன்னைக் கேட்டால்கூட நீ செவிடன் மாதிரி ஆக்ட் பண்ணணும். நாம்ப திரும்பி பஸ்ஸில் ஏறினப்புறந்தான் உனக்குக் காது கேக்கணும். புரிஞ்சுதா?" என்றான்.

நந்துவுக்குச் சொல்லவேண்டு

மா? அவன் இதில் எல்லாம் எக்ஸ்பர்ட். ஆனால் அவனுக்கு ஒரு சந்தேகம வந்துவிட்டது. "எல்லாம் சரிடா, எனக்குக் கண் தெரியலாமா, இல்லே-கண்ணும் குருடா இருக்கணுமா?" என்று கேட்டான்.

"சரிதான், வேறே வினையே வேண்டியதில்லை. அப்புறம் நம்ப ரெண்டு பேருமே மாட்டிக்க வேண்டியதுதான்! நான் ஜாடை காட்டுவேன். நீ அதன்படி நடந்துக்கணும். அவ்வளவுதான். சரி, போகலாமா?"

இரண்டு பேரும் மாறனேரி ஜமீன்தார் பங்களாவுக்குச் சமீபம் வந்தார்கள். "நந்து, செவிடாயிட்டயாடா? ஜாக்கிரதை! பேசாமல் என் பின்னாலேயே வா!" என்று சொன்னான் ஜக்கு.

கொஞ்ச தூரம் போனதும் ஜக்கு திரும்பிப் பார்த்தான்.

நந்து இருந்த இடத்திலேயே நின்றுகொண்டிருந்தான். ஜக்கு திரும்பி வந்து, "என்னடா இது! பேசாமல் பின்னால் வாடா என்றால் இங்கேயே நிக்கறயே?" என்றான்.

"டார்ஜான் படத்துக்குப் போயிருந்தேண்டா. சுத்த மோசம்டா, நன்னாவே இல்லே" என்றான் நந்து சம்பந்தமில்லாமல்.

ஜக்குவுக்கே சிரிப்பு வந்தது. "ரைட், அப்படித்தான்! சரி; என் பின்னால் வா" என்று கை காட்டினான். அதற்குப் பிறகுதான் நந்து அவன் பின்னால் போனான். செவிடன் மாதிரி அவன் 'திருக் - பிறுக்' கென்று முழித்துக்கொண்டே போனது வெகு தமாஷாய் இருந்தது.

அது வடக்கு திசையைப் பார்த்த பங்களா. கிழக்குப் பக்கம் எல்லாம் வெயில். கொய்யா மரம் மேற்குப் பக்கத்தில் இருந்தது. ஜக்கு வாசல் பக்கமாகப் போகாமல் கொய்யா மரத்தடிப் பக்கமாய் வந்தான். மரத்தடியில் வந்ததும் தன் உடம்பையெல்லாம் ஒரு தடவை தொட்டுப் பார்த்துக்கொண்டான். கையிலிருந்த பையையும் ஒருமுறை பார்த்துக் கொண்டான். எதிரே மரக்கிளையில் அந்த அணில் இருந்தது. ஆனால் என்ன ஆச்சரியம்! அவர்களைக் கண்டு அது கத்தவேயில்லை.

முதல் நாள் அந்த மரத்தடியில் இரண்டு மூன்று வாழைப் பழத்தோல் கிடந்ததை அவன் கவனித்திருந்தான். அதனால் பையில் கொண்டுவந்திருந்த ஒரு வாழைப் பழத்தை எடுத்துக் கீழே போட்டான். உடனே அந்த அணில் தாவி வந்து அந்தப் பழத்தை எடுத்துக் கவ்வியது. ஜக்கு மரக்கிளையில் ஏறி ஜன்னலை அடைந்தான். நந்துவும் ஏறி அவன் பின்னால் உள்ளே குதித்தான். அவனுக்கு எல்லாம் ஒரே வியப்பாய் இருந்தது. காலை நேரமானதால் உள்ளெல்லாம் ஒரே வெளிச்சமாய் இருந்தது. எது வாசல்புறம், எது பின்புறம் என்று தெரியாதபடி எந்தப் பக்கம் பார்த்தாலும் ஒரே மாதிரியாக இருந்தது.

ஜக்குவே திகைத்தான். எப்படித்தான் அவன் நேற்றுச் சரியான வழியில் போனானோ என்று அவனுக்கு ஆச்சரியமாய் இருந்தது. ஜன்னலுக்கு மேலே இருந்த கத்திகளைப் பார்த்தான். அவை அப்படியே இருந்தன. நந்துவுக்கு எல்லாமே கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டதுபோல் இருந்தது. ஆனால் அவன் ஒன்றுக்கும் கவலையே படவில்லை. ஜக்கு அவனை அருகில் வரும்படி ஜாடை காட்டினான். பையில் இருந்த ஒரு பொட்டலத்தைப் பிரித்து எடுத்தான். வர்ணப் பொடி! அடுத்த ஐந்து நிமிஷத்தில் நந்துவுக்கு 'மேக்கப்' ஆகிவிட்டது. கண்ணாடியில் அவனே பார்த்துக்கொண்டால் கூட நந்துவுக்குத் தன்னை அடையாளம் தெரியாது. பட்டிக்காட்டுச் சிறுவனுடைய நிறம்; பரட்டைத் தலை.

“டேய், பலே ஜோராய்ப் போயிட்டுதடா!” என்று நந்துவின் கையைப் பிடித்துக் கொண்டு மாடியில் தாவி ஏறினான் ஜக்கு.

“இங்கேயே நில்லு! நடுவில் அணில் கத்தினால் உடனே உள்ளே ஓடி வா. பேசாமல் இருந்துடாதே” என்றான் ஜக்கு.

“அதுவா, எங்க வீட்டிலே வேப்பம்பூ ரஸத்துக்கு அம்மா உப்பே போடல்லேடா. அதனாலே நான் சரியாகச் சாப்பிடல்லே. பசிக்கிறது” என்றான் நந்து.

“ஓகோ - நீதான் அதிர்வேட்டுச் செவிடாச்சே! மறந்தே போயிட்டேனே. அணில் கத்தினால் உன் காதிலே விழாதே. அப்போ ஒண்ணு செய்!” என்று சொல்லிவிட்டு, ஜாடையில், “இங்கேயே நில்லு. யாரானும் வருவதுமாதிரி இருந்தால் உள்ளே ஓடிவந்து சொல்லு” என்று குறிப்பிட்டான்.

“ஜாடையாகச் சொன்னது புரிஞ்சுதாடா? இப்பமட்டும் கேட்டதுக்குப் பதில் சொல்லிடுடா?” என்று வாயால் வேறு கேட்டான்.

நந்து தலையை ஆட்டினான். பிறகு ஜக்கு முதல் நாள் நின்ற இடத்தில் போய் நின்றுகொண்டான். ஜக்கு முன்பு கிடைத்த சாவிக் கொத்தை எடுத்துக்கொண்டு உள்ளே போனான்.

விசாலமான கூடம். வழுவழுப்பான சிமெண்டுத் தரை. நாலுபுறமும் அறைகள். ஓர் அறையைத் தவிர எல்லாம் திறந்தே கிடந்தன. ஜக்கு அருகில் போய் அந்த அறையின் பூட்டைக் கவனித்தான். உத்தேசமாய் இரண்டு மூன்று சாவிகளைப் போட்டுப் பார்த்தான். ஒரு சாவி சரியாக இருந்தது. ஜக்கு உள்ளே காலெடுத்து வைத்தான்.

அடுத்த கணம், 'வீல்' என்று கத்திவிட்டான். நடுவே ஒரு பெரிய மனிதன் கையையும் காலையும் விரித்துக்கொண்டு தலைவிரி கோலமாய் விழுந்து கிடந்தான். கழுத்தில் ரத்தச் சிவப்பு!

இந்தக் காட்சியைக் கண்டதும் ஜக்குவின் கால்கள் பின் வாங்கின. படேலென்று முன்பிருந்தபடியே கதவைச் சாத்திவிட்டான். அவன் நெஞ்சு படபடவென்று அடித்துக்கொண்டது. உலகமே கிர் கிர்ரென்று தலைகீழாகச் சுழலுவதுபோல இருந்தது அவனுக்கு. வாயைத் திறந்து நந்துவைக் கூப்பிடலாம் என்றால் குரலே எழும்பவில்லை. 'ஏதோ பெரிய ஆபத்தில் வந்து தெரியாத்தனமாய் மாட்டிக்கொண்டுவிட்டோம்' என்ற ஒரு நினைவைத் தவிர அவனுக்கு வேறு எதுவுமே தோன்றவில்லை. நெஞ்சு 'திக் திக்' கென்று அடித்துக்கொண்டதா, 'ஆபத்து ஆபத்து' என்று அடித்துக்கொண்டதா?

அவன் இப்படி ஏதாவது ஏற்படும் என்று எண்ணிப் பார்த்திருந்தால் அந்தத் திக்குக்கே ஒரு சலாம் போட்டிருப்பான். யாருக்குத் தெரியும்?

எப்படியோ தன்னைச் சமாளித்துக்கொண்டு அவன் வெளியே வர முயன்றான். ஆனால் அவன் போய்ச் சேர்ந்தது அடுத்த அறை. அங்கே போய் ஒரு கதவு மூலையில் ஒண்டிக்கொண்டான். படிக்கட்டுக்குப் போகவும் பயமாய் இருந்தது. நந்துவைக் கூப்பிடவும் குரல் எழும்பவில்லை. இன்னொரு வேதனை என்னவென்றால், இரைந்து கூப்பிட்டாலும் நந்து வரமாட்டான்!

தரையில் ஒரு பெரிய ஜமக்காளம் கிடந்தது. அங்கங்கே ரத்தக் கறைமாதிரி சிவப்பாய்த் தெரிந்தது. ஜக்குவின் கண்களில் இது பட்டதும் அவன் கண்களை இறுக மூடிக்கொண்டான்.

"செங்கழுநீர்ப் பிள்ளையாரே - பன்னிரண்டு தேங்காய் உடைக்கிறேன். என்னை எப்படியாவது காப்பாற்றி விடேன்" என்றுகூட அவனால் வேண்டிக்கொள்ள முடியவில்லை.

எங்கிருந்தோ, "மியாவ்" என்ற சத்தம் ஒன்று காதில் விழுந்தது. அவ்வளவுதான் தெரியும் ஜக்குவுக்கு! அடுத்த கணம் சுவரில் முகத்தைக் கவிழ்த்து மூடிக்கொண்டுவிட்டான்.

காதருகில் அவன் கைக் கடிகாரம், 'டிக் - டிக்' என்று ஒலித்தது, பெரிய சம்மட்டிகொண்டு அடிப்பதுபோல் இருந்தது. (தொடரும்)

காட்டு வீடு

தி. ஜ. ர.

பஞ்சவர்ணத்துக்குத் தீபாவளி என்றாலே வெகு குஷி. பக்கத்தில் உள்ள பட்டணத்துக்குப் போவான். பட்டாசுக் கட்டு, வாணமெல்லாம் வாங்கிவருவான். உள்ளூர்ச் செட்டியார் கடையிலே வாங்கமாட்டான். அவர் பெரிய கஞ்சன்; எல்லா வாணமும் கிராக்கியாய் விற்பார். இது அவனுக்குத் தெரியும். இந்த வருஷமும் பஞ்சவர்ணம் பட்டணத்துக்கே போனான். அவனுக்கு ஸைக்கிள் விடத் தெரியும். அதிலேதான் போனான்.

பட்டணத்திலே எத்தனையோ வாணக்கடைகள். கடைக்குக் கடை போனான் பஞ்சவர்ணம். எலக்ட்ரிக் பட்டாசு, ஊசி சரம், ஆகாச வாணம், பூமத்தாப்பு, கம்பி மத்தாப்பு, பாம்பு வாணம், மிதக்கும் பூ, உலக்கை வெடி மருந்து, அது - இது, இது-அது என்று என்ன என்னவோ வாங்கினான். கட்டினான் ஐயா ஒரு பெரிய மூட்டை. அதை ஸைக்கிளிலே வைத்து முடிந்தான். தானும் ஏறி உட்காரப் போனான். எல்லாரையும் போல அவன் ஸைக்கிள் ஏறுவதில்லை. ஸர்க்கஸ்காரன் மாதிரி 'ஜம்ப்' பண்ணித்தான் ஏறுவான்.

இவன் 'ஜம்ப்' பண்ணினான். ஸைக்கிள் 'புஸ்' பண்ணிவிட்டது. அதன் டயரில் இருந்த காற்றுப் போய்விட்டது. இவன் விறுக்கு, விறுக்கு, விறுக்கு என்று காற்றடைத்தான்; மூச்சைப் பிடித்துக்கொண்டுதான் பம்பை அடித்தான். காற்று ஏறவே இல்லை. 'வால்வு டியூபை'க் கழற்றிப் பார்த்தான். அது சரியாகவே இருந்தது. ஸைக்கிள் டயர் 'பங்சர்' ஆகிவிட்டது. காற்று எப்

படி ஏறும்? 'அட தேவுடா!' என்று ஸைக்கிள் கடையைத் தேடிக்கொண்டு போனான். அங்கே ரிப்பேரெல்லாம் பார்த்து முடிய வெகு நேரம் ஆகிவிட்டது. அஸ்தமன சமயம்: இருந்தாலும் ராத்திரியே ஊர் போய்ச்சேர வேண்டும் என்று பஞ்சவர்ணம் கிளம்பினான். வெகு வேகமாக ஸைக்கிளை விட்டான்.

ஊருக்கு வருகிற வழியிலே ஒரு காடு உண்டு. அதன் கிட்ட வந்தான் பஞ்சவர்ணம். 'சோ' என்று மழை பிடித்துக்கொண்டது. வானம் கன்னங்கறேல் என்று கறுத்துவிட்டது. ஒரே மின்னலும் இடியும் வழியெல்லாம் வெள்ளக்காடாயிற்று; முன்னே பார்த்தால் இருட்டு; பின்னே பார்த்தால் இருட்டு; வழியே தெரியவில்லை.

'என்னடா செய்வது?' என்று பஞ்சவர்ணம் யோசித்தான். 'எப்படி ஊர்போய்ச் சேர்வது?' என்றுகூட அவனுக்கு அதிகக் கவலை இல்லை. 'பட்டாசு, வாணமெல்லாம் ஈரம் பட்டு வீணாகிவிடுமே!' என்றுதான் பெருங்கவலை.

கீழே இறங்கினான். ஸைக்கிளைத் தள்ளிக்கொண்டே நடந்தான். 'எங்கேயாவது மரம் இருந்தால், அதன் கீழ் ஒண்டலாம்' என்று எண்ணினான். மின்னல் வெளிச்சத்தில் புதர்கள்தான் தெரிந்தன; மரமே தெரியவில்லை. வழி தடுமாறி விட்டது. காட்டுக்குள் எங்கேயோ போய்விட்டான்.

அப்போது பளிச்சென்று மின்னியது. ஒரு வீடு தெரிந்தது. காட்டுக்குள்ளே வீடு!

'யார் வீடாயிருந்தாலும் சரி, கதவைத் தட்டிப் பார்க்கலாம்' என்று எண்ணினான். நிலைப்படியண்டை போனான். சாவித்துவாரத்தில் காதை வைத்து உற்றுக் கேட்டான். உள்ளே ஒரு சத்தமும் இல்லை.

"ஐயா" என்று கூப்பிட்டான். பதில் இல்லை. படபட என்று கதவைத் தட்டினான்.

'கட கடா, குடு குடு' என்று ஒரு சத்தம் வந்தது. 'உர்ர்ர்! உர்ர்ர்!' என்று ஒரு குரல் எழுந்தது. ஆனால் கதவு மட்டும் திறக்கவில்லை.

மறுபடியும் தட்டினான் இவன்.

"யாரடா அவன்? ஐயோ! ஐயோ! திருடன்!" என்று கீச்சுக் குரல் வந்தது. பெண் குரல் என்று தோன்றியது.

'இதென்னடா தொல்லை! ஒண்டவந்த இடத்தில் திருடன் என்ற பட்டம் கிடைக்கிறது!' என்று திகைத்தான் பஞ்சவர்ணம்.

வெளியிலோ மழை கொட்டுகிறது. வாணமெல்லாம் நனைகிறது. 'வந்தது வரட்டும்' என்று மறுபடியும் தட்டினான்.

'டமார்! டமார்!' என்று உள்ளிருந்து சத்தம் வந்தது. "திருட்டுப் பயலே! யாரடா

அவன்? உதைப்பேன்! அடிப்பேன்! அடே, பால்கொண்டா பழங்கொண்டா!" என்று மறுபடியும் குரல் வந்தது.

பஞ்சவர்ணத்துக்கு ஒன்றும் புரியவில்லை. "என்னிடம் பட்டாசுதான் இருக்கிறது. வேணுமானால் வாங்கிக்கொள். கதவைத் திற" என்று கத்திப் பார்த்தான்.

அப்படியும் கதவு திறக்கவில்லை. இப்போது சத்தமும் இல்லை.

'என்னடா இது! ஏதாவது

பேய் பிசாசாக இருக்குமோ!' என்று இவன் எண்ணினான்.

படார், படார் என்று மறுபடியும் பலங்கொண்டமட்டும் கதவைத் தட்டினான். அப்போதும் வசவுதான் கிடைத்தது: 'திருட்டுப் பயலே! அவனே! இவனே!'

பஞ்சவர்ணம் மலைத்து அப்படியே நின்றுவிட்டான்.

அப்போது கொஞ்ச தூரத்தில் ஒரு லாந்தர் வெளிச்சம் தெரிந்தது. அது இந்த வீட்டை நோக்கி வந்தது.

'இந்த வீட்டுக்காரரோ? நாம் நிற்பதா, ஓடுவதா?' என்று யோசித்தான் பஞ்சவர்ணம்.

இவன் முடிவு செய்யுமுன் அவர் வந்துவிட்டார். "யாரப்பா நீ?" என்று இவனைக் கேட்டார்.

"பட்டாசு வாங்கப் பட்டணம் போனேன். திரும்பி வரும்போது மழை பிடித்துக் கொண்டது. வழி தவறி இங்கே வந்தேன்" என்றான் பஞ்சவர்ணம்.

"ஐயோ பாவம்!" என்று சாவியால் கதவைத் திறந்தார்.

'இவர்தான் பூட்டிச் சென்றாரா? பூட்டிய வீட்டுக்குள் பேச்சுக் குரல் கேட்டதே! எப்படி? இவர் ஒரு மந்திரவாதியோ? உள்ளே பிசாசுகள் இருக்குமோ?' என்றெல்லாம் இவன் எண்ணினான்.

கதவைத் திறந்ததும், "வா தம்பீ" என்று இவனை அவர் உள்ளே அழைத்தார்.

'என்ன நடந்தாலும் சரி' என்று இவன் தைரியமாக உள்ளே போனான்.

அங்கே போனால் என்ன வேடிக்கை! 'கிக் கிக்' என்று சந்தோஷக் கூச்சலிட்டது ஒரு குரங்கு. 'பாலு கொண்டா! பழங் கொண்டா!' என்று கூண்டிலே யிருந்து ஒரு கிளி கத்தியது. குரங்கின் பக்கத்திலே ஒரு டமாரம் இருந்தது. 'ஓஹோ! இந்த இரண்டுந்தான் அந்தப் பாடு படுத்திவிட்டன' என்று பஞ்சவர்ணம் தெரிந்து கொண்டான்.

வீட்டுக்காரர் இவனுக்குப் பழமும் பாலும் கொடுத்து உபசரித்தார்.

"ஐயா, தாங்கள் யார்? இந்தக் காட்டிலே ஏன் இருக்கிறீர்கள்?" என்று கேட்டான்.

"நான் ஒரு துறவி. தனியே இருந்து தவம் செய்கிறேன். பொழுது போக்காக இந்தக் கிளியையும் குரங்கையும் வளர்க்கிறேன்" என்றார் அவர்.

ராத்திரி அங்கே தங்கினான் பஞ்சவர்ணம். காலையில் அவருக்கு வந்தனம் செலுத்தி விட்டு, ஊருக்குப் போய்ச் சேர்ந்தான். தன்னைத் 'திருடன்! திருடன்!' என்று அந்தக் கிளி திட்டியதே, அதை இப்போது நினைத்துக்கொண்டாலும் அவனுக்கு ஒரே சிரிப்பாய் வருகிறது.

க்விஸ்

1. நீ சென்னையிலிருந்து பம்பாய்க்கு விமானத்தில் போகிறாய். நடுவில் எந்த எந்த ராஜ்யங்களைத் தாண்டிப் போவாய்?

2. இந்த முதலடியுள்ள பாட்டுக்களைப் பாடியவர் யார்?

(அ) வாக்குண்டாம் (ஆ) உலகம் யாவையும் தாமுள வாக்கலும் (இ) பார்த்துப் பிழையுங்கள் (ஈ) எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி (உ) கத்தியின்றி (ஊ) பாட்டுக்கொரு புலவன் (எ) அப்பா, இதென்ன அதிகாரம் (ஏ) நடமாடித் திரியும்.

3. கடிகாரத்தில் சின்ன முள் பெரிய முள்ளுக்கு மேலே இருக்கிறதா? கீழேயா?

4. நமது கொடியில் உள்ள அசோக சக்கரத்தில் எவ்வளவு ஆரங்கள் மொத்தம்?

5. ஸ்டாண்டர்டு டைப் அடிக்கும் யந்திரத்தில் மொத்தம் எவ்வளவு 'கீ' இருக்கின்றன?

6. கோழிக்குஞ்சுக்கு எவ்வளவு விரல்கள்?

7. லாவகம். லாகவம் இந்த இரண்டில் எது சரியான வார்த்தை?

8. பால் வெண்ணெயைவிடக் கனமானது. சரியா, தப்பா?

9. காவிரிக்குக் கரை கட்டின அரசன் இவர்களில் யார்?

(அ) கங்கைகொண்ட சோழன்
(ஆ) கரிகாற்சோழன்
(இ) சேரன் செங்குட்டுவன்
(ஈ) நெடுஞ்செழியன்

10. தான் ஒரு மதமும் தன் மனைவி ஒரு மதமுமாய் இருந்த அரசன் யார்?

கூன்பாண்டியன், விக்கிரம சோழன்; மகேந்திரவர்மன்.

11. மோட்டார் காரை நிதானமாக ஓட்டுவதைவிட வேகமாக ஓட்டும்போது அதிகப் பெட்ரோல் செலவாகாது. சரியா, தப்பா?

12. அதிராம்பட்டணம் ஒரு கடற்கரை நகரம். சரியா, தவறு?

---

(1) ஹைதராபாத். (2) (அ) ஔவையார் (ஆ) கம்பர் (இ) கோ. கி. பாரதியார் (ஈ) கவி சுப்பிரமணிய பாரதியார் (உ) நாமக்கல் வெ. ராமலிங்கம்பிள்ளை (ஊ) கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை (எ) வேதநாயகம்பிள்ளை (ஏ) பாபநாச முதலியார். (3) சின்ன முள் கீழே இருக்கிறது. (4) 24 ஆரங்கள். (5) 42 'கீ.' (6) 4 விரல்கள். (7) லாகவம். (8) சரி. (9) கரிகாற்சோழன். (10) கூன்பாண்டியன். இவன் ஜைன மதத்தைச் சேர்ந்தவன். இவன் மனைவி மங்கையர்க்கரசி சைவமதத்தைச் சேர்ந்தவள். (11) தவறு. அதிகமாக ஆகும். (12) தவறு.

கங்கா ஸ்நானமாச்சுதா?

'சுரபி'

ஸ்நானமாச்சுதா - கங்கா
ஸ்நான மாச்சுதா
தம்பிதங்கை மாரேகங்கா ஸ்நான மாச்சுதா?

பவுனு கெடச்சுதா - சிலுக்கு
கவுனு கெடச்சுதா
பங்களூரு பாவாடைக்குப் பவனி ஆச்சுதா?

பட்டுக் கெடச்சுதா - புஷ்ஷு
ஷர்ட்டுக் கெடச்சுதா
பாக்கெட்டிலே போட்டகையெத் தூக்கி யாச்சுதா?

தோசை ஆச்சுதா - இட்லி
ஆசை போச்சுதா?
தொன்னைநெறையச் சீனிநெய்யுங் காலி ஆச்சுதா?

பாலுபர்பி அல்வாமைசூர்ப்
பாகு புடிச்சுதா?
பாடுபட்டு எடுத்ததுஞ்சா லாடு செரிச்சுதா?

காராபூந்தி சேவுமுறுக்கு
கடிச்சி ஆச்சுதா?
கைபொறுக்கக் காபி ஆத்திக் குடிச்சி ஆச்சுதா?

ஆனை வெடி பானை வெடி
அடுக்குப் பட்டாசு
ஆட்டம் பாமு அதிநவேட்டு போட்டு ஆச்சுதா?



அப்பாவோட காது ரெண்டும்
செவிடு ஆச்சுதா
அம்மாசேர்த்து வச்சகாசு அவுட்டு ஆச்சுதா?

அண்டை வீட்டு மாமியோடே
சண்டை ஆச்சுதா
அத்தைப் பாட்டி கத்துதெல்லாம் ஏசி ஆச்சுதா?

பக்கத்தூட்டுக் கூரைமேலே
பாணம் பாஞ்சுதா
பாக்கவந்த மூக்கன்தலையில் பழி வெடிஞ்சுதா?

அம்பியோட கம்பி வத்தி
அபேசாச்சுதா
அசட்டுமீனு ஒளிச்சகட்டு திருட்டுப் போச்சுதா?

அக்காஜடையெ அத்தான்மடியில்
முடிஞ்சி ஆச்சுதா
அவுட்டு போட்டு ரகசியத்தைக் கெளப்பியாச்சுதா?

செவிட்டுப் பஞ்சு காதில் வெடியெத்
தீர்த்து ஆச்சுதா
சிரிப்பெப்பார்த்து அவனுஞ்சேர்ந்து சிரிச்சி ஆச்சுதா?

கழுதை வாலில் கட்டெக் கொளுத்திக்
கணைச்சி ஆச்சுதா
கையெப்பார்த்துத் துடிச்சிப்பாடம் படிச்சி ஆச்சுதா?

ஆட்டமெல்லாம் அடங்கி ஒடுங்கி
அமர்ந்து ஆச்சுதா
அடுத்ததீவ ளிக்குத்திட்டம் அடுக்கி ஆச்சுதா?

குதிச்சிஓடிக் கண்ணன்மலரைப்
படிச்சி ஆச்சுதா
கொழந்தையெல்லாங் கூட்டிவச்சிக் கொஞ்சி
ஆச்சுதா?

ஸ்நான மாச்சுதா - கங்கா
ஸ்நான மாச்சுதா?

தனரேகை

எம். எஸ். ராஜேசுவரி

ஒரு தேசத்தை ஓர் அரசன் ஆண்டு வந்தான். அவன் தாராள சிந்தையும் ஆடம்பரங்களில் அதிகப் பிரியமும் உள்ளவன். அரசனுக்குப் பிறந்த நாள் கொண்டாட்டம் நடந்தது. அனறைததினம அவன் எல்லாருக்கும தான தருமங்கள் செய்து, சாப்பாடு போட்டான. அச்சமயம், ஓர் எளிய பிராமணன் தானம் வாங்க அரச சபைக்கு வந்தான்.

அரசன கொடுதத விலை உயர்ந்த பொருளையெல்லாம், வேண்டாமென்று மறுதத பிராமணன, "அரசே, எனக்கு இரண்டணா நாணயம் மட்டும் கொடுங்கள், போதும். ஆனால், அது நீங்களாகவே சமபாதிதத தாக இருக்க வேண்டும" என்று கூறினான்.

அரசன் யோசித்தான். எல்லாப் பணமும் சொத்துக்களும் பொது ஜனங்கள் வரி செலுத்தியவை. சிற்றரசர்கள் கப்பங் கட்டியவை. அரசனுகச் சிரமப்பட்டுச் சம்பாதித்தது சலலிக காசு கூட இலலை. ஆகவே மறு நாள் கொடுப்பதாகக் கூறி அவன் பிராமணனை அனுப்பினான்.

அன்றிரவு அரசனும் மந்திரியும் மாறுவேடம் பூண்டு, நகர் சுற்றக கிளம்பினார்கள். வேலை ஏதாவது கிடைக்குமா என்று பார்த்துக் கொண்டே போனார்கள். தொழிலாளிகள் வசிக்கும் தெருவில ஒரு கருமான் பட்டறை திறந்திருந்தது. ஒரு கருமான் இருமபுகளை நெருப்பில் இளகுவததுச் சமமட்டியால் அடிததுக்





கொண்டிருப்பதை அரசன் பார்த்தான. இருவரும் அங்கே போய், கருமானிடம் ஏதாவது வேலை கொடுக்கும்படி கெஞ்சினார்கள்.

அவசர வேலையானதனால், இரும்பைக் காய்ச்சி அடிக்கும்படியும், விடியும் வரையில் செய்தால் இரண்டணாத தருவதாகவும கருமான் கூறினான். அரசன ஒப்புக்கொண்டான். சிரமம் என்பதையே அறியாது வளர்ந்த அரசனுககு, இந்த முரடடு வேலை எவ்வளவு கடினமாக இருந்திருக்கும்! பிராமணனுக்குக் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற வேண்டி, தானே வேரததுக் களைத்துச் சிரமப்பட்டு, ஒருவாறு விடியுமுன் வேலையை முடித்து, கூலி இரண்டணாவைப்பெறறான்.

மறுநாள் சபைக்குப் பிராமணன் வந்தான். அரசன் தானே சம்பாதித்ததாகக் கூறி இரண்டணாவைப் பிராமணனிடம் அளித்தான. மகிழ்வுடன் அதைப் பெற்றுக்கொண்ட பிராமணன், "அரசே, நான் இப்படிக்



போதும்'' என்று கூறி அரசனை வாழ்த்திவிட்டுச் சென்றான்.

சமயம் பார்த்து மந்திரியும், "அரசே, இந்த இரண்டணாக் காசு சம்பாதிக்க இரவு முழுதும், உடல் நோக வேலை செய்தீர்கள். பொது ஜனங்கள் எவ்வளவு கஷ்டப்பட்டுச் சம்பாதித்து வரி செலுத்துகிறார்கள்? அந்தப் பணத்தைக் குடிஜனங்கள் நன்மைக்காகவேதான் செலவிட வேண்டும்.

கேட்ட காரணத்தை அறிய ஆவலாக இருப்பீர்கள். சொல்கிறேன். கேளுங்கள்!

"உங்கள் கையில் தன ரேகை இருக்கிறது. உங்கள் கையால், நீங்களாகச் சம்பாதித்துக் கொடுத்த பணத்தை வாங்கினால், அது எனக்கு என்றைக்கும் கிடைத்துக்கொண்டிருக்கும். நான் பேராசைக்காரன் அல்ல. ஒரு நாளைக்கு எனக்குச் செலவுக்கான பணம் இரண்டணா. உங்கள் கையால் அதை வாங்கியதால், என் ஜீவிய பரியந்தம் தினம் இரண்டணா எப்படியாவது எனக்குக் கிடைத்துவிடும். அது எனக்குப்

அதைச் செய்யாமல் ஆடம்பரங்களில் விநியோகித்தால் கடவுளுக்கே பொறுக்காது'' என்றான்.

அன்று முதல் அரசனும் அநாவசியமாகச் செலவழிக்காமல் ஜனங்களுக்குப் பல வித நன்மைகள் செய்தான்.

பத்திரிகையில் ஒரு விளம்பரம்: என் கெட்டுப்போன மணிபர்ஸை யார் எடுத்தது என்று எனக்குத் தெரியும். அவன் உடனே அதை மரியாதையாக என்னிடம் கொண்டு சேர்க்கவேண்டும்.

பதில் விளம்பரம்: உங்களுக்கு அப்படித் தெரிந்த நானே பர்ஸை வைத்திருக்கிறேன். நேரில் வந்து வாங்கிக்கொண்டு போகலாம்.



'ஜூ'வில் ஒரு நாள்

இப்படித் திரும்பினால் புலி; அப்படித் திரும்பினால் சிங்கம்; அதோ கரடி: இதோ யானை; கறுப்பும் வெளுப்பும் கலந்த வரிக் கழுதை ஒரு புறம், கழுத்தை நீட்டி எட்டிப் பார்க்கும் ஒட்டைச் சிவிங்கி மற்றொரு புறம், அழகான புள்ளி மான்கள் இங்கே, கலைமான்கள் அங்கே - இப்படி எங்களைச் சுற்றி எங்கே பார்த்தாலும் ஒரே வன விலங்குகளாக இருந்தன. ஆனால் நாங்கள் கொஞ்சங்கூடப் பயப்படவே இல்லை! எதற்காகப் பயப்படுகிறது? அவைகள் நம்மை என்ன செய்துவிட முடியும்?

நீங்கள் நம்பமாட்டேன் என்கிறீர்கள், இல்லையா? அப்படியானால் எங்களோடு வாருங்கள். இது எந்த இடம் தெரிகிறதா? உயிர்க் காலேஜ் அல்லது மிருகக் காட்சிசாலை என்று கேள்விப்பட்டிருக்கிறீர்களா? அதைத்தான் ஆங்கிலத்தில் 'ஜூ' (Zoo) என்பார்கள்! அந்த இடந்தான் இது! இங்கேதான் அவ்வளவு பயங்கர மிருகங்களும் இருக்கின்றன. அவற்றை நாங்கள் வெகு அருகில் நின்று பார்த்தோம். அவைகளும் எங்களைப் பார்த்தன. அப்படியிருந்தும் நாங்கள் பயப்படவே இல்லை.

"ஏ புலியே, இப்படி இந்தப் பக்கம் திரும்பு!" என்றோம்.

புலி தன் நீண்ட உடம்பை ஒரு வளைவு வளைத்துக்கொண்டு உடனே இந்தப் பக்கம் திரும்பியது. நாங்கள் சந்தோஷப்பட்டோம். ஆனால் அடுத்த கணம் அது பரம சாதுவாகப் படுத்துக்கொண்டுவிட்டது. எங்களைப் பார்த்துக் கொட்டாவிவிட்டது.

அது பார்த்த பார்வை! 'என்னை மட்டும் இந்தப் பெரிய கூண்டினுள் அடைக்காமல் இருக்கவேண்டும். அப்புறம் என்



சொரூபத்தைப் பார்க்கவேண்டும்! ஹூம், அதைச் சொல்லி என்ன பிரயோஜனம்!' என்று சொல்வதுபோல் இருந்தது அந்தப் பார்வை.

நாங்கள் உடனே அதை அதிகாரம் செய்வதை விட்டு, "புலியே! புலியே! தயவுசெய்து கொஞ்சம் முன்னால் வா! ஒரே ஒரு போட்டோ!" என்று கெஞ்சினோம். 'கண்ணன் பத்திரிகையில் உன் படத்தைப் போடுகிறோம். ஆயிரக்கணக்கான குழந்தைகள் உன்னைப் பார்த்துச் சந்தோஷப்படுவார்கள்!" என்று கூத்தாடினோம். கேட்டால்தானே? அதோ அது முதல் படத்தில் படுத்துக்கொண்டு பார்ப்பதைப் பாருங்களேன்! 'ஹூங்' என்று அது உறுமியதே தவிர எழுந்திருக்கவில்லை.

இதற்குள் இடி போன்று இன்னொரு மூலையில் ஒரு பெரிய கர்ஜனை கேட்டது. எங்களுக்குத் தூக்கிவாரிப் போட்டது. ஆனால் நாங்கள் பயப்படவில்லை. "ஓகோ, சிங்கமா?" என்று கேட்டுக்கொண்டே அங்கே போனோம். அங்கே ஒரு பெண் சிங்கம். பக்கத்தில் இரண்டு மாதங்கள்கூட ஆகாத இரண்டு அழகான சிங்கக் குட்டிகள். ஓடிப் போய் அவைகளைத் தூக்கிக் கொண்டு விடுவோமா என்று





நினைத்தோம். அப்புறந்தான் நடுவிலே கூண்டுக் கம்பியும் பயங்கரமாய் விழித்துக்கொண்டு உறுமும் பெண் சிங்கமும் இருப்பது ஞாபகத்துக்கு வந்தது. காட்சிச்சாலை அதிகாரி ஒருவர், "இப்படி வாருங்கள், அந்தக் குட்டிகளைத் தனியாகக் கொண்டுவருகிறேன்" என்று எங்களை அழைத்துப் போனார். ஒவ்வொரு கூண்டையும் இரண்டு அறைகளாகத் தடுத்திருந்தார்கள். ஒன்றிலிருந்து மற்றோர் அறைக்குப் போக ஒரு கூண்டுக் கதவு இருக்கிறது. அதைக் கொஞ்சம் தூக்கியதும் அந்தக் குட்டிகள் இரண்டும் அடுத்த அறைக்குள் நுழைந்துவிட்டன. பெரிய சிங்கம் நுழைய முடியாதபடி கூண்டுக் கதவைச் சிறிதுதான் தூக்கினார் அவர். மறுபடியும் அதைக் கீழே விட்டுவிட்டார். பெண் சிங்கம் இதைக் கண்டதும் என்ன பாடு படுத்திவிட்டது, தெரியுமா? அதை நினைத்தாலே, பயமாய் இல்லை, பகீர் பகீர் என்றுதான் இருக்கிறது! கம்பியில் வந்து மோதிற்று. பெரிய பற்களால் கம்பிகளைப் பிடித்துக் கடிக்க வந்தது. அந்த அதிகாரியை ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து அடித்துவிடுவதுபோலப் பார்த்தது. கர்ஜித்தது. அப்படியும் இப்படியும் சுற்றிச் சுற்றி வந்து தரையைக் கீறிற்று. அந்த அதிகாரி அந்தச் சிங்கக்குட்டிகளைக் கைகளால் பிடித்துத் தூக்கி வந்தார். அப்பப்பா! மூளைச்சு இரண்டு





மாதம் ஆவதற்குள் அவை படுத்துகிற பாடு! நகத்தால் பிருண்டித் தள்ளிவிட்டன. வாயை வாயைப் பிளந்தன. அப்படியே டபக் கென்று நாங்கள் ஒரு போட்டோ பிடித்துவிட்டோம். சிங்கம் உறுமிக்கொண்டு எதிரே நிற்பதைப் பாருங்கள்! உங்களுக்குப் பயமாகத்தானே இருக்கிறது!



இந்தச் சமயத்தில் கடகடவென்று வண்டி வருகிற சத்தம் கேட்டது. அந்த அதிகாரி பழையபடி கூட்டுக்குள் சிங்கக் குட்டியை அனுப்பி விட்டு, "ஜல்தியாக வாருங்கள். இப்பொழுது எல்லா மிருகங்களும் எழுந்து நிற்கும். அந்தப் புலியார்கூட எழுந்து முன்னால் வந்துவிடுவார்!" என்றார்.

"ஆமாம், அந்த வண்டியைக் கண்டதும் எழுந்திருப்பானேன்?"

"மூக்கைத் துளைக்கும் வாசனையுடன் சாப்பாடு வரும்போது எழுந்திருக்காமல் யார்தான் இருப்பார்கள்?"

நாங்கள் அந்தப் புலிக் கூண்டை அடைந்தோம். அவர்



சொன்னது சரிதான். புலியார் முன்னால் அருகில் வந்து நின்றார். 'கிளிக்' என்று ஒரு 'ஷாட்!' தீர்ந்தது வேலை.

மூக்கைத் துளைக்கும் வாசனை என்று சொன்னேனே. ஆமாம், நாற்றம் மூக்கைத்தான் துளைத்துவிடும். தினம் ஓர் ஆடு குளோஸ் ஆனால் நாற்றம் அடிக்காமல் என்ன செய்யும்? எவ்வளவுதான் தினம் கழுவிவிட்

டாலும் நாற்றம் எங்களுக்குக் குடலைப் பிடுங்கி எடுத்து விட்டது.

அப்புறம் எங்களைப் பார்த்து யாரோ சிரிப்பதுபோலச் சத்தம் கேட்டது. திரும்பி அந்தப் பக்கம் போனோம். 'ஙங லங!' என்று ஸ்ரீமான் வரிக் குதிரையார் கனைத்தார். 'கறுப்பு உடம்பில் வெள்ளைக் கோடா? வெள்ளை உடம்பில் கறுப்புக் கோடா?'' என்று நாங்கள் விவாதித்தோம். ''இரண்டும் சொல்லலாம்'' என்ற முடிவுக்குத்தான் நாங்கள் வரவேண்டியதாயிற்று.



''வாங்கோ, வாங்கோ'' என்று அந்தப் பக்கத்தில் உயரமாய் ஒரு கழுத்தும் தலையும் தெரிந்தன. ஒட்டகத்தைத் தவிர வேறு





யாருக்கு அப்படிப்பட்ட கழுத்து இருக்கப்போகிறது என்று அங்கே போனோம். "இதோ, எனக்கு அதைவிடப் பெரிய கழுத்து இருக்கிறதே!" என்று கூரைமேட்டை இடிக்க அசை போட்டுக்கொண்டிருந்தது ஒட்டைச்சிவிங்கி.

அதை ரொம்ப நாழிகை பார்க்கக் கழுத்து வலிக்கும் என்று கரடியார் இருக்கும் கூண்டுக்கு அருகில் வந்தோம். அதை அப்பொழுதுதான் உள்பக்கம் ஆகாரம் போடத் திறந்துவிட்டார்கள். வெளியே அல்ல; உள்ளுக்குள்ளேயேதான்! எதிர்த்தாற்போல் ஒரு பெரிய தொட்டி நிறைய ஜலம் இருந்தது. இது இவ்வளவு ஜலம் குடிக்குமா என்று ஆச்சரியப்பட்டுக்கொண்டிருந்தபோது அந்தக் கரடியார் உடனே அதில் விழுந்து உடம்பைச் சிலுப்புச் சிலுப்பிக்கொண்டு குளித்தார். அப்புறம் விசாரித்ததில் கரடியார் ரொம்ப ஆசாரக்காரர் என்பது தெரியவந்தது. முதல் காரியமாகக் குளித்துவிட்டுத்தான் அவர் ஆகாரத்தைக் கையால் தொடுவாராம். வாயால் லாவிப் பிடிப்பதற்குக் கூடத் தெரியும் என்பதுபோல நாங்கள் ஒரு வாழைப் பழத்தை விட்டெறிந்ததும் அவர் அதோ வாயைப் பிளக்கிறார், பாருங்கள்!





தூரத்திலிருந்து பார்க்கும்போதே அந்தப் புள்ளிமான்கள் ரொம்ப அழகாய் இருந்தன. "போட்டோவா பிடிக்கப்போறீங்க?" என்று மிரட்சியுடன் அதோ இன்னொரு மான் கூட்டம் நிற்பதைப் பாருங்கள். அந்த மிரண்ட பார்வையைத்தானே கவிகள் வர்ணிக்கிறார்கள். 'கிளிக்' என்ற சத்தம் கேட்டதும் ஒரு மான் 'லபக்'கென்று துள்ளி ஓடுகிறது.

அப்புறம் குரங்குகள் என்ன, முயல்கள், எலிமுயல்கள் என்ன, முதலைகள் என்ன, நரிகள் என்ன - எவ்வளவோ மிருகங்களைப் பார்த்துவிட்டு யானை நிற்கும் இடம் வந்தோம். "ஹல்லோ, குட் மார்னிங்! எங்களைத்தான் நேருஜி அமெரிக்காவுக்குப் போகச் சொல்லியிருக்கிறார்! நாங்கள் போய்விட்டு வருகிறோம். கண்ணன் படிக்கும் குழந்தைகள் ரொம்ப அதிருஷ்டசாலிகள் என்று அமெரிக்காவிலிருக்கும் குழந்தைகளிடம் சொல்கிறோம்" என்று துதிக்கையைத் தூக்கி அமெரிக்கா போகும் யானைக் குட்டிகளில் ஒன்று எங்களைப் பார்த்து ஒரு சல்யூட் அடித்தது. நாங்களும் பதிலுக்குச் சல்யூட் செய்துவிட்டு, பறவைகள், பட்சிகள், ஜெர்மனி தேசத்திலிருந்து வந்த அன்னப் பட்சிகள் முதலியவற்றைப் பார்க்க வேறு பக்கம் கிளம்பினோம்.





அம்புஜத்தின் தைரியம்

கி. வா. ஜகந்நாதன்

போன வருஷம்:

என் தங்கை அம்புஜத்துக்குப் பட்டாஸ் என்றால் திகில். நான் பட்டாஸைக் கொளுத்தி ஒரு செகண்ட் கையிலே வைத்திருக்கக் கூடாது. “போட்டுட்ரா, போட்டுட்ரா! கையிலே வெடிச்சுடப் போறது” என்று கத்துவாள். உடம்பையெல்லாம் அசைத்துக்கொண்டு குதிப்பாள். என் கையில் வெடித்தால் அவளுக்கு என்ன? பட்டாஸ் வீதியிலே வெடித்தால் அந்தச் சத்தம் கேட்டுக் கீச் என்று கத்துவாள். வெறும் மத்தாப்பு என்ன செய்யும்? அதை நான் கையில் பிடித்தால் அவளுக்குப் பயம். கொஞ்சம் கொஞ்சமாக மத்தாப்புப் பயத்தைப் போக்கினேன். ஒரு நீளமான கம்பி மத்தாப்பைக் கொளுத்தி என் கையிலே சிறிது நேரம் வைத்திருந்தேன். பிறகு அவன் கையிலே கொடுத்தேன். கையிலே வாங்கிக் கொண்டாளோ இல்லையோ வீல் என்று கத்திக்கொண்டே அதை வீசி எறிந்துவிட்டாள். நான் இடி இடி என்று சிரித்

தேன். "போ அண்ணு! எனக்குப் பயமாய் இருக்கு" என்று சொல்லிவிட்டு அவளும் சிரித்தாள்.

அவள் பயத்தை எப்படியாவது போக்கிவிடுகிறதென்று தீர்மானம் செய்துகொண்டேன். நான் மத்தாப்பைப் பிடிக்கும்போது என் பக்கத்தில் நிற்கச் சொன்னேன். பிறகு என் கையைப் பிடித்துக்கொள்ளச் சொன்னேன். பிடித்துக்கொண்டாள். ஆனல் அந்தக் கை எப்படி நடுங்கியது தெரியுமா? பிறகு அவள் கையில் மத்தாப்பைக் கொடுத்து நானும் பிடித்துக்கொண்டேன். அவள் விட்டுவிட்டாலும் நான் பிடித்துக்கொண்டேன். எப்படியோ அவளைப் பழக்கிவிட்டேன். மத்தாப்பைப் பிடிக்கக் கற்றுக்கொண்டாள். அதைச் சுழற்றி விளையாடவும் கொஞ்சம் தைரியம் வந்தது.

பட்டாஸ் விஷயத்தில் அவளுக்கு இருந்த பயத்தை எப்படிப் போக்குவது? அதுதான் தெரியவில்லை. ஒரு சின்ன ஊசிப் பட்டாஸை எடுத்து அதை ஓர் ஈர்க்குச்சியில் செருகி அவள் கையில் கொடுத்தேன். அவள் மடித்துக் கொள்ளவே மாட்டேன் என்ருள். நான் அதைப் பிடித்துக்கொண்டு வெடித்துக் காட்டினேன். ஊசிப் பட்டாஸே அவளுக்கு அணுக் குண்டுமாதிரி இருந்தால் எலெக்ட்ரிக் வெடியெல்லாம் அவள் எங்கே விடப் போகிருள்?

அவளுக்குப் பட்டாஸ் விடத் தைரியம் வரப் போகிறதில்லை என்று தீர்மானித்துக்கொண்டேன். ஆகவே, மத்தாப்பையெல்லாம் அவள் விடுகிறது, பட்டாஸெல்லாம் நான் கொளுத்துகிறது என்று திட்டம் செய்துகொண்டோம். அவள் வரவரத் தைரியமாக மத்தாப்பைக் கொளுத்தினுள்.



இந்த வருஷம் :

அப்பா மத்தாப்பு, பட்டாஸ் எல்லாம் வாங்கி வந்தார். இந்த வருஷமும் மத்தாப்பையெல்லாம் அம்புஜத்துக்குக் கொடுத்து விடுவது, பட்டாஸை நான் விடுகிறது என்று நினைத்தேன். ஆனால் இந்த வருஷம் எங்களுக்கு நிறையப் பட்டாஸ் பரிசு கிடைத்தது. யார் யாரோ வெடிகளும் பட்டாஸுகளும் வாங்கி வந்து கொடுத்தார்கள். கடைசியில் பட்டாஸ் அதிகமாகச் சேர்ந்துவிட்டது. மத்தாப்புக் கொஞ்சமாகத் தான் இருந்தது. பாவம்! அம்புஜத்துக்கு மனசு வருத்தமாக இருக்காதா? நான் அத்தனை பட்டாஸை விடுகிறபோது அவள் மாத்திரம் கொஞ்சம் மத்தாப்பை விட்டு விட்டுச் சும்மா உட்கார்ந்திருப்பதா?

"அம்புஜம், போன வருஷம் நீ குழந்தையாக இருந்தாய். இந்த வருஷம் பெரிய பெண் ஆகிவிட்டாய். ஆகையால் நீ இந்தத் தடவை பட்டாஸும் விடலாம். இதோ பார், இத்தனை பட்டாஸ் இருக்கிறதே. நான் மட்டும் விட்டால் சுவாரசியம் இல்லை. நீயும் சேர்ந்து விட்டால் வேடிக்கையாக இருக்கும்" என்றேன்.

அவள் அந்தப் பட்டாஸையெல்லாம் பார்த்தாள். விடலாம் என்ற ஆசை உண்டாயிற்று. சிறிது யோசித்தாள். "ஏன் யோசிக்கிருய்? அதோ அடுத்த வீட்டுக் கிருஷ்ணனைப் பார், உன்னைவிட எவ்வளவோ சின்னவன். அவன் ஒத்தை வெடி, ரெட்டை வெடியைக் கூடக் கையிலே பிடிக்கிறுன்" என்று சொன்னேன்.

அவளுக்குக் கொஞ்சம் தைரியம் பிறந்தது. "நான் பட்டாஸ் விடுவேன். ஆனால் நீ என் பக்கத்திலே நிற்க வேண்டும், என்னைத் தொட்டுக்கொண்டே இருக்கணும்" என்றுள்.



வாத்தியார்: உலகம் உருண்டையா?

பையன்: இல்லை.

வாத்தியார்: இல்லையா? சரி; தட்டையா?

பையன்: அதுவும் இல்லை.

வாத்தியார்: உருண்டையாகவும் இல்லை; தட்டையாகவும் இல்லை. பின் அது என்ன?

பையன்: கோணலாய் இருக்கு! எங்கப்பா ரொம்ப வக்கிரமா இருக்குன்னுதான் சார், சொல்ருர்.

கல்யாணமான தம்பதிக்குள் காரசாரமான விவாதம் நடந்தது. புருஷன் பார்த்தான்.

"இதோ பார், நீ சொல்வதெல்லாவற்றையும் யோசனை பண்ணிப் பார்த்தேன். உன் முடிவையே ஒப்புக்கொள்வதென்று தீர்மானித்துவிட்டேன்" என்றான்.

"இனிமேல் அதனால் என்ன பிரயோஜனம்? நான் என் முடிவை மாற்றிக்கொண்டுவிட்டேனே."

"அடி பைத்தியமே! இவ்வளவு பயமா? யாராவது பார்த்தால் சிரிப்பார்கள்! மைசூர்ப் பாகுக்கும் பர்பிக்கும் அத்தனை சண்டை போடுகிறாயே! அந்தத் தைரியமெல்லாம் எங்கே போச்சு?" என்று கேட்டேன். நான் சொல்லச் சொல்ல அவள் பயம் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து கொண்டே வந்தது.

ஒருவிதமாக அவளைத் தேற்றினேன். வாசல் திண்ணையில் அவளை உட்காரச் சொல்லி முதலில் ஒரு பட்டாஸை நான் கொளுத்தி வீதியில் வீசி எறிந்தேன். "இது என்ன பெரிய வித்தை? இப்படியே நீ கொளுத்தி வீசி எறி" என்றேன். அவள் ஒரு பட்டாஸை வாங்கிக்கொண்டாள். என்னை ஒரு கையில் இறுக்கிப் பிடித்துக்கொண்டு எனக்குச் சிரிப்புச் சிரிப்பாக வந்தது. பட்டாஸை விளக்கில் கொளுத்த வேண்டுமே! அவள் கை நடுங்கியது. "தைரியமாகக் கொளுத்தி உடனே வீசி எறிந்துவிடு" என்று சொன்னேன்.

பட்டாஸை விளக்குப் பக்கத்தில் கொண்டு போகிறதும் கொளுத்தாமலே எடுப்பதுமாக இரண்டு நிமிஷம் செய்தாள். "சரி, சரி; உன்னைப் போலப் பயங்கொள்ளியைப் இந்த உலகத்திலே பார்த்ததில்லை. நீ ஒன்றும் விட வேண்டாம் போ. இருக்கிற பட்டாஸை யெல்லாம் ஒரேயடியாக வைத்துக் கொளுத்திவிடுகிறேன். இல்லாவிட்டால் வேறு யாருக்காவது தானம் பண்ணிவிடுகிறேன்" என்றேன்.

அவள் மறுபடியும் பட்டாஸை விளக்குக்குப் பக்கத்தில் கொண்டுபோனாள். "ஜாக்கிரதை!" என்று உள்ளேயிருந்து அம்மா கத்தினாள். அவள் அதே சாக்காக எழுந்திருக்கப் போனாள். "இதோ பார், அம்புஜம், நீ பட்டாஸ் கொளுத்தாவிட்டால் உன்னோடு நான் பேசவே மாட்டேன்" என்றேன். "போ! அண்ணா, அம்மா வைவாள்"

என்றாள். "வையமாட்டாள், விடு" என்றேன்.

மறுபடியும் போட்ட பட்டாஸைக் கையில் எடுத்தாள். விளக்குக்கு அருகில் கொண்டு போனாள். திரி பற்றிக் கொண்டது. திரி எரியும் போது பொறி வருமே, அதைக் கண்டதும் அம்புஜம் பட்டாஸை அப்படியே போட்டுவிட்டாள். விளக்கு அவிந்தது. பட்டாஸ் அவள் அருகிலே விழுந்தது. விழுந்தது மட்டுமா? அடுத்த கணம் படீரென்று வெடித்தது; அதே சமயத்தில் அடுத்த வீட்டுப் பையன் விட்ட ஆனை வெடி காதைத் துளைத்தது. இரண்டு சப்தமும் சேர்ந்தபோது நானே கதிகலங்கிப் போனேன். அம்புஜம் வீல் என்று கத்திக் கொண்டு திண்ணையிலிருந்து விழுந்தாள். அம்மா உள்ளேயிருந்து எட்டிப் பார்த்தவள், வெடிச்சத்தம், அம்புஜத்தின் வீல் என்ற குரல் எல்லாவற்றையும் சேர்ந்தாற்போல் கேட்டுக் கையிலே இருந்த பாத்திரத்தைக் கீழே போட்டு விட்டாள்.

அந்த ஒரு நிமிஷத்தில் ஏக அமர்க்களமாகி விட்டது. நான் திண்ணையிலிருந்து குதித்து அம்புஜத்தை எடுத்தேன். அவள் பாவாடையையெல்லாம் தட்டிக் கொண்டாள். எதிர் வீட்டுக் குழந்தைகள் இந்த வேடிக்கையைக் கண்டு கடகட என்று சிரித்தார்கள். பக்கத்து வீட்டில் ஆனை வெடி விட்ட பையன், "எப்படி என் வெடி!" என்று கேட்க வந்துவிட்டான்.

வெற்றி ஏணி



100% நான் செய்துவிட்டேன்.
90% நான் செய்வேன்.
80% என்னால் முடியும்.
70% என்னால் முடியும் என்று நினைக்கிறேன்
60% நான் செய்யலாம்.
50% செய்யலாம் என்றே தோன்றுகிறது.
40% நான் செய்திருக்க முடியும்.
30% செய்ய ஆசைதான்; முடியாதே.
20% நான் எப்படிச் செய்யப் போகிறேன்?
10% என்னால் முடியாது.

'இனிமேல் அம்புஜம் பட்டாஸ் இருக்கிற திக்கில் கூடத் திரும்பிப் பார்க்க மாட்டாள்' என்று நான் நிச்சயம் செய்துவிட்டேன்.

அவள் என்ன செய்தாள் தெரியுமோ? சுற்றுமுற்றும் பார்த்தாள். எதிர்வீட்டுக் குழந்தைகள் தன்னைப் பார்த்துச் சிரிப்பதைப் பார்த்தாள். பக்கத்து வீட்டுப் பையன் பரிகாசமாகப் பார்ப்பதையும் கவனித்தாள்.

"அண்ணா, பராக்குப் பார்த்ததில் நழுவித் திண்ணையிலிருந்து விழுந்து விட்டேன். விளக்கை ஏற்று. இனிமேல் நானே பட்டாஸ் விடுகிறேன், பார்" என்றாள்.

நான் சிறிது தயங்கி நின்றேன். அம்மா தடுத்தாள். அம்புஜம் கேட்கவில்லை. அவளாக விளக்கை ஏற்றிக் கொண்டுவந்தாள். பட்டாஸ் விட ஆரம்பித்தாள்; என்ன ஆச்சரியம்! பல நாள் விட்டுப் பழக்கமானவள்போல் விட்டாள். எதிர்வீட்டுப் பையன்களைப் பார்த்துக் கொண்டே விட்டாள். அடுத்த வீட்டுப் பையன் காதில் விழும்படியாக, "அண்ணா, ஆனைவெடி ஒன்று வாங்கிண்டு வா, நானே வீதியிலே போய்க் கொளுத்தறேன்" என்று சொல்லிக்கொண்டே விட்டாள்.

இந்த வருஷம் பட்டாஸ் முழுவதும் அம்புஜமே விட்டு விட்டாள்; எனக்கு ஒன்றுகூட இல்லை. நான் மத்தாப்பு மாத்திரம் கொளுத்தினேன்!



வண்ண நீர் விளையாட்டு

தனியே கிடக்கிற ஆடையையும் ஆபரணத்தையும் வெட்டி அந்த அந்த இடத்தில் ஒட்டிப்பாருங்கள்; பலே ஜோராக இருக்கும். 'பில்லாங்குழ'லுக்குப் பயப்படாதவள் பீச்சாங்குழலுக்குப் பயப்படுகிறாள்!

நாயும் திருடனும்



ஆடும் விதம்: இது சுவாரஸ்யமான விளையாட்டு. இதை விளையாட இரண்டு பேர் வேண்டும். ஒருவர் நாய்; மற்றவர் திருடன். ஒரு சோழியும் ஒரு புளியங்கொட்டையும் காயாக வைத்துக் கொள்ளுங்கள். தலையும் பூவும் உள்ள காலணா ஒன்றை வைத்துக்கொண்டு ஆட ஆரம்பிக்க வேண்டும். இது மற்ற விளையாட்டைப் போல அல்ல. முதலில் நாய் காலணாவைச் சுண்ட வேண்டும். தலை விழுந்தால் இரண்டு கட்டம் நகர்த்தவேண்டும். பூ விழுந்தால் ஒரு கட்டம்தான். நாய் காசைச் சுண்டினால் எது விழுகிறதோ அதற்குத் தகுந்தாற்போல் திருடன்தான் முதலில் காயை நகர்த்தவேண்டும். திருடன் விளையாடும்போது நாய் காயை நகர்த்த வேண்டும். அந்த அந்தக் கட்டங்களில் போட்டிருக்கிறது போலக் காயை முன்னாலோ பின்னாலோ நிறுத்தி விளையாட வேண்டும். திருடன் வீட்டுக்கு யார் முன்னால் போகிறாரோ அவர்தான் ஜயித்தவர். பிறகு வேறு ஆட்டம்தான் புதிதாக ஆட வேண்டும்.

கண்ணன்

தீபாவளி மலர் 1950

நாய்: நாய் புறப்படும் கட்டம். ★ திருடன்: திருடன் புறப்படும் கட்டம். ★ —1: ஒரு கட்டம் பின்னால் போ! ★ நா. 1 ஆ: நாய் 1 ஆட்டம் நிற்க வேண்டும். ★ + 2: இரண்டு கட்டம் முன்னால் போ! ★ தி. 1. ஆ: திருடன் 1 ஆட்டம் நிற்க வேண்டும். தி.—1: திருடன் 1 கட்டம் பின்னால் போகவேண்டும். ★ —2: இரண்டு கட்டம் பின்னால் போ! ★ நா. 1. ஆ: நாய் 1 ஆட்டம் நிற்கவேண்டும். ★ வீடு: முன்னால் வந்துவிட்டாயா? நீதான் ஜயித்தாய்!

பவழவல்லி

கி. ரா.

ஆச்சரியத்தால் ஸ்தம்பித்துப் போன சுந்தரத்தைக் கண்ட அன்னக்கிளி என்ற அந்தப் பெண், "ஏன் அப்படி விழிக்கிறாய்? வா போவோம்" என்றாள்.

"ஆமையாய் இருந்த நீ யார்? உன் சுய உருவம் ஆமையா அல்லது பெண்ணா? நீ ஏன் அப்படி இருந்தாய்? இவ்வளவு தூரம் எனக்கு யோசனை கூறிய நீயே ஏன் பவழவல்லியின் பதக்கத்தை எடுத்துவரவில்லை?" என்று சுந்தரம் மடமடவென்று கேட்டான்.

"இன்னும் ஒரு கேள்வியை விட்டுவிட்டாயே?" என்று சிரித்துக்கொண்டே கேட்டாள் அந்த ஆமைப் பெண்.

"என்ன கேள்வி?"

"இது பூலோகமா, கைலாசமா என்று?" என்று சொல்லிச் சிரித்தாள். அவனும் சிரித்தான்.

பிறகு அவள், "வா, போய்க்கொண்டே கதை சொல்லுகிறேன்" என்று கையை அசைத்தாள். அப்போது அந்த நீர்யானை அங்கே வந்து நின்றது. அவளைக் கண்டதும் மண்டியிட்டுப் படுத்தது.

"இதில் ஏறிக்கொள்!" என்றாள். முதலில் அவள் ஏறி உட்கார்ந்ததும் சுந்தரம் அவளுக்குப் பின்னால் ஏறி உட்கார்ந்தான். யானை ஆகாய மார்க்கமாகப் பறக்கத் தொடங்கியது.

அன்னக்கிளி கதை சொல்லத் தொடங்கினாள்: "நான் பவழவல்லியின் அந்தரங்கத் தோழி. என்னுடைய தாயாருக்கு மந்திர ஜால வித்தையெல்லாம் நன்றாகத் தெரியும். இந்த மந்திர யானை இருக்கிறதே, அது எங்களுடைய வம்சத்தில் எப்போதும் ஊழியம் செய்துவரும் யானை. நினைத்த இடத்துக்கு என்னை அழைத்துக்கொண்டு போகும். நான் சொன்ன வேலையைச் செய்யும். ஆகையினால் மாயாஜால மந்திரவாதி பவழவல்லியைக் கல்லாகச் செய்தபோது முதலில் இந்த யானையைப் பிடித்துக் கட்டிப் போட்டுவிட்டான். பிறகு என்னைப் பிடித்து ஆமையாகச் செய்துவிட்டான். என்னுடைய மந்திர சக்தியெல்லாம் வீணாகப் போய்விட்டது. ஆமையாயிருக்கும் வரையில் என்னால் ஒன்றும் செய்ய முடியவில்லை.

"என்னை யாராவது கொன்றுவிட்டால் அன்று என் சுய உருவம் வந்துவிடும் என்பது

எனக்குத் தெரியும். அதனல் தான் உன்னை ஆரம்பத்திலேயே என்னைக் கொல்லும்படி சொன்னேன். நீ மறுத்துவிட்டாய். நல்ல வேளையாய் இப்பொழுதாவது நான் சொன்னபடி செய்தாயே!'' என்று அவள் நிறுத்தினள்.

அப்போது யானை கீழே இறங்கிற்று. ''இதோ பார்!'' என்றுள் அன்னக்கிளி.

சுந்தரம் பார்த்தான். அவர்களுக்கு நேராகக் கீழே பழைய அல்லிக்குளம் இருந்தது. அதன் நடுவில் இருந்த மைய மண்டபத்தில் போய் யானை இறங்கிற்று.

அன்னக்கிளி, ''கஜேந்திரா! பவழவல்லியின் பதக்கத்தை எடுத்து வா'' என்றுள். யானை தண்ணீருக்குள் மூழ்கிற்று.

ஆச்சரியத்துடன் சுற்றுமுற்றும் பார்த்த சுந்தரம், ''இங்கே இருந்த தங்க அன்னத்தைக் காணவில்லையே?'' என்றுன்.

அன்னக்கிளி, ''அதோ பார்! பறந்து போகிறது'' என்று சுட்டிக் காட்டினள். தங்க அன்னம் கரையை நோக்கிப் பளபளவென்று பறந்துபோவது தெரிந்தது.

''அந்தப் பட்சி திரும்பி வருவதற்குள் நாம் இங்கிருந்து போய்விடவேண்டும்'' என்றுள் அவள்.

''இல்லாவிட்டால்—?''

''இல்லாவிட்டால் மாயாஜால மந்திரவாதி நம்மைப் பிடித்துவிடுவான். பிறகு நாம் இங்கிருந்து திரும்பிப் போக முடியாது!''

அவள் பேசிக்கொண்டிருக்கும்போது தூரத்தில் குளத்தங்கரையில் இருந்த ஆல மரத்தடியில், 'மடமட'வென்ற சத்தம் கேட்டது. அங்கிருந்த பூதம் பறந்து ஓடிற்று.

அதைப் பார்த்த சுந்தரம் பயந்துகொண்டு, ''அது என்ன?'' என்றுன்.

''ஒன்றும் இல்லை'' என்றுள் அன்னக்கிளி. பிறகு, ''இன்னும் காணவில்லையே இதை!'' என்று தன் கழுத்தில் போட்டிருந்த பவழமாலையைத் தொட்டுக்கொண்டே, ''கஜேந்திரா!'' என்று அழைத்தாள்.

அப்போது யானை நீருக்குள்ளிருந்து வெளியில் வந்து நின்றது. அதன் தும்பிக்கையில் வெண்மையான ஒரு தந்தப் பெட்டி இருந்தது. அதைக் கையில் வாங்கிக்கொண்டாள் அன்னக்கிளி. யானையின் முதுகில் ஏறி உட்கார்ந்துகொண்டாள்.

''சீக்கிரம்! சீக்கிரம்!'' என்று சுந்தரத்தை அவசரப்படுத்தினள்.

அப்போது ''ஹோ!'' என்று பெரிய இரைச்சல் கேட்டது. அன்னக்கிளி, ''வா சீக்கிரம்! நாம் புறப்படவேண்டும்!'' என்றுள்.

யானையின் முதுகில் ஏறப்போன சுந்தரம் அவசரத்தில் கால் சறுக்கிக் கீழே விழுந்துவிட்டான். அதற்குள் இரைச்சல் இன்னும் சமீபத்தில் கேட்டது.

அன்னக்கிளி, ''ஐயையோ! நாம் இனித் தப்ப முடியாது!' என்று கீழே குனிந்து அவ

ளைக் கையைப் பிடித்து மேலே தூக்கினாள்.

சுந்தரத்துக்குப் பயத்தால் நெஞ்சு திக்திக்கென்று அடித்துக்கொண்டது. பயங்கரமான இரைச்சலுடன் பத்துப் பூதங்கள் அவர்களை நோக்கித் துரத்திக்கொண்டு வந்தன.

சுந்தரம் ஏறி உட்கார்ந்து கொண்டான். அதற்குள்ளாகப் பூதங்கள் வெகு சமீபத்தில் நெருங்கி வந்துவிட்டன. சுந்தரம் கண்ணை இறுக மூடிக் கொண்டான்.

"கஜேந்திரா! சீக்கிரம்!" என்று கூவினாள் அன்னக்கிளி. யானை குபீரென்று தாவிப் பறந்தது. பூதங்களும் கூடவே விரட்டிக்கொண்டு வந்தன.

"கஜேந்திரா, வடக்கே போ" என்று அன்னக்கிளி உத்தரவிட்டாள். சுந்தரம் கண்ணைத் திறந்து பார்த்தான். பூதங்கள் வெகு சமீபத்தில் வந்துவிட்டன. அவைகள் போட்ட இரைச்சல் இடி முழக்கம்போல் கேட்டது.

"அன்னக்கிளி! அதோ பார், அதோ பார்!" என்று கூவினான்.

அன்னக்கிளி திரும்பினாள். இன்னும் சிறிது நேரந்தான். அவைகள் அவர்களைப் பிடித்து விடும்.

சட்டென்று அவள் தன் கழுத்தில் இருந்த பவழமாலையைக் கழற்றினாள். அதை வீசிப் பின்புறமாக எறிந்தாள்.



உடனே என்ன ஆச்சரியம் ! அவர்களுக்கும் பூதங்களுக்கும் இடையில் ஒரு பெரிய தீ ஜ்வாலையாக எழும்பியது. அது மலையைப் போல் வானம்வரையில் வளர்ந்து பூதங்களின் வழியை மறித்தது. கஜேந்திரன் வாயுவேகத்தில் பறந்தது.

“இனி நாம் பிழைத்தோம்” என்று பெருமூச்சு விட்டாள் அன்னக்கிளி.

சிறிது நேரம் வான வெளியிலே அந்த நீர்யானை பறந்து சென்றது. சுந்தரத்துக்கு அது வேடிக்கையாக இருந்தது. அவர்களுக்குக் கீழே மேகங்கள் பஞ்சுக் குவியலைப் போலத் திட்டுத் திட்டாகக் காட்சியளித்தன. அவன் கீழே ஏதாவது ஊர்கள் தெரிகின்றனவா என்று சவனித்துப் பார்த்துக் கொண்டே வந்தான். ஒன்றும் தெரியவில்லை. கண்ணுக்கு எட்டிய வரையில் ஒரே மேகக் கூட்டந்தான்.

திடீரென்று சுந்தரம் முன்னுக்கு நொடித்து அன்னக்கிளியின் மேல் மோதிக்கொண்டான். “நாம் கீழ் நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறோம்!” என்றாள் அவள்.

யானை மேகங்களுக்குக் கீழே பறந்துகொண்டிருந்தது. கீழே பளபளப்பான மலைகளும், பல விசித்திரமான புஷ்பத் தோட்டங்களும், சிறு சிறு புள்ளிகளாகக் காட்சியளித்தன.

வரவரத் தரை அவர்களை நோக்கி நெருங்கி வந்துகொண்டிருந்தது. சுந்தரம் கூர்ந்து

கவனித்தான். பிரம்மாண்டமான அரண்மனை ஒன்று தெரிந்தது.

"அது என்ன?" என்றான் சுந்தரம்.

"அதுதான் பவழவல்லியின் அரண்மனை."

"அங்கே என்ன கூட்டம்?"

"நன்றாகப் பார்."

சுந்தரம் பார்த்தான். அங்கே ஏராளமான மச்சப் பெண்கள் அலங்காரம் செய்துகொண்டு நின்றார்கள். அவர்களுக்குப் பின்னால் உடுப்பணிந்த வீரர்களும் அதிகாரிகளும் அணி வகுத்து நின்றார்கள். எல்லாருக்கும் முன்னால் ஒரு மேடை கிறுவித் தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. பவழலோகத்து விசித்திரப் புஷ்பங்கள் சரம் சரமாகத் தொங்கின.

மேடையில் பலவித விசித்திரமான வாத்தியங்களை வைத்துக்கொண்டு பலர் நின்றுகொண்டிருந்தார்கள். கையில் மாலையை வைத்துக்கொண்டு ஓர் அழகான பெண்மணி நின்றுகொண்டிருந்தாள். அவளுக்குப் பக்கத்தில் ஜரிகை உடையில் ஒருவர் நின்றுகொண்டிருந்தார்.

"அவர்கள் எல்லாரும் யார்?" என்றான் சுந்தரம்.

"மாப்பிள்ளையை வரவேற்கக் காத்துக்கொண்டிருக்கிறார்கள்" என்றாள் அன்னக்கிளி சிரித்துக்கொண்டே.

"மாப்பிள்ளையா! யார் மாப்பிள்ளை!" என்றான் சுந்தரம் திடுக்கிட்டு.

"எல்லாம் சிறிது நேரத்தில் தெரிகிறது" என்றாள் அன்னக்கிளி.

அப்போதுதான் சுந்தரத்துக்கு அவள் சொன்னதன் அர்த்தம் புரிந்தது. "நாம் வருவது அவர்களுக்கு எப்படித் தெரிந்தது?" என்று கேட்டான்.

"நாம் பதக்கத்தை அல்லிக் குளத்திலிருந்து எடுத்த உடனேயே பவழவல்லிக்குச் சுய உருவம் வந்திருக்கும். அவர்களுக்கு உடனே தெரிந்திருக்கும்."

"அங்கே நிற்பவள் பவழவல்லியா?" என்றான் சுந்தரம் ஆச்சரியத்துடன்.

"ஆம்" என்றாள் அவள்.

(அடுத்த இதழில் முடிவுறும்.)

நோட்டில் நோட்டு

ஜி. ஜயராமன்
(J. 28)

பிரபல ஜவுளி வியாபாரி முருகேச முதலியார் கடையில் கமலாவின் அம்மா துணிகளை எடுத்து வைத்துவிட்டு வந்தாள். எதிர் வீடுதான் முருகேச முதலியார் வீடு. அவர் பையன் கிட்டுவைக் கூப்பிட்டு, "கமலாவின் கையில் பணம் கொடுத்திருக்கிறேன். இரண்டு பேருமாகப் போய், துணிகளை வாங்கிக்கொண்டு வாருங்கள்" என்றாள்.

கடையில் குமாஸ்தா ரங்கசாமி மட்டும் உட்கார்ந்திருந்தார். வேறு பையன்கள் இல்லை. கிட்டுவும் கமலாவும் நுழைந்த சமயத்தில் கிருதா மீசை குப்புசாமியும் உள்ளே நுழைந்தான். ஆளைப் பார்த்தாலே முரடன் என்று சொல்லிவிடலாம். அவனைக் கிட்டு ரெயில்வே ஸ்டேஷனில் ஒரு தடவை பார்த்திருக்கிறான்.

கமலா ஐம்பது ரூபாயைக் கொடுத்து, துணிகளைப் பெற்றுக்கொண்டாள். ரங்கசாமி அந்த நோட்டுக்களை வாங்கி மேஜையின்மீது வைத்தார். கடைப் பையன் உள்ளே நுழைந்து வருவதைக் கண்டு அவர் திரும்பினார். அடுத்த கணம் மேஜையிலிருந்த நோட்டுக்களைக் காணவில்லை.

முருகேச முதலியார் வருகிற சமயம். அவர் மிகவும் நல்லவர்தான். ஆனால் மகா முன்கோபக்காரர். ரங்கசாமி திருதிருவென்று விழித்துக் கொண்டிருந்தார். கமலா ஒரேயடியாகப் பயந்துவிட்டாள். கிட்டுவுக்கும் ஒன்றும் புரியவில்லை. இதே சமயத்தில் முதலியாரும் வந்துவிட்டார். கமலா பயந்துகொண்டிருப்பதையும் குமாஸ்தா விழித்துக் கொண்டிருப்பதையும் பார்த்த அவர், "என்ன சமாசாரம்? ஏன் இப்படி விழிக்கிறாய்?" என்றார் ரங்கசாமியைப் பார்த்து.

ரங்கசாமி பயந்துகொண்டே எல்லா விஷயங்களையும் சொன்னார். உடனே முருகேச முதலியாருக்குப் பிரமாத கோபம் வந்துவிட்டது. "இதோ பார், ரங்கசாமி! கையிலே வந்த பணம் அதுக்குள்ளே எங்கே போகும்? இங்கே இருக்கிறவங்க யாராவதுதானே எடுத்திருக்கணும்! நன்றாகத் தேடிப் பார், ஐயா! வாசலைச் சாத்து. எல்லாரையும் சோதனை போட்டுப் பார்த்தால் போகிறது. அதுக்குள்ளே எங்கே போகும்? ஐம்பது ரூபாய் என்ன, செடியிலே காய்க்கிறதா?" என்று சத்தம் போட ஆரம்பித்தார் முதலியார்.

கடையின் மூலை முடுக்குகளிலெல்லாம் தேடினார்கள். எங்கேயும் அகப்படவில்லை. இந்த அமர்க்களத்திலே வியாபாரம் கெட்டுப் போவதைப் பார்த்த முதலியார்

கடைசியில், "இதோ பார் ரங்க சாமி! பணத்தை நீ வாங்கி விட்டாய். அதனால் துணியைக் கொடுத்து அனுப்பிவிடு. ஆனால் பணம் என் கைக்கு வராததனாலே அந்தப் பணத்தை நீதான் இன்னும் ஒரு வாரத்துக்குள் கண்டு பிடிக்க வேண்டும். இல்லா விட்டால் உன் சம்பளத்திலே பிடித்துக்கொள்வேன்" என்று சொன்னார்.

அந்தச் சமயத்திலே கிட்டு, "அப்பா, அப்பா, அந்தக் கிருதா மீசை..." என்று ஆரம்பித்தான் குப்புசாமி அவனை விழித்துப் பார்த்தான். முதலியாரோ அதையெல்லாம் கவனிக்காமல், "போடா வீட்டுக்கு" என்று அதட்டினார். கிட்டுவும் கமலாவும் பேசாமல் வீட்டுக்குப் போனார்கள்.

வீட்டுக்குப் போன பிறகு கூட, கிட்டுவின் மனசை விட்டு ரங்கசாமியின் பரிதாபமான முகம் போகவில்லை. அவன் சம்பளத்திலே பிடித்துக் கொண்டால் பாவம், அவன்

எப்படிச் சாப்பிடுவான்? அந்தக் கிருதா மீசை குப்புசாமிதான் எடுத்திருக்க வேண்டும். ஆனால் அப்பா அதைக் கேட்கமாட்டேன் என்கிறாரே. அப்பா! அவனை நினைத்தாலே எவ்வளவு பயமாயிருக்கிறது! அவனைக் கேட்டால் கட்டாயம் முதுகுத் தோலை உரித்து விடுவான். பின்னே எப்படிக் கண்டுபிடிப்பது? கிட்டுவின் மூளை தீவிரமாக வேலை செய்தது. அவன் படித்திருந்த கதைகளில் வரும் துப்பறிபவர்களைப்போல் நடந்து எப்படியாவது பணத்தைக் கண்டுபிடிப்பது என்ற நிச்சயத்துடன் தூங்கினான் கிட்டு.

காலையில் எழுந்தவுடன் முதலில் குப்புசாமியைப் பின் தொடர்வது என்று தீர்மானித்துக்கொண்டான். ஏனென்றால் அவன் படித்த கதைகளில் எல்லாம் குற்றவாளிகள் என்று சந்தேகம் ஏற்படுகிறவர்களைப் பின் தொடர்ந்துதான் அவர்களின் மர்மங்களைக் கண்டுபிடிக்கிறார்கள் துப்பறிபவர்கள். அப்படியானால் கிட்டுவும் துப்பறிய வேண்டும் என்றால் குற்றவாளியைப் பின் தொடர வேண்டியதுதானே!

கிட்டு எங்கெங்கோ குப்புசாமியைத் தேடிவிட்டுக் கடைசியில் கடைத்தெருவுக்கு வந்தான். அதோ, அதோ, அந்தக் கடையில் சாமான் வாங்கிக்கொண் டிருப்பது யார்? அட, குப்புசாமியேதான். கிட்டு சர்வ ஜாக்கிரதையுடன் அந்த ஆள் நின்றுகொண்டிருந்த கடைக்குப் பக்கத்துக் கடையில் நின்றுகொண்டு அவன் என்ன செய்கிறான் என்று கவனித்தான். குப்புசாமி சில சாமான்களை எடுத்துக்கொண்டு கொஞ்சங்கூடப் பேரம் பேசாமல் அதன் விலையைக் கொடுத்துவிட்டு உடனே நழுவினான்.

கிட்டு உடனே அந்தக் கடைக்கு வந்தான். கடைக்காரர் வேறு ஒருவருடன் பேசிக்கொண்டிருந்தார். குப்புசாமி கொடுத்த பணம் மேஜையின் மேல் இருந்தது. கிட்டு அந்தப் பணத்தைப் பார்த்தான். அங்கே இரண்டு ஐந்து ரூபாய் நோட்டுக்கள் வைத்திருந்தன. முதல் நாள் கமலா கொண்டு வந்ததும் ஐந்து ரூபாய் நோட்டுகள் தான். கிட்டு அந்த நோட்டைக் கவனித்துப் பார்த்துவிட்டு, அந்த விஷயத்தை, தன் டயரியில் எழுதிக்கொண்டான். இதே சமயத்தில் அவன் முதுகில் ஒரு குத்து விழுந்தது. திடுக்கிட்டுத் திரும்பினான்.

கடைக்காரர் அங்கே நின்றுகொண்டு, "என்ன தம்பி, கடையிலே எதைப் பார்த்து என்ன எழுதிக்கறே? சமயம் பார்த்து அடிச்சுண்டு போகலாம்னு பாக்கறயா? போ வெளியே" என்றார். கிட்டுவுக்கு ரொம்ப ரொம்பக் கோபம் வந்தது. ஆனால் துப்பறிபவன் கோபித்துக்கொள்ளலாமா? அப்புறம் துப்பறிவது எப்படி? ஆகையால் பேசாமல் வெளியேறினான்.

மறுநாள், இருட்டும் சமயம். சூரியன் 'மலைவாயில் விழுவது' என்ற தன் வேலையைச் செய்து

கொண்டிருந்தான். கிட்டுவும் 'துப்பறிதல்' என்ற தன் வேலையைச் செய்வதற்காகப் போய்க்கொண்டிருந்தான். முதல் நாள் வாங்கின குத்தை அவன் இன்னும் மறக்கவில்லை. ஆகையால் ஜாக்கிரதையாக வேலை செய்ய ஆரம்பித்தான். அரை மணி முன்னால் ஒரு சந்தின் முனையில் பார்த்த குப்புசாமி இப்பொழுது ஒரு பங்களாவின் பின்புறமாய் நின்றுகொண்டிருந்தான். தோட்டக்காரனிடம் அப்படி என்ன ரகசியம் பேசுகிறான்!

கிட்டுவின் மூளை துரிதமாக வேலை செய்தது. மறைவான ஓர் இடத்தில் ஒளிந்துகொண்டு நடப்பதைக் கவனித்தான். சிறிது நேரத்துக்குப் பிறகு அந்தத் தோட்டக்காரன் தன் குடிசைக்குப் போய்ச் சில நோட்டுக்களைக் கொண்டு வந்து குப்புசாமியிடம் கொடுத்துவிட்டு, கிட்டு இருந்த திக்கைச் சுட்டிக் காட்டி ஏதோ சொன்னான். குப்புசாமியும் கிட்டு இருந்த பக்கம் வந்தான். கிட்டுவின் மனம் 'திக் திக்' என்று அடித்துக்கொண்டது. உடம்பெல்லாம் வேர்த்துக் கொட்டிற்று. சட்டென்று பக்கத்திலிருந்த குப்பைத் தொட்டியின் பின்னால் மறைந்துகொண்டான்.

குப்புசாமி கிட்டுவைத் தாண்டிச் சென்றான். கிட்டு அவனை நன்றாகக் கவனித்தான். ஆமாம்; சந்தேகமே இல்லை. அவன் கையில் இருப்பது ஐந்து ரூபாய் நோட்டுக்கள்தான். குப்புசாமி பணத்தை எண்ணிச் சட்டைப் பையில் வைத்துக்கொண்டான். கிட்டுவும் நன்றாகக் கவனித்துக்கொண்டான்.

அவன் கையில் எட்டு நோட்டுக்கள் இருந்தன. முதல் நாள் கிருதா மீசை கடையில் செல வழித்த பத்து ரூபாயையும் சேர்த்தால், கிட்டு விரல் விட்டு எண்ணி மொத்தம் ஐம்பது ரூபாய் என்று கண்டுபிடித்து டயரியில் இரண்டாவதாக எழுதிக்கொண்டான். கிட்டு மறுபடியும் குப்புசாமியைப் பார்த்தான். குப்புசாமிதான் பணத்தை எடுத்திருக்கிறான் என்பதற்கு வேறு என்ன ருசு வேண்டும் என்று கிட்டுவுக்குத் தோன்றிற்று. உடனே அப்பாவிடம் சொல்லி, குப்புசாமியைக் கையும் களவுமாகப் பிடிக்கவேண்டும் என்று தோன்றியது. ஒரே ஓட்டமாக ஓடினான் வீட்டை நோக்கி. அவன் மனம் சந்தோஷத்தால் ரப்பர் பந்தைப்போல் துள்ளியது.

வீட்டை அடைந்ததும் அவன் அப்பா, "அடே கிட்டு! என் இப்படித் தலை தெறிக்க ஓடி வரே?" என்று கேட்டார்.

"அப்பா, கண்டு பிடிச்சுட்டேன், அப்பா! என்று மூச்சு வாங்கக் கூறினான் கிட்டு.

"என்னத்தை அதிசயமாக் கண்டுபிடிச்சுட்டே? நெல்லுக்குள்ளே அரிசி இருக்கு என்றா? இல்லே, எள்ளுக்குள் எண்ணெய் இருக்கு என்றா?" என்று கேட்டார் முதலியார்.

"அதெல்லாம் இல்லே அப்பா, அன்று பணம் தொலைந்ததோ இல்லையோ, அந்தப் பணத்தை எடுத்தவனைத்தான்." தான் துப்பறிந்தவற்றையும் குப்புசாமி இப்பொழுது போகும் இடத்தையும் எல்லாவற்றையும் கிட்டு சொன்னான். முதலியார் பரபரப்புடன், "இருந்தாலும் இருக்கும். இதோ இப்பவே போலீசுக்குப் போன் பண்ணுகிறேன்" என்றார். கிட்டு அதற்குள் குப்புசாமியைப் பிடிப்பதனால் தனக்கு ஏற்படப் போகும் புகழைப்பற்றியும், சிநேகிதர்களிடையில் தான் தலை நிமிர்ந்து கர்வத்துடன் போவதாகவும் கற்பனை செய்து மகிழ்ந்துகொண் டிருந்தான்.

அதே சமயம் கடைப்பையன் வேலுவும் குமாஸ்தா ரங்கசாமியும் மலர்ந்த முகத்துடன் உள்ளே நுழைந்தனர். "எஜமான்! அன்று காணாமல் போயிற்றே, அந்த ரூபாய் அகப்பட்டுவிட்டது. அன்றைக்கு நான் திரும்பியபோது பிரித்து வைத்திருந்த கணக்கு நோட்டை மூடி வைத்தேன். கிட்டு கொடுத்த நோட்டுகள் அதனுள் இருந்துவிட்டன. அதை நான் கவனிக்கவில்லை. தேடும்போது பையன் நோட்டை எடுத்து அலமாரியில் வைத்துவிட்டான். இன்று கணக்கு எழுதப் பிரித்ததும் அந்த நோட்டுகள் அப்படியே அகப்பட்டுவிட்டன. கடவுள் தான் காப்பாற்றினார்" என்று ரங்கசாமி சொல்லிவிட்டுத் தம் சட்டைப் பையிலிருந்த பணத்தை எடுத்து முதலியாரிடம் கொடுத்தார். முதலியார் அதை வாங்கி எண்ணிப் பத்திரமாக வைத்துக்கொண்டு கிட்டுவைப் பார்த்தார். கிட்டுவின் முகத்தில் ஈ ஆடவில்லை.

'ஸேனு'

கிஷ்கிந்தா காண்டம்

[ஒரு மாந்தோப்புக்கு வெளியில் மரநிழலிலே பத்துப் பதினைந்து சிறுவர்கள் கூடியிருக்கிறார்கள். பின்னால் புதர்கள் அடர்ந்த தோப்பு வேலி. நடுப் பகல் வேளை.]

முதல் சிறுவன்: வேஷச் சாமானெல்லாம் யார்கிட்ட இருக்கு?

முனிசாமி: (தன் கையிலுள்ள துணிமூட்டையைப் பிரித்துக் கொண்டே) இதோ என் கிட்டடா, சோமு.

சோமு: (மூட்டைக்குள் இருக்கும் சாமான்களைக் கவனித்து) அடேடே! வால் தானேடா இந்த ஆட்டத்திலே முக்கியம்! அதைக் காணோமே!

எல்லாரும்: ஆமாம்... ஆமாம். வாலோ வால்! வால்! (வெளியில் நீட்டிக்கொண்டிருக்கும் மாமரக் கிளைகளை எட்டிப் பிடிக்க அங்கங்கே தாவிக் குதிக்கிறார்கள். ஒரே சிரிப்பும் கொம்மாளமுமாக இருக்கிறது.)

சோமு: (எரிச்சலோடு) அட வாலில்லா வானரங்களா!... ஏண்டா பாச்சா, சுப்பா! அதுங்களோடே சேரவே நீங்க ராமலட்சுமணாள் என்பதுகூட மறந்து போச்சோ?

மற்றச் சிறுவர்கள்: ஹோ ஹோ ஹோ! என்னாங்கோ உங்களைத்தான்! (பாச்சாவையும் சுப்பனையும் பார்த்துச் சிரிக்கிறார்கள்.)

சுப்பனும் பாச்சாவும்: (முகத்தில் அசடு வழிய மரத்திலிருந்து இறங்கி) சரி. என்னடா செய்யணும் இப்போ?

சோழ: யாராவது முன்ஞலே போய் ஒரு பெரிய தாம்புக் கயிருகப் பார்த்து எடுத்து வாங்கோ. இதுங்களுக்கெல்லாம் தலா ஒரு வால் வெட்டிக் கொடுக்கணும். (சற்றுத் தூரத்தில் தாம்புக்கயிற்ருேடு வேலன் வருகிருன்.) சரியாப்போச்சு. (அதை வாங்கித் துண்டு துண்டாக வெட்டிக் கொடுக்கிருன்.) இதுதான் கடைசி ஒத்திகை; ஞாபகம் இருக்கட்டும்.. தீபாவளி சமயத்துக்குப் பள்ளிக்கூடத்திலே போட்டுக் காட்ட வேண்டும். அதுவரைக்கும் எந்த வாத்தியாருக்கும் தெரியக்கூடாது. தெரிந்ததா?

எல்லாரும்: (தமாஷாக) எசமான் உத்தரவுப்படியே.

சோழ: ஷட் அப்! (எல்லாரும் வாயை மூடிக்கொள்வது போல் நடிக்கிருர்கள்) உம்.. சரி... ஆரம்பியுங்கோ.

[ஒத்திகை ஆரம்பமாகிறது. ராம லட்சுமணர்கள் மரத்தடிக்கு வருகிருர்கள். அதே சமயம் சில குரங்குகள் வாலை மாமரக் கிளையில் பின்னிக் கொண்டு தலைகீழாய்த் தொங்கி இவர்களுக்கு நங்கு காட்டுகின்றன.]

லட்சு: (கைகட்டி வாய் பொத்தி) அண்ணு, இது என்ன இடமோ?

ராம: (குரங்குகளைக் காட்டி) இருக்கிற லட்சணத்தைப் பார்த்தாலே கிஷ்கிந்தை என்று தெரியவில்லையா, தம்பீ!

லட்சு: (பாடுகிருன்)

இதுதானே கிஷ்கிந்தாபுரி?
இத்தனை நாளும்
அறியேன்........(இது)
அதுவோ இதுவோ என்றே
அலைந்தேனே பேதை யான்
...(இது)

ராம: (வெறுப்போடு) நீ ஏண்டா அப்பா அலையவேண்டும்? உன்னை நானு என்னேடே வரச்சொன்னேன்?

லட்சு: அண்ணு, தப்பு! தப்பு! வாய் தவறிச் சொல்லிவிட்டேன். (கன்னத்தில் படீர் படீர் என்று அறைந்துகொள்கிருன்.)

ராம: (எரிச்சலோடு) சரி, சரி. இரண்டுபேர் தப்புந்தான். இல்லாவிட்டால் மாளிகையை விட்டுவிட்டு இந்த நடுக் காட்டிலே வந்து திண்டாடுவோமா?

[எதிரே இரண்டு பெரிய குரங்குகள் வருகின்றன.]

ராம: நீங்கள் யாரப்பா?

முதல் குரங்கு: (வணங்கிப் பாடுகிறது.)

ராமசாமி உன் தூதனுய் இதோ
வந்தேனே இதோ வந்தேனே!
நாமம் அநுமானே அநுமானே! இவர்
தான்சுக்ரீவர் எம்மன்னர்...(ராம)

ராம: (பகவானுகையால் தெரிந்துகொண்டு) வந்தாயாடா, அப்பா; வா......எங்கேயிருந்தோ சமயத்திலே வந்து குதித்தாயே!

சுக்கிரீவனும் ஹநுமானும்: ஒரு விண்ணப்பம். (ராமனுடைய காலைக் கெட்டியாகப் பிடித்துக் கொள்கிருர்கள்.)

ராம: (வலி தாங்காமல்) என்ன வேண்டுமோ சீக்கிரம் கேளுங்களப்பா! செய்கிறேன். என் காலை விட்டால் போதும். (தனக்குள்) குரங்குப் பிடி என்ருல் சரியாகத்தான் இருக்கிறது!

ஹநு: (பிடியை விடாமல்) சுக்கிரீவ மகாராஜாவுக்கு ஓர் அண்ணன் இருக்கிருன். அவன் பெயர் வாலி. அவனைத் தீர்த்துவிட வேண்டும். அவன் மகாதுஷ்டன்.

ராம: அப்படியே, பக்தா! (அவர்கள் தன் காலை விட்டதும்) அப்பாடா! (பெருமூச்சு விடுகிருன்.)

ஹநுமான்: பிரபோ, இனித் தங்கள் தாசாநுதாசனுய் இட்ட வேலையைச் செய்யக் காத்திருக்கிறேன்.

ராமன்: (தன் கையிலுள்ள மோதிரத்தை எடுத்து ஹநுமானிடம் கொடுத்து)

நீ உரைப்பாய் ஹநுமானே
நான் சொன்னதாக.. (நீ)
கணையாழிதன்னைக்கொண்டு
கடுகவே நீ சென்றேன்
அன்புள்ள நாயகி ஜானகி
தன்னைக் கண்டு... (நீ)

[ஹநுமானும் சுக்கிரீவனும் ராமனை வணங்கி விடை பெற்றுக் குண்டாகர்ணம் போட்டபடி போகிருர்கள். தூரத்தில் இன்னெரு பெரிய குரங்கு வருவது தெரிகிறது.]

ராம: (ஆச்சரியத்தோடு) இதென்ன? இது எங்கிருந்து வந்து முளைத்தது?

பெரிய குரங்கு: (அவர்கள் இருவரையும் நெருங்கி) என் அப்பன்மார்களா! வணக்கம். நீங்களோ மனிதர்கள். நாங்கள் குரங்குகள். எங்கள் சண்டையில் நீங்கள் ஏன் நுழைகிறீர்கள்?

ராம: ஓகோ! நீதான் வாலியோ? நீ சொல்வது சரிதான். ஆனல் வாக்குக் கொடுத்துவிட்டேனே!

வாலி: உன் நன்மைக்காகத்தான், அப்பா, சொல்கிறேன். என்னை நிஜமாகவே கொன்ருல் அப்புறம் நாலு பேர் உன்னைத்தான் ஏசுவார்கள்.

ராம: சரி; இப்போது என்ன செய்ய வேண்டும்?

வாலி: அதைத்தான் சொல்ல வந்தேன். மறுபடியும் இந்தப் பக்கமாகச் சுக்கிரீவன் வருவான். அப்போது என்னைக் கொல்வதுபோல் நீ காட்டவேண்டும். உடம்பில் கெட்டி ரப்பர் கவசம் போட்டிருக்கிறேன். ஏழு மரத்தைத் துளைத்துக்கொண்டு உன் பாணம் என் மார்பில் பாய்வதற்குள் அதன் வேகம் குறைந்துவிடும். மேலோடு வந்து பொத்திக் கொள்ளும். நான் உடனே செத்து விட்டதுபோல் பாசாங்கு பண்ணுகிறேன். அவன் இதைப் பார்த்துவிட்டுப் போனதும் நான் எங்காவது போய்க் கொஞ்ச நாள் தலைமறைவாக இருக்கிறேன். நீ தகுந்த சமாதானம் சொல்லி அவனைத் திருப்திப்படுத்திவிடு... எப்படி என் யுக்தி?

ராம: பலே! சபாஷ்!

லட்சு: (வெறுப்போடு) இதென்ன அண்ணு, இப்படிக் கொடுத்த வாக்கை மீறுகிறீர்களே? இதுவா க்ஷத்திரிய தர்மம்?

ராம: (தனக்குள்) ரொம்பக் கண்டுவிட்டான் இவன், க்ஷத்திரிய தர்மத்தை. அதிகப் பிரசங்கி! (வெளிப்படையாக)

தம்பி, ஓர் உயிரைக் காப்பாற்றப் பொய் சொன்னால்கூடப் பரவாயில்லை. பின்னால் ஒரு காலத்தில் இந்தத் தென்னாட்டிலே தெய்வப் புலவர் ஒருவர் தோன்றி...(பாடுகிறான்.)

'பொய்ம்மையும் வாய்மை
இடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்குமெனின்'

என்று பாடப் போகிறாரடா! அதைச் சமாதானம் காட்டி விடலாம்.

வாலி : (பல்லை இளித்து) சரியாகச் சொன்னீங்கோ! சரியாகச் சொன்னீங்கோ!

லட்சு : (ஆச்சரியத்தோடு) அப்படியா, அண்ணா! நீங்கள் சாட்சாத் பகவானேதான்! உங்களுக்குத் தெரியாததா! (விழுந்து விழுந்து ராமனை வணங்குகிறான்.)

ராம : (பெருமை தாங்காமல்) போதுமடா, தம்பீ; அதை நானே சொல்லிக்கொண்டால் நன்றாயிருக்குமோ? ஹி ஹி ஹி... (சுக்கிரீவன் வருவது தூரத்தில் தெரிகிறது.) வாலி, வாலி, மறைந்துகொள்.

[வாலி எழாவது மரத்தடியில் மறைகிறான். சுக்கிரீவனுக்குத் தெரியும்படி அவன் மேல் ராமன் அம்பு எய்கிறான். அம்பு பட்டு வாலி 'ஆ' என்று கதறி விழுவது போல் பாசாங்கு செய்கிறான்.]

ராம : (வருத்தம் அடைந்த மாதிரி) உம்...

சுக் : (நெருங்கி வந்து கவனித்து) பிரபோ, உங்கள் வாக்கை நிறைவேற்றி விட்டீர்கள். என்ன இருந்தாலும் என் அண்ணன்; மனசு கேட்குமா? இதோ அவனுக்குச் செய்யவேண்டிய கடைசிக் கடன்களைச் செய்து முடிக்கிறேன். (போகிறான்.)

வாலி : (எழுந்து) நான் போய் வருகிறேன். (வணங்கி விடை பெற்றுக்கொள்கிறான்.)

ராம : அப்பாடா, என் மானம் தப்பியது! பின்னால் ஓர் அறிஞர் தம்புச்சாமியும் ரோமரிஷியாரும் என்னைச் சந்தியில் இழுக்க மாட்டார்கள்!

[சுக்கிரீவன் எருமுட்டை விறகுடன் மறுபடியும் வருகிறான்.]

ராம : (குரலில் ஆச்சரியம் தொனிக்க அவனை எதிர்கொண்டழைத்து) ஆகா! அந்த அதிசயத்தை என்னவென்று சொல்லுவேன்! அப்படியே அந்த வானர தேகத்தோடு அவனைச் சூரியன் வந்து தன் தேரில் ஏற்றிக்கொண்டு ஆகாய மார்க்கமாகப் போய் விட்டான், அப்பா!

சுக் : ஆகா! ஆகா! சூரிய தேவன் அவன் தகப்பனார்...என்ன பாக்கியம் பண்ணினாய், அண்ணா? என்னை இப்படித் தனியே விட்டு விட்டுப் போனாயே!...... (ஒரு குரல் அழுகிறான். பிறகு கண்ணைத் துடைத்துக்கொண்டு) பிரபோ! நீங்கள் சொன்னபடி நடந்து காட்டிவிட்டீர்கள். நான்தான் இன்னும் உங்கள் கவலையைத் தீர்க்கவில்லை.

ராம : (முதலில் புரியாமல்) என்ன சொல்கிறாய்?

லட்சு : (ராமனுடைய கவன

மறதியை எண்ணி வருத்தத்தோடு பாடுகிறான்.)

உன் நினைவெப்போ தப்பியதோ?
அடடா அடடா அடாட்டா!
காட்டுக்கு வந்தும் பயனில்லை.
கால்கட்டைத் துறந்தும்பயனில்லை
சிங்காதனம் போயும் பயனில்லை.
சீதையை இழந்தும் பயனில்லை.
அடடா அடடா அடடா அடடா
அடடா அடடா அடாடடா.

ராம : (சமாளித்துக் கொண்டு பாடுகிறான்.)

என்ன செய்வேனடா, தம்பி,
ஏது செய்வேன், உய்வேனோடா?
அன்னநடை ஜானகியை, தம்பி,
இன்று காண்பேனோடா,
[ஐயோ!... (என்ன)

[இந்தச் சமயத்தில் திடீரென்று ஹநுமான், சீதை முதலியவர்கள் அங்கே தோன்றுகிறார்கள்.]

சீதை : பிரபோ! இதோ வந்துவிட்டேன், உங்கள் கூக்குரலைக் கேட்டு!

ராம : (லட்சுமணனைப் பார்த்துத் திருதிருவென்று விழித்து) இதென்ன, தம்பீ, சீதையா? யுத்த காண்டம் முடியும்போதுதானே இவள் வரவேண்டும்? இப்போது எப்படி வந்தாள்?

ஹநுமான் : (வணங்கி) விவரமாகச் சொல்லுகிறேன், கேளுங்கள்: ராவணன் சீதா தேவியின் ஞாபகமாகவே பல நாள் நிலாவில் கிடந்தான். அதனால் அவனுக்குப் பாரிச வாயு கண்டுவிட்டது. அப்படி இப்படிக்கூட அவனால் அசைய முடியவில்லை. உங்களிடம் நேரில் மன்னிப்புக் கேட்க இதோ அவனைப் புஷ்பக விமானத்தில் அழைத்துக்கொண்டு விபீஷணன் வருகிறான். நான் அதற்கு முன்னால் சீதா தேவியை அசோக வனத்தோடு தூக்கி எடுத்து வந்துவிட்டேன்.

[அதே சமயம் புஷ்பக

விமானத்தில் ஆகாய மார்க்கமாக வந்த மண்டோதரியும் விபீஷணனும் மெதுவாக ராவணனைக் கீழே இறக்குகிறார்கள்.]

ராவணன் : (வாயைக் கஷ்டப்பட்டுத் திறந்து) ராமா, என்னை மன்னித்து விடு. நான் ஏனோ இத்தனை வருஷம் வாழ வேண்டுமென்று பிரம்மாவிடம் வரம் கேட்டேன்?

ராம : (அன்போடு) அதற்கென்ன, அப்பா, செய்வது? உன் தலைவிதியை நீ அநுபவித்துத்தானே தீரவேண்டும்! ஆனால் ஒன்று: நீ புலஸ்திய பிரம்மாவின் பேரன். உன்னைக் கொன்றிருந்தால் பிரம்மஹத்தி தோஷம் என்னைப் பிடித்து வாட்டியிருக்கும்; அதோடு உனக்காகப் பரிந்துகொண்டு அறிஞர் தப்புச்சாமியும் ரோமரிஷியாரும் என்னைச் சும்மா விட்டிருக்க மாட்டார்கள். நீ தீர்க்காயுசாக இருக்க வேண்டும், அப்பா! இராவிட்டால் இந்த மகாநுபாவர்களின் பெயர்களை அவர்கள் சிஷ்யர்கள் குப்பை மேட்டிலும், சாக்கடை யருகிலும் எழுதி வாழ்த்த ஆரம்பித்துவிடுவார்களே, பாவம்!

ராவணன் : சரி, ராமா! எனக்கு எதற்கு இனி ராஜ்யம்? நீயே எடுத்துக் கொள்.

ராமன் : ஊஹூம்..நான் மாட்டேன். உன் தம்பி கும்பகர்ணன்தானே உனக்கு அடுத்தபடி மூத்தவன்?

ராவணன் : (சிரித்துக் கொண்டே) அவனைத் தட்டி எழுப்ப யாராலும் முடியாது. அவன் தூக்க ராஜ்யத்தை ஆளட்டும். இதோ விபீஷணன் இருக்கிறான், உங்கள் பக்தன்! - அவனிடம் கொடுத்து விடுங்கள் : எனக்குச் சம்மதமே.

ராம : (இடுப்பிலிருந்து எதையோ எடுத்து விபீஷணனிடம் நீட்டிப் பாடுகிறான்.)

இந்தா விபீஷணா, லங்காபுரி
ராஜ்யம்

இந்தா விபீஷணா!

விபீஷணன் : (அதை வாங்கி வாயில் போட்டுக்கொள்ளும் போது அது பிஸ்கோத்து என்று தெரிகிறது. குரங்குகளெல்லாம் கொல்லென்று சிரிக்கின்றன.) அண்ணா, பிரபோ, வணக்கம், இனி யாரும் என்னை அண்ணனுக்குத் துரோகம் செய்ததாகச் சொல்லமாட்டார்கள். அதுவே போதும்.

[ராமன் சீதையினருகில் வந்து நிற்கிறான். மற்றவர்கள் அவர்களைச் சூழ்ந்து நிற்கிறார்கள்.]

எல்லாரும் : (பாடுகிறார்கள்.)

ரகுபதி ராகவ ராஜாராம்
பதித பாவன சீதாராம்
ஈசுவர அல்லா தேரே நாம்
ரேஷன் நீங்காதோ பகவான்!

[வேலிக்குப் பின்னால் இத்தனை நேரம் மறைந்திருந்த தலைமை உபாத்தியாயரும் இன்னும் சிலரும் விழுந்து விழுந்து சிரிக்கிற சத்தம் கேட்கிறது. சிறுவர்கள் மூலைக்கு ஒருவராக வாலைச் சுருட்டிக் கொண்டு ஓடுகிறார்கள்.

காட்டுப்பூனையும் குழந்தையும்

'சோமசன்மா'

பாபு ரொம்ப துஷ்டப் பையன். எப்போதும் விளையாடிக் கொண்டேயிருப்பான். அம்மாவின் இடுப்பில் உட்கார்ந்துகொண்டு ஒரு குச்சியை எடுத்து, "ஹை ஹை!" என்று ஓட்டுவான். அம்மா குதிரையாம்! அம்மா சாதம் பிசைந்துகொண்டு வந்து சாயங்காலம் தெருவில் அவனைத் தூக்கி வைத்துக்கொண்டு எவ்வளவோ வேடிக்கை காட்டி ஊட்டுவாள். சாப்பிடவே மாட்டான். "அம்மா—ஊம்—காக்கா!" என்று கீழே இறங்கி, காக்கையை விரட்டிக்கொண்டு ஓடிவிடுவான். ஒரு நாயைக் கண்டால் போதும். கல்லைத் தூக்கி அதன்மேல் போட்டுவிட்டுக் கையைக் கொட்டிக்கொண்டு சிரிப்பான். அவனுக்கு ஒவ்வொரு நாளும் சாதம் ஊட்டுவதற்குள் அவனுடைய அம்மாவுக்குப் போதும் போதும் என்று ஆகிவிடும். அவ்வளவு விஷமக்காரப் பயல்!

நீங்கள் சின்னக் குழந்தையாயிருந்த போது நீங்களும் அப்படித்தானே உங்கள் அம்மாவைப் படுத்தியிருப்பீர்கள்? அப்போதெல்லாம் உங்களுடைய அம்மா என்ன செய்வாள்? "இதோ பார்! பூச்சாண்டி, பூச்சாண்டி!" என்று பயமுறுத்துவாள் அல்லவா? அப்படியேதான் பாபுவின் அம்மாவும். அவன் சாப்பிடாமல் விஷமம் செய்யும் போதெல்லாம், "இதோ பார்! காட்டுப்பூனை! மியாவ்! சாப்பிட்டுவிடு! இல்லையென்றால் உன்னைக் காட்டுப்பூனையிடம் பிடித்துக் கொடுத்துவிடுவேன்!" என்று பயமுறுத்துவாள். பாபுப்பயல் பயந்துகொண்டு சாப்பிட்டு விடுவான்.

இப்படித் தினமும் சாயங்காலம் சாதம் ஊட்டும்பொழுது பாபு படுத்துவதும் அம்மா காட்டுப்பூனையைக் கூப்பிடுவதும் வழக்கமாக நடந்துகொண்டிருந்தன. இதை ஒரு நிஜமான காட்டுப்பூனை தென்னமரத்தின் மேல் உட்கார்ந்துகொண்டு கேட்டுக்கொண்டிருந்தது. அது உடனே பின்வருமாறு தனக்குள்ளாக நினைத்தது: 'இந்த அம்மா எவ்வளவு நல்லவள்! எனக்கு அந்த அழகான குழந்தையைக் கொடுத்துவிடுகிறேன் என்கிறாளே! நாம் அதைக் கட்டாயம் போய் வாங்கிக்கொள்ள வேண்டும்.'

இப்படி நினைத்த காட்டுப்பூனை மறுநாள் சாயங்காலம் இருட்டும் சமயத்தில் பாபுவின் வீட்டுவாசலில் இருந்த குப்பைத் தொட்டிக்குள் போய் மறைவாக உட்கார்ந்துகொண்டது. வழக்கம்போல் பாபுவைத் தூக்கிக்கொண்டு அவனுடைய அம்மா வந்தாள். அவளுடைய கையில் பிசைந்த சாதத்தை வைத்துக்கொண் டிருந்தாள்.

"கண்ணே இல்லையோ! இந்தா! ஆ—அம்!" என்றாள் சாதத்தை எடுத்து.

பாபு ரோட்டில் ஓடும் குதிரை வண்டியைப் பார்த்துக் கொண்டே, "அம்மா! குல்ல வண்டி!" என்று தாவித் தாவிக் குதித்துக்கொண் டிருந்தான்.

"எங்கே, கண்ணை மூடிக்கிறேன்! தங்கமோ இல்லியோ! ஆ—அம்!" என்று எவ்வளவோ சொல்லிப் பார்த்தாள் அம்மா.

பாபு அசையவில்லை. குதிரை வண்டியோடு கூடவே இறங்கி ஓட வேண்டும் என்று குதித்துக் குதித்துக் கீழே இறங்கினான்.

கடைசியில் அம்மாவுக்குப் பொறுக்க முடியவில்லை. "இதோ பாரு! காட்டுப்பூனை! பிடித்துக் கொடுத்துவிடுவேன்!" என்றாள்.

அந்தச் சமயத்தில் குப்பைத் தொட்டிக்குள் உட்கார்ந்திருந்த காட்டுப் பூனை, "ஹூம்!" என்று கனைத்தது. பாபுவின் அம்மா அதைக் கவனிக்கவில்லை. மறுபடியும், "இதோ! இருக்கிறேன்!" என்றது காட்டுப்பூனை.

யாரோ பேசுவதைக் கேட்ட அம்மா நாலுபக்கமும் திரும்பித் திரும்பிப் பார்த்தாள். யார் பேசுவது என்று தெரியவில்லை.

கடைசியில், "யாரங்கே?" என்றாள்.

"நான்தான்" என்றது காட்டுப்பூனை.

"நான் என்றால்?"

"நீங்கள் தினம் கூப்பிடுகிறீர்களே, அவன்."

"உனக்குப் பேர் கிடையாதா?"

"என் பேர்தான் காட்டுப்பூனை" என்று சொல்லிக் கொண்டே காட்டுப்பூனை வெளியில் வந்தது.

அதைக் கண்டதும் முதலில் பாபுவின் அம்மாவுக்குப் பயமாய்த்தான் இருந்தது. பிறகு பயத்தை வெளியில் காட்டாமல், "நீ இங்கே எதற்காக வந்தாய்?" என்று கேட்டாள்.

அதைக் கேட்ட அந்தக் காட்டுப்பூனை கடகட வென்று சிரித்துவிட்டுச் சொல்லும்: "என்ன மாமி! நீங்கள்தானே என்னைத் தினமும் சாயங்காலம் கூப்பிட்டீர்கள்? அதனால்தான் வந்தேன். உங்கள் குழந்தையைக் கொடுப்பதாகச் சொன்னீர்களே, அதை வாங்கிக்கொண்டு போகத்தான் வந்தேன்."

அதைக்கேட்ட அம்மா, "ஐயையோ! நான் குழந்தையைப் பயமுறுத்த அல்லவா சொன்னேன்! பெற்ற குழந்தையை யாராவது காட்டுப்பூனையிடம் கொடுப்பார்களா!" என்றாள்.

காட்டுப்பூனை, "அதெல்லாம் முடியாது! நீங்கள் ஏன் சொன்னீர்கள்? அதனால் குழந்தையைக் கொடுக்கத்தான் வேண்டும்!" என்றது.

"கொடுக்காவிட்டால் என்ன பண்ணுவாய்?"

"அப்படியே உங்களையும் சேர்த்து முழுங்கிவிடுவேன்!"

அதைக் கேட்ட அம்மாவுக்குக் கோபம் வந்துவிட்டது. "ஏ போக்கிரியே! இங்கே வந்து பயமுறுத்துகிறாயா! தடியைக் கொண்டுவந்து உன்னை நொறுக்கிவிடுகிறேன் பார்!" என்று உள்ளே போய்த் தடியை எடுத்துக்கொண்டு வரப் போனாள்.

அந்தச் சமயம் பார்த்து அந்தப் போக்கிரிக் காட்டுப்பூனை என்ன செய்தது! ஒரே பாய்ச்சலில் தாவி, கீழே நின்றுகொண்டிருந்த பாபுவைத் தூக்கி முதுகில் வைத்துக்கொண்டு ஒரே ஓட்டமாக ஓடிற்று.

பாபு என்ன செய்தான் என்று கேட்கிறீர்களா? அவன் சின்னக் குழந்தைதானே! அவனுக்குக் காட்டுப்பூனையைக் கண்டால் பயம் தெரியவில்லை. அதனால் தன் கையில் வைத்திருந்த கருங்கல் துண்டினால் காட்டுப்பூனையின் கழுத்தில் குத்திக்கொண்டே, "ஹை! ஹை!" என்று சிரித்தான்.

காட்டுப்பூனைக்குக் கழுத்தெல்லாம் காயமாய்ப் போய் விட்டது. பின் கூர்மையான கருங்கல் துண்டினால் குத்தினால் வலிக்காதா? அதனால் வலி தாங்காத காட்டுப்பூனை பின்வருமாறு நினைத்தது: 'இந்தப் பயல் போக்கிரிப்பயல். இவனைக் கொண்டுபோவதற்குள் இவன் நம்மையே கொன்றுவிடுவான். ஆகையினால் இவனைக் கீழே விட்டுவிட்டுப் போய்விடுவோம்.'

இப்படியாக நினைத்த காட்டுப்பூனை பாபுவைப் பொத்தென்று கீழே போட்டுவிட்டு ஒரே ஓட்டமாகத் தோப்புக்குள் ஓடிவிட்டது. அதற்குள் பாபுவைத் தேடிக்கொண்டு வந்த அவனுடைய அப்பாவும் அம்மாவும் சந்தோஷத்துடன் அவனைத் தூக்கிக்கொண்டு போனார்கள்.

ஆகையினால் பிள்ளைகளே! இதனால் குழந்தைகளைப் பெரியவர்கள் பயமுறுத்துவதற்காகக் "காட்டுப் பூனையிடம் கொடுத்துவிடுவேன்" என்று சொல்லக்கூடாது என்பது தெரிகிறதல்லவா?

சக்கர விளையாட்டு

‘சுண்டு’

தரையில் ஒரு பெரிய வட்டம் போட்டுக் கொள்ளுங்கள்! தூரத்தில் ஒரு நேர்க்கோடு போட்டுக்கொண்டு அதில் விளையாடப் போகிறவர்கள் வரிசையாக நில்லுங்கள். ‘ரெடி, கோ’ என்று சொல்லிக்கொண்டு வட்டத்துக்கு ஓடுங்கள். யார் கடைசியாக வருகிறானோ அவன் இப்போது வட்டத்துக்குள் தனியாக நிற்கவேண்டும்.

இனிமேல்தான் ஆட்டம் குஷியாக இருக்கும். வெளியில் இருப்பவர்கள் வட்டத்துக்குள் பாய்ந்து பாய்ந்து செல்லவேண்டும். வட்டத்துக்குள் இருப்பவன் அவர்களைப் பிடிக்கவேண்டும். அவன் கையில் ஒருவரும் அகப்படாமல் வெளியில் வந்துவிடுவதில்தான் சாமர்த்தியம் இருக்கிறது. அவன் வெளியில் வந்து ஒருவரையும் பிடிக்கக்கூடாது. ஆனால் மற்றவர்கள் வெளியிலிருந்து உள்ளே ஓடி வந்து பாய்ச்சல் காட்டலாம். அவன் யாரையாவது ஒருவனைத் தொட்டுவிட்டால் அகப்பட்டவன் அவுட். பிறகு அவன் தனியாக நின்று பிடிக்க ஆரம்பிக்கவேண்டும். கெட்டிக்காரர்களாய் இருப்பவர்களுக்கு இந்த ஆட்டத்தில் அலுப்புச் சலிப்பே ஏற்படாது.

குட்டிக் கதைகள்

முழுச் சோம்பேறி



ஒரு ராஜாவுக்கு மூன்று பிள்ளைகள் இருந்தார்கள். மூன்று பேரும் சோம்பேறிகள். ராஜா இறக்கும் போது மூவரையும் அழைத்து, "உங்களில் எவன் அதிகச் சோம்பேறியோ அவனுக்குத்தான் இந்த ராஜ்யத்தைக் கொடுக்கப் போகிறேன்" என்றான். அதைக் கேட்ட மூத்தவன், "நான்தான் அதிகச் சோம்பேறி. நான் படுத்திருக்கும்போது என் காலடியில் நெருப்புப் பற்றிக்கொண்டால் என் கால்விரல் சுட்டால்கூட நான் காலை மடக்க மாட்டேன்" என்றான். இரண்டாம் பிள்ளை, "நான் தூங்கும்போது என் தலையில் வீடு இடிந்து விழுந்தால் கூட நான் தாங்கிக்கொண் டிருப்பேன்" என்றான். மூன்றாம் பிள்ளையோ, "என்னைத் தூக்குமேடையில் நிறுத்திக் கழுத்தில் கயிற்றை மாட்டி இழுக்கப் போகிறார்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள். அப்போது யாராவது என் கையில் ஒரு கத்தியைக் கொடுத்து, 'கயிற்றை அறுத்துத் தப்பி ஓடு' என்று சொன்னால்கூட நான் அசைய மாட்டேன்" என்றான். ராஜா உடனே, "என்னுடைய மூன்றாம் பிள்ளைதான் எனக்குப் பின் பட்டத்துக்கு வரத் தகுந்தவன்" என்றான்.

பூனைக்கு ஆயிரம் பொன்!

ஒரு குடியானவன் இறக்கும்போது தன்னுடைய மகனிடம் ஒரு பூனையைக் கொடுத்து, "இதுதான் நான் உனக்குக் கொடுக்கும் ஐசுவரியம்!" என்று சொல்லி உயிர் விட்டான். குடியானவன் மகன் அந்தப் பூனையை எடுத்துக்கொண்டு ஊர்

ஊராகச் சுற்றிக் கடைசியில் வெகு தூரத்தில் உள்ள ஒரு பட்டணத்தை அடைந்தான்.

அந்த ஊரில் யாரும் பூனையே பார்த்ததில்லை. அதனால் அந்த ஊரில் எலி ஏராளமாய் இருந்தது. வீடு வாசல், அரண்மனை, தோட்டம் எங்கும் ஒரே எலியின் அமர்க்களந்தான். குடியானவன் மகன் ஒரு சத்திரத்தில் போய்த் தங்கினான். இரவில் அந்தச் சத்திரத்தில் உள்ள எலிகளையெல்லாம் பூனை அடித்து விழுங்கிவிட்டது. இந்த அதிசயத்தைக் கண்ட ஜனங்கள் அங்கே கூடி வேடிக்கை பார்த்தனர். இப்படியிருக்கையில் இந்தச் செய்தி அரசனுக்கு எட்டிற்று. இப்படி எலியைக் கொல்லும் ஒரு பயங்கர மிருகம் வந்திருக்கிறது என்று கேட்டதும் அரசன் அதைப் பார்க்க விரும்பினான். குடியானவன் மகன் போனதும் அவனை அந்த மிருகத்தை விலைக்குக் கொடுக்கும்படி கேட்டான். குடியானவன் மகனும் ஆயிரம் பொன் வாங்கிக்கொண்டு அதை விற்றுவிட்டுத் தன் ஊருக்குத் திரும்பினான். பூனையை நான்கு காவற்காரர்கள் மரியாதையுடன் அழைத்துச் சென்று அரண்மனைக்குள் விட்டனர்.

அன்று இரவு முழுவதும் பூனை வேட்டையாடிற்று. ஏராளமாக எலியைத் தின்றதால் அதற்குத் தாகம் எடுத்தது. மறுநாள் காலையில் அது 'மியாவ்' 'மியாவ்' என்று கத்திக்கொண்டு அரண்மனைக்குள் சுற்றிச் சுற்றி வந்தது. இதைக் கண்ட காவற்காரர்கள் பயந்துகொண்டு அரசனிடம் போய்ச் சொன்னார்கள். அரசன் உடனே மந்திரி சபையைக் கூட்டி ஆலோசனை செய்து, "இந்தப் பூனையார் கத்துவதைப் பார்த்தால் பயமாயிருக்கிறது. ஆகையினால் நல்ல வார்த்தை சொல்லி அவரை இந்த ஊரை விட்டுப் போய் விடும்படி கேட்டுக்கொள்ளுவோம்" என்று முடிவு செய்து தன் மந்திரிகளை அனுப்பினான். மந்திரிகள் பூனை இருந்த அறைக்குள் நின்று தலையைக்

குனிந்து வணங்கிவிட்டுப் பின்வருமாறு சொன்னார்கள்: "ஐயா எலிக்கொல்லியாரே! தயவு செய்து தாங்கள் இந்த ஊரை விட்டு வெளியில் போக வேண்டும் என்று எங்கள் மன்னர் தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறார். தங்களுக்காக ஒரு கப்பல் தயாராக இருக்கிறது." அதைக் கேட்டதும் பூனை 'மியாவ்' மியாவ்' என்றது. மந்திரிகள் உடனே அது, "முடியாது" என்று சொல்வதாக எண்ணிக்கொண்டு அரசனிடம் போய் அப்படியே சொன்னார்கள். அதைக் கேட்ட அரசன் கோபம்கொண்டு பூனையாரைக் கொல்வதற்காகத் தன் அரண்மனைக்குத் தீ வைக்கும்படி உத்தரவிட்டான். நெருப்பைக் கண்டதும் பூனையார் ஜன்னல் வழியாகத் தப்பி ஓடிவிட்டது. அது ஓடிப்போனதை அறியாமல் அரசன் அரண்மனை முழுவதும் சுட்டு எரித்துவிட்டான்!

வண்ணாத்திப் பூச்சியின் கல்யாணம்

ஒரு வண்ணாத்திப் பூச்சி கல்யாணம் செய்துகொள்ள வேண்டும் என்று தீர்மானித்தது. தனக்குப் பிடித்த ஒரு புஷ்பப் பெண்ணைத் தேடுவதற்காக நந்தவனத்திற்குள் நுழைந்தது. குளத்தில் தாமரை மலர்ந்திருந்தது. அதனிடம் போய், "பெண்ணரசி! என்னை மணந்து கொள்வாயா?" என்று கேட்டது. ராஜவம்சத்தில் பிறந்த சீமாட்டியைப் போல் தாமரை முகத்தைத் தூக்கிக் கொண்டது. 'இவ்வளவு பெரிய உறவு நமக்கு வேண்டாம்'



என்று வண்ணாத்திப் பூச்சி ரோஜாப் பூவினிடம் போய் நின்றது. தனக்குள்ளாக யோசித்தது. 'இது காலையில் பூத்தால் மாலையில் பொல பொல என்று கொட்டி விடும்; வேண்டாம்' என்று அதையும் கடந்து போயிற்று. மல்லிகைப் புதருக்குப் பக்கத்தில் வந்தது. 'மல்லிப் பெண் கண்ணுக்கு நன்றாயில்லை; வாசனைதான் வீசும். இவளும்

வேண்டாம்' என்று அதையும் கடந்து ஓர் அந்திமந்தாரையின் பக்கம் வந்தது. 'அந்தி மந்தாரை அழகுதான்; ஆனால் அல்பாயுசு. பிறந்து நாலு நாழிகைகூட வாழாது' என்று அதையும் தாண்டிப் போயிற்று. அடுத்தபடி ஒரு சண்பக மரம். அதன் பூ கண்ணுக்கு நன்றாயிருந்தது. அதைப் பார்த்து வண்ணாத்திப் பூச்சி சொல்லிற்று: "உன்னைப் பார்த்தால் தங்க விக்கிரகம்போல் இருக்கிறாய். ஆனால், உன்னிடம் நெருங்கினால் ஆளைக் கொன்றுவிடுவாய்!" இப்படியாக வண்ணாத்திப் பூச்சி ஒவ்வொரு பூவாகக் கடந்து ஒரு சாமந்திச் செடியின் பக்கம் போய் நின்று, "ஏ சாமந்திப் பெண்ணே! உன்னைத்தான் என் தர்மபத்தினியாக மணந்துகொள்ளத் தீர்மானித்திருக்கிறேன். என்ன சொல்லுகிறாய்?" என்றது. சாமந்தி சொல்லிற்று: "அப்பனே வண்ணாத்திப் பூச்சி! எனக்கு உன்னைப்போல் மூன்று பங்கு வயதாயிற்று. என்னை நீ மணக்க முடியுமா? போய் இளம் பெண்ணைப் பார்!"

இவ்விதம் வசந்த காலம் போயிற்று. மாரிக் காலம் வந்தது. வண்ணாத்திப் பூச்சி பிரம்மசாரியாகவே இருந்தது.

சிவந்த ரோஜா

ஒரு காலத்தில் ரோஜாப் பூக்கள் எல்லாம் வெண்மையாக இருந்தன. சிவப்பு ரோஜாவே கிடையாது. ஒரு நாள் காலையில் ஓர் அழகிய வெண் ரோஜா மொக்கு மலர்ந்து கண்ணை விழித்துப் பார்த்தது. எதிரில் சூரியன் தன்னையே உற்றுப் பார்த்துக்கொண்டிருப்பதைக் கண்டது. உடனே அது சூரியனை நோக்கி, "ஐயா! என்னை ஏன் அப்படி உற்றுப் பார்க்கிறீர்?" என்று கேட்டது. சூரியன் பதில் சொல்லிற்று: 'பெண்ணே! உன்னைப்போல் அழகான பெண்ணை நான் கண்டதில்லை. அதனால் தான் உன்னை உற்றுப் பார்த்தேன்.' அதைக் கேட்டதும் ரோஜாவுக்கு நாணம் வந்துவிட்டது. நாணத்தினால் முகம் குப்பென்று சிவந்துவிட்டது.



ஒரே கோட்டில் படங்கள்

டி. வி. ரங்கசாமி



கணக்குப் பாடம் என்றால் அவனுக்குக் கசப்பு விழுங்குவதுபோல. ஆனால் அவனுக்கு ரொம்பப் பிடித்தமானது...

சாம்பார் சாதம்

ஜி. எஸ். மணி

பாலாஜிக்கு அவன் அப்பா கணக்குப் பாடம் சொல்லிக் கொடுத்துக்கொண் டிருந்தார்.

"ஒரு பசு மாட்டின் விலை நாற்பத்திரண்டு ரூபாய்; அப்படியென்றால் பன்னிரண்டு பசுமாடுகளின் விலை என்ன?" என்று கேட்டார்.

பாலாஜி கணக்கைச் சிலேட்டில் போடத் தொடங்கினான். அவன் எழுதத் தொடங்கு முன்னரே தகப்பனார், "என்னடா செய்யப் போகிறாய்?" என்று கேட்டார்.

அவர் கேள்வி புரியாதவனைப் போலே பையன் விழித்தான்.

"என்னடா முழிக்கிறாய்? கணக்கு என்னவென்று புரிந்ததா?" என்று தகப்பனார் அதட்டினார்.

பாலாஜி மிரண்ட விழிகளுடன் அப்பாவைப் பார்த்தான்.

"சரி; என் மூஞ்சியை அப்படிப் பார்க்காதே; கணக்கைப் பார். ஒரு பசு மாட்டின் விலை நாற்பத்திரண்டு ரூபாய்; பன்னிரண்டு பசுக்களின் விலை தெரிய வேண்டுமென்றால் - என்ன செய்யவேண்டும்? கூட்டவேண்டுமா, கழிக்கவேண்டுமா அல்லது வகுக்க வேண்டுமா?" என்று கேட்டுத் தகப்பனார் உருட்டி விழித்தார்.

பாலாஜி மனசுக்குள்ளாக, "பெருக்கவேண்டும் - பெருக்க வேண்டும்" என்று முணுமுணுத்துக்கொண்டே யிருந்தான். ஆனால் வார்த்தைகள் வாய்விட்டுக் கிளம்ப மறுத்தன.

கணக்குப் பாடமென்றால் அவனுக்குக் கசப்பு விழுங்குவது போலத்தான்; அதிலும் அப்பாவிடம் கணக்குக் கற்றுக்கொள்வதென்றால் குலை நடுக்கம். இப்போது அவன் 'பெருக்கல்' என்று நினைத்துக்கொண் டிருந்ததையும் அவன் தகப்பனார் வேறு வகையில் கேட்டு மேலும் குழப்பி விட்டுவிட்டார். அவன் என்ன செய்

வான்? சொல்ல முடியாத பயத்துடனே அப்பாவின் முகத்தைப் பரிதாபகரமாகப் பார்த்தான்.

"என்னடா பார்க்கிறாய்? கணக்குக்கு விடை என் மூஞ்சியில் இருக்கிறதா?" என்று தகப்பனார் மீண்டும் கனத்த குரலில் கேட்டார்.

சந்தேகத்துடன், "வகுக்" என்று ஆரம்பித்தவன் அப்பாவின் பயங்கரமான முகமாறுதலைக் கண்டு 'டக்'கென்று அப்படியே நிறுத்திக்கொண்டான்.

"என்னது? வகுக்கணுமா? கன்னம் பழுத்துப் போய்விடும்; சரியாகச் சொல்லு -"

'பெருக்கவேண்டும் - பெருக்கவேண்டும்' என்று அவன் மனம் அடித்துக்கொண்டது; தப்பிதமோ என்கிற சந்தேகம் வேறு. "பெருக் - பெருக்" என்று முழுவதும் சொல்லி முடிக்க முடியாமல் திக்கிக்கொண்டு தடுமாறினான் பாலாஜி.

"என்னடா சொல்லுகிறாய்?" என்று தகப்பனார் அதட்டிக் கேட்கவே அவன் ஒரே அடியாக வாயடைத்து மலைத்துவிட்டான்.

தகப்பனார் மகா முன் கோபி. குழந்தைகளை மிகவும் கண்டிப்புடனும் கருராகவும் நடத்தவேண்டுமென்று நினைத்து, தம் மனசுக்குத் தோன்றுகிறபடி நடந்துகொள்பவர். தப்போ சரியோ, தைரியமாக வெடுக் வெடுக்கென்று பதில் சொல்லவேண்டும் என்று அவருக்கு ஆசை. ஆனால் அவன் மென்று விழுங்குவதைக் கண்டு அவருக்குக் கோபம்தான் வந்தது. "வெறும் மக்கு; வெறும் களிமண்!" என்று கர்ஜித்தார்.

"பெருக்கித் தொலைக்கவேண்டும் என்று 'வெடுக்'கென்று பதில் சொன்னால் என்ன கேடு வந்துவிடும் உனக்கு? நான் உன்னை என்ன பண்ணிவிடுவேன்? ஏன் இப்படிப் பயந்து சாகிறாய் நீ?" என்று வீடே கிடுகிடுத்துப் போகும்படி கூச்சல் போட்டார்.

நடுங்கிப் போய் பாலாஜி 'ஹோ'வென்று பிரமாதமாக அழ ஆரம்பித்துவிட்டான்.

"சீ! மூதேவி! அடித்து நொறுக்கிவிட்டது போல் சாகச அழுகையா அழுகிறாய்? கணக்குச் சொல்லும்போது இந்த அசுரக் குரல் எங்கே தொலைந்து போய்விட்டது?" என்று கையை ஓங்கினார் தகப்பனார்.

பீறிக்கொண்டு வந்த அழுகையை பாலாஜியினால் அடக்க முடியவில்லை.

"உனக்குப் படிப்பு வராது; கணக்கும் வரவே வராது; நல்ல சாம்பார் சாதமாகச் சாப்பிட்டுவிட்டு எருமைமாடு மேய்க்கத்



தான் நீ லாயக்கு; என் மூஞ்சியில் விழிக்காமல் தொலை அந்தப் பக்கம்!'' என்று இரைந்தபடியே பாலாஜியின் சிலேட்டை 'வெடுக்'கென்று பிடுங்கி வீசி எறிந்தார்.

அவன் தகப்பனார் அவனை எப்போது கோபித்துக்கொண்டாலும் இந்த வார்த்தையைத்தான் சொல்வார். அப்பா அவனை அடிக்கட்டும்; பொறுத்துக்கொள்வான்; வேறு என்ன வேண்டுமென்றாலும் சொல்லி வையட்டும்; பரவாயில்லை. ஆனால் 'சாம்பார் சாதமாகச் சாப்பிட்டு எருமை மாடு மேய்ப்பது' என்று சொல்வது அவனுக்குப் பெரிய அவமானமாகப் பட்டது.

'சாம்பார் சாதம்' என்றால் பாலாஜிக்கு மிகவும் பிடிக்கும். அதற்கும் எருமைமாடு மேய்ப்பதற்கும் என்ன சம்பந்தம் என்பது அவனுக்குப் புரியாவிட்டாலும் அதில் ஏதோ தீராத குறை இருப்பதாக மட்டும் தீர்மானித்தான்.

அடுத்தாற்போல் அவன் தம்பி கிருஷ்ணாஜியை மட்டும் அப்பா அடிக்கடி கொண்டாடி உயர்வாகப் பேசுவதை நினைத்துக் கொண்டான்.

'கிருஷ்ணுஜிதான் கெட்டிக்காரனும், புத்திசாலியாம், பெரிய படிப்பெல்லாம் படித்துவிட்டு அவன்தான் முன்னுக்கு வருவாணும். ஆனுல் பாலாஜியோ, வெறும் சாம்பார் சாதம்!'

அன்று 'சாப்பிடுவதில்லே' என்று அவன் தனக்குள்ளாகவே தீர்மானம் செய்துகொண்டான். அம்மாவிடமும் அதை மெது வாகச் சொன்னுன்.

"ஏண்டா வேண்டாம் என்கிருய்? உடம்புக்கு என்ன?" என்று அம்மா கவலேயோடு கேட்டாள்.

"என்னமோ போலிருக்கு; இன்னிக்குச் சாதம் வேண்டாம் அம்மா."

தாயார் அவன் உடம்பைத் தொட்டுப் பார்த்தாள்; நெற்றி யில் கைவைத்துப் பார்த்தாள்; நெஞ்சையும் தொட்டுப் பார்த்தாள்.

"உடம்பில் ஏதும் இருப்பதாகத் தெரியல்லேயே? ஏன் சாதம் வேண்டாம்? இன்னிக்கு உனக்குப் பிடிச்ச சாம்பார் வச்சிருக் கேனே! ஒரு வாய் சாப்பிடு" என்று அம்மா கெஞ்சினுள்.

அம்மாவின் அன்பு ஒரு புறம்; சாம்பாரின் ஆசை ஒரு புறம்; ரோசம் ஒரு பக்கம். பாலாஜிக்கு என்ன பண்ணுவதென்றே புரிய வில்லே.

"பின்னே அப்பாதான் என்னே வெறுன்னே வெறுன்னே 'சாம்பார் சாதம் சாப்பிட்டுவிட்டு எருமைமாடு மேயி'ன்னு சொல் ருரே?" என்று குரலில் அழுகை பயமுறுத்தக் கூறினுன் பாலாஜி.

எங்கோ மறைவில் இருந்தபடி அவன் சொன்னதைக் கேட்டுக் கொண்டிருந்த அப்பா எதிரில் வந்து, "அவ்வளவு ரோஷக்காரப் பிள்ளேயாய் இருந்தால் கணக்கை ரைட்டாப் போட்டுக் காட்ட ணும். இல்லாவிட்டால் வெறும் சாம்பார்தான்" என்று சொல்லிச் சிரித்தார்.

மறுபடியும் தன்னேக் கேலி பண்ணுவதாக எண்ணிக்கொண்டு பாலாஜி பெரிய குரலெடுத்து அழ ஆரம்பித்துவிட்டான்.

இதைப் பார்த்துக்கொண் டிருந்த கிருஷ்ணுஜி, "அப்பா அப்பா! பாலாஜி ஏன் அசடு மாதிரி அழருன்? ஏன் சாப்பிட மாட்டேங்கருன்? அவன் அசடுதானே; இல்லேயா அப்பா?" என்று கொஞ்சினுன். அவனுக்கு மூன்றரை வயதுதான்.

"டே பாலாஜி! பாருடாலே! உன் தம்பி கிருஷ்ணுஜிகூட உன்னே அசடு என்கிருன். அவன் கெட்டிக்காரனு, நீ கெட்டிக் காரனுடா?" என்ருர் அப்பா.

பாலாஜி அளவற்ற ஆத்திரம் தொனிக்க, "ஆமாம்; உனக்கு எப்பவுமே அவன்தான் ஒசத்தி. அவன் என்ன விஷமம் பண்ணினு லும் அவனை மட்டும் கோவிச்சுக்கவே மாட்டே; 'அப்பா-கொப்பா-தொப்பா'ன்னெல்லாம் பேசருன்; அதுமட்டும் என்னவாம்? அடி-உதை - வசவு - திட்டு எல்லாம் எனக்குத்தான். நான் சாம்பார் சாதம்! உனக்குக் கிருஷ்ணுஜிதான் சமத்து!" என்று அழுகை யோடு அழுகையாகக் கொட்டித் தீர்த்துவிட்டான்.

பாலாஜிக்கே தான் அந்த மாதிரி பேசியதில் எவ்வளவோ திருப்தி ஏற்படத்தான் செய்தது.

அப்பா கிருஷ்ணுஜியிடம் அன்பாகப் பேசிப் பழகுவதைப் போலே அவனிடம் நடந்துகொள்வதில்லை. கிருஷ்ணுஜிதான் எவ்வளவு விஷமம் செய்கிருன்! ஒரு நாள் பாலைக் கொட்டிவிட் டான்; அம்மா அடிக்க வந்தாள்; அப்பா, 'குழந்தையை அடிக் காதே! வேணுமென்ரு கொட்டினுன்?' என்று சொல்லி, அவனைத் தட்டிக் கொடுத்தார். இன்னொரு நாள் அப்பாபேனவை அவன் கீழே போட்டு உடைத்துவிட்டான்; அதற்கும் அப்பா அவனைக் கண்டிக்கவே இல்லை. இவனைப்பற்றி அந்தப் பயல் கோள் வேறு சொல்லிக் கொடுக்கிருன்! "ஏண்டா, குழந்தையைப் பயமுறுத்து கிருயா?" என்று அப்பா இவனை அதட்ட வந்துவிடுகிருர்!

'அப்பாவை மட்டும் யாரும் கண்டிக்கவில்லையே? அம்மாவும் பாட்டியுங்கூட அவருக்குப் பயப்படுகிருர்களே!' என்று எண்ணி னுன் பாலாஜி. 'நானுங்கூட அப்பாவாக ஆகிவிடக்கூடாதா! அப்போது எல்லோரையும் அதட்டி அடக்கலாமே? இல்லா விட்டால் கிருஷ்ணுஜியைப்போலே ஆகிவிடவேண்டும்! அப்பா அவனைத்தானே கொண்டாடுகிருர்? அவன் மட்டும் சாம்பார் சாதம் சாப்பிடுவதே இல்லையோ? நான் சாப்பிடும்போதெல்லாம் அவனுந்தான் சாம்பார் சாதம் சாப்பிடுகிருன்! அதனுல் அவனுந் தான் சாம்பார் சாதம்!' என்று எண்ணிக்கொண்டான் பாலாஜி.

அப்போது கிருஷ்ணுஜியே அவனைக் கூப்பிட்டுக்கொண்டு அங்கு வந்தான்.

"டே பாலாஜி! ரெயில் விளையாட்டு விளையாடலாம் வாடா!"

"போடா! நான் ஒண்ணும் விளையாட வரவில்லை, போ!"

"டே? வாடா பாலாஜி! ரெண்டு பேருமா விளையாடலாம்!"

"சரிதான் போடா; நான் வரல்லே; நான் உன்னேடெ டூ!"

"டூ விட்டயானு அப்பாகிட்டெ சொல்லுவேன்!"

"போடா! போய் இப்பவே அப்பாகிட்டெ சொல்லுடா!" என்று கிருஷ்ணுஜியை அப்படியே பின்புறமாகத் தள்ளிவிட்டான் ஆத்திரத்திலே.

அந்த வேகம் தாங்காமல் கிருஷ்ணுஜி அப்படியே பின்பக்க மாகச் சாய்ந்து விழுந்துவிட்டான். தலையில் லேசாக அடிபட்டு விட்டது.



கிருஷ்ணுஜியின் ஓலம் வீட்டை அலறவைத்தது.

அம்மா ஓடிவந்தாள்; அப்பாவும் வந்தார்; "என்னடா? என்ன?" என்று கேட்டார்கள்.

"அப்பா! பாலாஜி என்னைப் பிடிச்சு அப்படியே கீழே தள்ளிட்டான் அப்பா!" என்று சொல்லிக்கொண்டே கிருஷ்ணுஜி பிரமாதமாக அழுதான்.

தகப்பனுர் பாலாஜியைப் பார்த்து, "குழந்தையைத் தள்ளினுயா?" என்று கேட்டார்.

பாலாஜிக்கும் அழுகை பீறிக்கொண்டு வந்துவிட்டது. "இல்லெப்பா! விளையாடக் கூப்பிட்டான்; வரல்லேன்னேன்; 'அப்பா கிட்ட சொல்லுவேன்'னுன்: சொல்லுடா போடான்னு இப்படித் தொட்டுத் தள்ளினேன்; கீழே விழுந்துட்டானப்பா; நான் வேணுமின்னு தள்ளவே இல்லேப்பா" என்று விக்கிக்கொண்டே அவன் சொன்னுன். "இல்லேப்பா, இனிமேல் இல்லேப்பா!" என்று பயந்து கெஞ்சினுன்.

தகப்பனுர் பாலாஜியை நெருங்கினுர்; அன்புடன் தடவிக் கொடுத்தார். "பயப்படாதே பாலாஜி! இனிமேல் நான் உன்னை அடிக்கவேமாட்டேன். நீ ரொம்ப நல்லவன். நீ வேணுமென்று அவனைத் தள்ளிவிடவில்லை என்பது எனக்குத் தெரியும். அழாதே. சமர்த்தாக அவனேடு சேர்ந்து விளையாடு" என்று அன்போடு சொன்னுர்.

பாலாஜியால் நம்பவே முடியவில்லை. அப்பாவா இத்தனை பிரியமாகப் பேசுகிருர்! சொல்ல முடியாத ஆனந்தத்தால் அவன் குழந்தையுள்ளம் குதிபோட்டது.

பாலாஜிக்குச் சந்தோஷம் தாங்கவே முடியவில்லை. சாம்பார் சாதம் சாப்பிடும் ஆனந்தத்தைவிடப் பன்மடங்கு ஆனந்த மடைந்தான்.

கறுப்பு முயல்

'ராஜி'

கொழுத்த வெள்ளை முயல் ஒன்று இருந்தது. பார்ப்பதற்கு மிகவும் அழகாக இருக்கும். அதற்கு மணி என்று பெயர். அதன் மாமனார் வீடு வெகு தூரத்துக்கு அப்பால் உள்ள ஒரு காட்டில் இருந்தது. தலை தீபாவளிக்கு மாமனாரிடத்திலிருந்து அழைப்புக் கடிதம் வரவே மணி ஆனந்தம் கொண்டது.

ரெயிலுக்கு நாழிகை ஆகிவிட்டதால் ஓட்டம் ஓட்டமாக ரெயில்வே ஸ்டேஷனுக்கு வந்தது. அப்பொழுது ரெயிலும் வந்துவிட்டது. டிக்கட் வாங்க, தன் மணி பர்ஸைப் பார்த்தது. கழுத்தில் மாட்டியிருந்த பர்ஸைக் காணவில்லை. முயல் வேகமாக ஓடி வந்ததில் அது எங்கேயோ விழுந்துவிட்டது. பாவம்! மணி முயலுக்கு ஒன்றும் தோன்றவில்லை. திரும்பி அதன் வீட்டிற்குப் போய்ப் பணம் எடுத்து வரப் போதிய நேரமும் இல்லை. டிக்கட் வாங்காமலே வேகமாகச் சென்று எஞ்சினுக்கு அடுத்த முதல் வண்டியில் ஏறிக்கொண்டது.

ரெயில், 'ஊ ஊ' என்று கத்திக்கொண்டே, 'குப் குப்' என்று வேகமாகக் கிளம்பிவிட்டது. மாலைப் பொழுது ஆயிற்று. வானமும் இருட்டிவிட்டது. ரெயில் நிற்கப்போகும் அடுத்த ஸ்டேஷன் தன் மாமனார் ஊர் என்று அறிந்தவுடன் மணி முயல் தன் மனைவியைப் பார்க்கப் போகிற சந்தோஷத்தினால் ரெயில் வண்டியில் இங்கும் அங்குமாக அலைந்துகொண்டிருந்தது.

அந்தச் சமயத்தில், "எங்கே, டிக்கட்!" என்று கேட்டுக்கொண்டே டிக்கட்டுகளைப் பரிசோதிக்கும் யானை ஒன்று வண்டியில் ஏறிற்று. யானையைப் பார்த்தவுடன் டிக்கட் வாங்காமல் வண்டியில் இருக்கும் மணி முயலின் உடல் நடுக்கம் எடுத்தது. மெதுவாகப் பெஞ்சியின் அடியில் பதுங்கிற்று. பலகையில் இருந்த ஓட்டை ஒன்று அதன் கண்ணில் பட்டது. 'ஓட்டையின் வழியாகச் சென்று அடுத்த



வண்டிக்குப்போய் விடலாம். அதற்குள் அடுத்த ஸ்டேஷனும் வந்துவிடும். யானை கையில் அகப்படாமல் தப்பித்துவிடலாம்' என்று எண்ணிற்று. ஓட்டையின் வழியாக வெளியே வந்தது. எஞ்சினுக்குப் பின் கரி வைக்கும் இடத்தில் குதித்தது. தன் உடம்பெல்லாம் கரித் துண்டுகளால் மூடப்பட்டபடி ஒரு மூலையில் பதுங்கியது.

அடுத்த ஸ்டேஷனில் ரெயில் நின்றது. மணி முயலை வரவேற்பதற்காக ஸ்டேஷனில் அதன் மாமனாகிய பெரிய முயல் தனது சிறிய பெண்ணுடன் நின்றுகொண்டிருந்தது. மணி முயல் தப்பித்துக்கொண்டோம் என்று கரிக் குவியலிலிருந்து மெதுவாக எழுந்திருந்தது. அந்தச் சமயத்தில் மணி முயலை யாரோ கெட்டியாகப் பிடிப்பதுபோல் இருந்தது. "என்னிடமிருந்து தப்பித்துக்கொள்ளலாம் என்று எண்ணிணாய்?" என்று சொல்லிக்கொண்டே தன் துதிக்கையினால் கீழிருந்தபடியே மணி முயலைத் தூக்கிக் கீழே நிறுத்தியது யானை. அத்துடன் இல்லாமல் அந்தக் கரி வண்டியில் துதிக்கையை இப்படியும் அப்படியுமாக ஆட்டி, டிக்கட் வாங்காமலே உள்ளே பதுங்கி இருந்த எலி, தவளை, பூனைக்குட்டி, நாய்க் குட்டி, அணில், நண்டு முதலியவைகளை ஒவ்வொன்றாகத் தூக்கிக் கீழே நிறுத்தி வைத்தது. தப்பித்துக் கொண்டோம் என்று நினைத்த அவைகள் அவமானத்தினால் தலையைக் குனிந்துகொண்டன.

"எங்கே, எல்லோரும் 'கியூ' வரிசையாக நில்லுங்கள்! ஸ்டேஷன் மாஸ்டரிடம் உங்களை ஒப்படைக்கிறேன்" என்று

யானை சொன்னவுடன் எல்லாம் பயந்து க்யூ வரிசையாக நின்றன. எல்லாவற்றையும்விட முயல் உயரமாக இருந்ததனால் க்யூ வரிசையில் அது முதலாக நின்றது. பாவம்! வெளிச்சத்தில் தன் உடம்பைப் பார்த்ததும் முயலுக்குத் தூக்கி வாரிப் போட்டது. நல்ல வெண்மையாக இருந்த முயலின் உடம்பு நல்ல கறுப்பாக இருந்தது.

க்யூ வரிசையில் போய்க்கொண்டிருக்கும் பொழுது மணி முயல் தன் மாமனார் நிற்பதைப் பார்த்துப் பயந்தது. ஆனால் மணி முயலின் மாமனார் கறுப்பு மணியை அடையாளம் புரிந்துகொள்ளவில்லை. 'தப்பித்தோம்' என்று நினைத்தது மணி. டிக்கட் வாங்காதவர்களை யானை ஸ்டேஷன் மாஸ்டரிடம் ஒப்படைத்துவிட்டுச் சென்றது. "டிக்கட் பணத்தை இரட்டிப் பாகக் கட்டுங்கள். இல்லாவிட்டால் உங்களை ஜெயிலில் போடுவோம்" என்று ஸ்டேஷன் மாஸ்டர் நரி கண்டிப்பாகச் சொல்லிற்று.

பரிதாபகரமாக நிற்கும் மணி முயலைப் பார்த்தது ஒரு பணக்கார முயல். பக்கத்திலிருந்த தன் மனைவியைக்கூப்பிட்டு, "அடி, இதோ பார்த்தாயா, இந்தக் கறுப்பு முயலை! கறுப்பாக இருந்தாலும் பார்ப்பதற்கு மிகவும் அழகாக அல்லவா இருக்கிறது? நம் இனத்தில் கறுப்பு முயலே கிடையாது. கறுப்பு முயல் இருந்தால் அதிருஷ்டம் என்று சொல்லுவார்கள். ஏதோ பாவம், டிக்கட் தொகையை நாம் கட்டிவிட்டு



இந்தக் கறுப்பு முயலை ஏன் அழைத்துக்கொண்டு போகக் கூடாது? நம் பெண் நீலத்துக்கு இந்தக் கறுப்பு முயலைக் கல்யாணம் செய்து வைத்து வீட்டிலேயே வைத்துக்கொள்ள லாம். நீ என்ன சொல்கிறாய்?'' என்று கேட்டது. பணக் கார முயலின் மனைவியும் சரிதான் என்று சொல்லிற்று.

"கறுப்பு முயலாரே, டிக்கட் பணத்தை நான் கட்டி விட்டேன். நீங்கள் என் வீட்டுக்கு வாருங்கள். என்னுடன் தீபாவளி இன்று கொண்டாடுங்கள். மற்றவைகளைப் பிறகு பேசிக்கொள்ளலாம்'' என்றது பணக்கார முயல். மணி முயலுக் குத் தன்னைக் கறுப்பு முயல் என்று அழைத்தது பிடிக்கவில்லை. உண்மையைச் சொல்வதற்கும் வெட்கப்பட்டது. கறுப்பு வேஷத்தோடு தன் மனைவியைப் பார்க்கவும் பிரியப்படவில்லை. ஆதலால் பணக்கார முயலோடு சென்றது.

மணி முயலுக்குப் பணக்கார முயல் வீட்டில் மிகுந்த உபசாரங்கள் நடந்தன. தனக்குப் புருஷனாகப் போகிற கறுப்பு முயலுக்குப் பணக்காரப் பெண் நீலம் என்ற முயல் மிகுந்த மரியாதைகள் செய்தது. 'வீட்டு மாப்பிள்ளை, வீட்டு மாப்பிள்ளை' என்று சொல்லிக்கொண்டே பணக்கார முயலின் வீட்டு வேலைக்கார நாய்கள் எப்பொழுதும் மணி முயலையே கவனித்துக்கொண்டிருந்தன. மணி முயலுக்கு ஒன்றும் புரியவில்லை. அங்கு நடந்த உபசாரங்கள் எல்லாம் அதற்கு அவஸ்தையாகவே இருந்தது. பணக்கார முயலும் அதன் மனைவியும் மணி முயலின் அருகிலேயே இருந்து, "என்ன வேண்டும், என்ன வேண்டும்?'' என்று கேட்டுக்கொண்டிருந்தன.

விடியற்காலம் நெருங்கிற்று. மணி முயலுக்காக உயர்ந்த பலவிதமான தின்பண்டங்கள் செய்திருந்தன. பணக்கார முயல் தன் வேலைக்கார நாய்களைக் கூப்பிட்டு, "கறுப்பு முயலுக்கு நன்றாக எண்ணெய் ஸ்நானம் செய்து புதிய வஸ்தி ரங்களைக் கட்டிவிடுங்கள்'' என்று உத்தரவிட்டது.

பணக்கார முயல் தன் பெண் சிறிய முயலுக்குச் சிறு வெடி மத்தாப்பு முதலியவைகளைச் சுட்டுக் காண்பித்துக் கொண்டிருந்தது. அப்பொழுது வேலைக்கார நாய்கள் ஓடோடி யும் வந்து, "ஐயா, வந்த முயல் கறுப்பு முயல் இல்லீங்க. வெள்ளை முயலுங்க! எண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்தவுடன் அதன் உடம்பில் இருந்த கரியெல்லாம் போய் நல்ல வெள்ளை யாக ஆய்விட்டதுங்க. அது சாதாரண முயலுதானுங்க'' என்று சொன்னவுடன் பணக்கார முயல் கோபம் கொண்டது.

"அயோக்கிய முயலே! டிக்கட் வாங்காமல் என்னை ஏமாற்றி என் பெண் நீலத்தைக் கல்யாணம் செய்துகொள்ளலாம்

என்று நினைத்தாய்? உடம்பு முடிவதும் கறுப்புவர்ணத்தைப் பூசிக்கொண்டு காடு காடாகத் திரியும் நாடோடி முயலா நீ? என் வீட்டை விட்டு நீ இப்பொழுதே ஓடாவிட்டால் உன்னை என்ன செய்கிறேன், பார்!" என்று சொல்லிக் கொண்டே முயலிடம் ஓடிவந்து கோபத்தினால் தன்கையில் இருந்த ஒரு கட்டுச் சீனவெடிக்கட்டைக் கொளுத்தி முயலின் மேல் விட்டெறிந்தது.

சீனவெடிகள் 'டப், டுப்' என்று முயலின்மீது வெடித்தன. பயந்த முயல் நாலுகால் பாய்ச்சலில், வாசல் கதவு தாழிட்டிருந்ததனால் கூரைமீது ஏறிக் குதித்துத் தப்பித்துக்கொண்டது. "அப்பாடி, பிழைத்தோம்! சற்றுச் சிரமப்பட்டாலும் என்மீது படிந்திருந்த கரித்தூள் போய் உடம்பு சுத்தமாக ஆகிவிட்டது. இப்பொழுதே ஓடோடியும் சென்று மாமனார் வீட்டை அடைந்து மனைவியுடன் தலை தீபாவளி கொண்டாடுவோம்" என்று மாமனார் வீடு அடைந்தது.

மாப்பிள்ளை மணி முயலைப் பார்த்ததும் மாமனார் முயலுக்குச் சந்தோஷம். "மாப்பிள்ளை, நல்ல சமயத்துக்கு வந்தீர்கள். நேற்று ரெயில்வே ஸ்டேஷனுக்கு வந்திருந்தேன். ஆனால் நீங்கள் வரவில்லை. இப்பொழுது ரெயில் ஒன்றும் கிடையாதே. எப்படி வந்தீர்கள்?" என்று விசாரித்தது. "வாருங்கள். உங்களைப் பார்த்தால் ஏதோ பயந்து ஓடி வருவதுபோல் தோன்றுகிறது. உங்கள் உடம்பில் நெருப்புச் சுட்டதுபோலப் பல இடத்தில் காணப்படுகிறது" என்று மணி முயலின் மனைவி விசாரித்தது. ஆனால் இதற்கெல்லாம் மணி முயலிடமிருந்து பதில் வரவில்லை. மணி முயல் தன் மனைவியுடன் சந்தோஷமாகத் தலை தீபாவளி கொண்டாடியது.



பனமரப் புதையல்

கா. ஸ்ரீ. ஸ்ரீ.

காசப்பன் நல்ல உழைப்பாளி. காலையில் ஆறு மணிக்குப் போனால் சாயந்தரம் ஆறு மணிவரைக்கும் ஓயாமல் வேலை செய்வான். அவனுக்கு இன்ன வேலைதான் தெரியும்; இன்னது தெரியாது என்பதில்லை. வீடு கட்டுவான்; தோட்டம் போடுவான்; துணி வெளுப்பான்; வண்டி ஓட்டுவான். ஒரு வேலையும் கிடைக்காவிட்டால் தொம்ப வித்தை செய்வான்.

கழையின் உச்சாணியிலே தலை கீழாகத் தொங்கிக் கொண்டு, இரண்டு பையன்களைப் பல்லால் உறுதியாகத் தாங்குவான். அவன் பல்லிலிருந்து தொங்கும் கயிற்றைப் பிடித்துக்கொண்டு அந்த இரண்டு பையன்களும் ஊசலாடுவார்கள். இந்த வேடிக்கையைப் பார்த்து ஜனங்கள் கை கொட்டிச் சிரிப்பார்கள். மடமடவென்று காசை வீசி எறிவார்கள். ஒரு நிமிஷத்திலே நாலைந்து ரூபாய் சேர்ந்துவிடும்.

இப்படி அவன் அன்றாடம் உழைத்துக் கொண்டு வரும் பணத்தை உடனே கரியாக்குவதற்கு வீட்டிலே அவன் மனைவி இருந்தாள். அவள் பெயர் பாக்கியம். காசப்பன் கொண்டுவரும் பணம் அவளுக்கு ஒரு நாளைக்குப் புகையிலைக்குக் காணாது.

"இதோ பாரு, இந்த ரூவாயிலே என்ன ஆயிடும்னு நெனச்சே? சாமான் என்ன வெல விக்குது? ஒனக்குச் சோறும் கஞ்சியும் காச்சி ஊத்தக்கூட இது காணாதே!" என்று அவள் அந்தப் பணத்தைக் கோபத்தோடு வீசி எறிவாள்.

"இன்னைக்கி இதை வெச்சுக் கோங்கறேன். நாளைக்கு நிறையப் பணம் கொண்டாரேன்" என்று காசப்பன் அவளைச் சமாதானப்படுத்துவான்.

"நீ எங்கானும் போயி நல்லா ஒழைச்சு வேலை செஞ்சால்ல? சும்மாப் போக்குக் காட்டிக் கிட்டு, இந்தப் பிச்சைக் காசைக் கொண்ணாந்தா ஆயிடுச்சா?"

"பாக்கியம், ஒனக்கு ஒழைச்சுச் சம்பாரிச்சு நடவாது. எங்கேயானும் பொதையல் கிடெக்குதான்னு தேடுறேன்."

"சரி, சரி; சும்மாக் கதை பேசிக்கிட்டு இருக்காதே. தோட்டம் நாலு நாளாத் தண்ணியில்லாமெ காயுது. போயி நாலு சால் தண்ணி எறையேன்!"

காசப்பன் குடத்தை எடுத்துக் கொண்டு கிணற்றுப் பக்கம் போனான். பாத்திக்குத் தண்ணீர் பாய்ச்சிக் கொண்டே யோசனை செய்தான். என்ன உபாயம் செய்

தால், அவனுடைய மனைவிக்கு நிறையப் பணம் கொண்டு வரலாம்?

நன்றாக இருட்டிவிட்டது. கறுத்த ஆகாயத்திலே பளிச்சென்று தென்பட்ட ஒரு நட்சத்திரம் அவனைப் பார்த்துச் சிரித்தது. குலைகுலையாகப் பழங்கள் தொங்கிய பனமட்டைகளுக்குமேலே அந்த நட்சத்திரம் சிம்மாசனத்தில் உட்கார்ந்த மன்னன்போல அவன் கண்ணுக்குத் தோன்றிற்று. திடீரென்று அவனுக்கு ஒரு யோசனை உதயமாயிற்று. இந்த உயர்ந்த பனமரத்தின்மேல் ஏறி மேலே மேலே மேலே போனால் அந்த நட்சத்திரத்தைப் பிடித்துவிடலாம். அப்புறம் அங்கே சொர்க்கத்தைப் பார்க்கலாம்.

காசப்பன் சின்னப் பையனாக இருந்தபோது, அவனுடைய தாத்தா அவனிடம் எத்தனையோ தடவை, ''இந்தப் பனமரம் சொர்க்கமடா, பயலே!'' என்று சொல்லியிருக்கிறார். சொர்க்கம் என்ற அந்த வார்த்தையை அவரிடந்தான்



அவன் முதல் முதலில் கேட்டான்.

"சொர்க்கத்திலே என்ன தாத்தா இருக்கும்?"

"நிறையப் பொம்மைகள் இருக்கும். விதம் விதமான பட்சணங்கள் இருக்கும். எங்கே பார்த்தாலும் விமானங்கள் பறக்கும். குவியல் குவியலாகக் காசும் பொன்னும் கொட்டிக் கிடக்கும்."

ஒன்ரு, இரண்டா? தாத்தா அந்தப் பனமரத்துச் சொர்க்கத்தைப்பற்றி என்ன என்னவோ கதைகள் சொல்லியிருக்கிருர். எப்படியாவது என்றைக்காவது ஒரு நாள் அந்தச் சொர்க்கத்தை இந்தக் கண்ணுல் பார்த்து விடவேண்டும் என்று குழந்தை காசப்பன் பல தடவை நினைத்தது உண்டு.

ஆனல் பெரியவனுகி வேலை செய்ய ஆரம்பித்ததும் இதையெல்லாம் அடியோடு மறந்து விட்டான். இன்று அந்த நட்சத்திரத்தைப் பார்த்ததும் அவனுக்குப் பழைய ஞாபகமெல்லாம் வந்தது.

'எப்படியும் பாக்கியம் சமைத்துப்போட இரவு பத்து மணி ஆகும். அதற்குள் ஏறித்தான் பார்க்கலாம். அங்கே புதையல் கிடைத்தால் கொண்டுவந்து, இந்தப் பாக்கியத்தின் எதிரே வீசி எறிந்துவிடலாம்' என்று நினைத்து, அவன் பனமரத்தின் மேல் ஏறிஞன்.

பனமரத்தில் ஏறுவது அவனுக்குப் புதிசல்ல. அவன் எத்தனையோ தரம் அதில் ஏறிப் பனம்பழங்களைக் குலை குலையாகத் தள்ளியிருக்கிருன். ஆனல் இவ்வளவு உயரம் அவன் என்றைக்குமே ஏறியதில்லை. மேலும் மேலும் போனன்; போய்க்கொண்டே இருந்தான்.

இருட்டையெல்லாம் தாண்டியதும் பளிச்சென்று ஒரு வெளிச்சம் தெரிந்தது.

அதோ ஒரு ராட்டினம் கிர்கிர்ரென்று சுழலுகிறது. அதிலிருந்து கலகலவென்று பொன்னும் வெள்ளியுமாகக் கொட்டுகிறது.

சற்றுத் தள்ளி, பளிங்கு மேஜையிலே ஐஸ்கிரீம், திராட்சை ரசம், டொமெட்டோ ஜூஸ்! அந்தப் பக்கம் மலாய்காஜா, லோன் பப்படி, குலாப்ஜாமுன்! அடடா அடடா! 'நான் சொர்க்கத்துக்கு வந்துவிட்டேன்!' என்று காசப்பன் கூச்சல் போட்டான். பசி தீர எல்லாவற்றையும் சாப்பிட்டு விட்டு, நிறையப் பணத்தையும் கட்டிக்கொண்டு கீழே இறங்கலாம் என்று நினைத்தான்.

உடனே அவனுக்குப் பாக்கியத்தின் ஞாபகம் வந்தது. 'பாவம்! அவளைத் தனியே விட்டு நாம் மட்டுமா இவ்வளவு சுகத்தையும் அநுபவிப்பது? போய் அவளையும் இங்கே அழைத்து வரலாம்' என்று எண்ணிஞன்.

காசப்பன் வீட்டுக்குள்ளே நுழைந்தபோதுதான், பாக்கியம் அரிசியைக் களைந்து அடுப்பிலே வைத்தாள்.

"அடி பாக்கியம், அடி பாக்கியம்!" என்று அவன் ஆனந்தத்தால் கூவிஞன்.

"நான் எங்கேந்து வறேன், தெரியுமா? சொர்க்கத்தைப் பாத்துட்டு வர்றேன்!" என்ருன்.

"பசித்தூக்கத்திலே ஏதானும் கனுக் கண்டிருப்பே."

காசப்பன் தான் கண்ட காட்சியை யெல்லாம் விவரித்துச் சொல்லி, "அந்த ராட்டினந் தான் என்ன அழகு, எப்படிச் சுத்துதுங்கறே! நம்ப வீட்டுலே குப்பைமாதிரி அங்கே பணம் கொட்டிக்கிடக்குது!" என்ருன்.

பாக்கியத்தின் கண் வியப்பினுல் மலர்ந்தது.

காசப்பன் சிறிது நேரம் யோசித்தான். மணியான யோசனே ஒன்று தோன்றிற்று.

"உன்னுடைய இடுப்பில் ஒரு கயிற்றைக் கட்டி அதை நான் பல்லில் மாட்டிக்கொள்கிறேன். சொர்க்கத்துக்குப் போனதும் உன்னே அவிழ்த்து விட்டுவிடுகிறேன். எப்படி என் யோசனே!" என்று பெருமிதத்தால் கொக்கரித்தான்.

"என்னே உன் பல் தாங்குமா?"

"ஹேய்! என் தொம்ப வித்தையை நீ என்னிக்காவது பாத்திருந்தாத்தானே ஒனக்குத் தெரியப் போவுது? வரும்போது உன்னே மட்டும் இல்லே; சொர்க்கத்திலே இருக்கிற அத்தனே பணத்தையும் அத்தனே சாப்பாட்டையும் மூட்டையாகக் கட்டி இதே பல்லுலே தாங்கி நான் கொண்டாரல்லேன்னு என் பேரு காசப்பன் இல்லே!" என்று அவன் மார் தட்டினன்.

பாக்கியத்துக்கு வெகு சந்தோஷமாக இருந்தது. ஆகாய



விமானத்தை அவள் கண்ணுல் பார்த்திருக்கிருளே தவிர, இப்படி அந்தரத்திலே ஒரு நாளாவது பிரயாணம் செய்ததில்லே. உயரத்திலே போகப் போகக் காற்று ஜில்

லென்று வீசியது. குளு குளு வென்று இருந்தது.

சற்று நேரம் பொறுத்து, "அஹஹா; அதோ பாத்தியா, ராட்டினம் சுழலுது!" என்று காசப்பன் உத்சாகத்தோடு கூவினன்.

தொப்பென்று ஏதோ ஓசை கேட்டது. ஏதாவது பனம் பழம் விழுந்திருக்கும் என்று எண்ணி, காசப்பன் கீழே பார்த்தான். பாக்கியம் தரையை நோக்கிப் பாய்வது தெரிந்தது.

'பாக்கியத்துக்கு இந்தச் சொர்க்கம் பிடிக்கவில்லைபோல் இருக்கிறது. அதனுல்தான் அவள் கட்டை அறுத்துக் கொண்டு திரும்பி வீட்டுக்குப் போகிருள். சொர்க்கத்துக்கு வரக்கூடக் கசக்குது; மூதேவி!' என்று நினைத்து, காசப்பன் கீழே இறங்கினன். அவள் வீட்டுக்குத் திரும்பும்போது அவன் மட்டும் எப்படிச் சொர்க்கத்துக்குப் போவது?

காசப்பன் கீழே வந்து பார்த்தான். பாக்கியம் பேச்சு மூச்சில்லாமல் விழுந்து கிடந்தாள். அவன் ஜில்லென்ற தண்ணீரை அவள் முகத்தில் அடித்தான். வைத்தியரைக் கூப்பிட்டு வந்தான். நல்ல வேளையாக அவளுக்கு மூச்சு வந்தது.

"என்னடி இப்படி வந்துட்டியே பாதி வழியிலே! மறுபடியும் வர்றியா, போவலாம்!" என்று அவளைக் கேட்டான்.

"போதும் போதும் நீ சொர்க்கம் பாத்த அளகு! பனமரத்திலே குந்திக்கிட்டு, வாயை ஹான்னு தொறந்திட்டா, சொர்க்கம் பாத்துட்டதா நெனைப்பா! நான் பணம் கேட்கிறது பிடிக்கல்லேன்னு அதுக்கு இப்படியாப் பழி வாங்கணும்!"

"அட! சொர்க்கம்னு சும்மாத்தானு? அது அல்லாருக்கும் சுலபமாத் தென்பட்டுடுமா? என்னெப்போலே கருத்தோடே நீ பாக்கணும்: அப்போ தெரியும். நீ கொடுத்து வச்சது அவ்வளவுதான். அதுக்கு என்னை எதுக்குத் திட்டுறே?" என்று சொல்லிக் கொண்டே, காசப்பன் ஆகாயத்தில் பளிச்சிட்ட நட்சத்திரத்தைப் பார்த்துச் சிரித்தான்.

அவன் அன்று நாள் முழுவதும் உழைத்துவிட்டு அலுப்போடு வந்திருக்கிருன். மனைவி மேலும் மேலும் பணம் கேட்டு அவனைத் தொந்தரவுபடுத்தினள். அதற்குப் பிறகு அவன் தோட்டத்தில் தண்ணீர் பாய்ச்சி மடை கட்டி வேலை செய்ததில் அவனுக்கு அகோரப் பசி உண்டாயிற்று. தாத்தா சொன்ன பனமரச் சொர்க்கம் ஞாபகத்துக்கு வரவே அவன் ஏதோ வேடிக்கையாக ஏறிப் பார்த்தான். அந்த மயக்கத்திலே சொர்க்கத்தையும் அங்கிருந்த புதையலையும் கண்டதாக நினைத்துவிட்டான். 'சொர்க்கமாவது, புதையலாவது! காசப்பனுவது, கண்டதாவது!' என்று யார் சொன்னுலும் அவனுக்கு அதைப்பற்றி அக்கறை இல்லை.

அவன் என்னவோ, தினமும் மாலை நேரத்தில் அந்த நட்சத்திரத்தை ஆசையோடு பார்க்காமல் இருப்பதில்லை.

வனதேவதை

கல்பகம்

அழகான முயல். வேட்டை நாய்கள் துரத்துவதைக் கண்டு பயந்து ஓடிவந்தது. அரசன் கையில் எடுத்துக் கொண்டான். அதன் உடம்பெல்லாம் நடுங்குவதைக் கண்டு பரிதாபப்பட்டு, "பயப்படாதே! உன்னை நான் என் அரண்மனைக்கே கொண்டு போவேன்" என்றான்.

அரண்மனையில் முயல் அருமையாய் வளர ஏற்பாடு செய்தான் அரசன். நடு நிசி சமயத்தில் அரசனுக்கு விழிப்பு ஏற்பட்டது. எதிரே முயல் இருந்த இடத்தில் ஒரு வனதேவதை இருப்பதைக் கண்டான். அந்த வனதேவதையின் முககாந்தி கண்ணைப் பறித்தது.

"ராஜன், என்ன பார்க்கிறாய்? நான் வனதேவதைதான். உன்னுடைய சிறந்த குணத்தைக் கண்டு எனக்குச் சந்தோஷமுண்டாகிறது. என்ன வேண்டுமோ, கேள்! தருகிறேன்" என்றாள் வனதேவதை.



அரசன் சிரம் குனிந்து வணங்கி, "தேவி, நான் கேட்பதற்கு என்ன இருக்கிறது? எனக்கோ வயசாகி விட்டது. ஒன்று மட்டும் தான் எனக்குத் தேவை. எனக்கு இருப்பது ஒரே பையன். அவனுக்கு எப்போதும் உன் அருள் இருக்க வேண்டும். வேறென்ன வேண்டும்? செங்கோல் செலுத்தும் சிறந்த அரசனாக அவன் விளங்க வேண்டும். கொடுங்கோல் மன்னன் என்று பெயரெடுக்கக் கூடாது" என்றான்.

வனதேவதை, "சரி" என்று ஒப்புக்கொண்டாள். அதற்குப் பிறகு ராஜா கொஞ்ச நாளில் இறந்து போனான்.

ராஜகுமாரன் ராஜாவானான். அவன் தந்தை இறந்ததை நினைத்து வருந்தினான். ஒருநாள் இரவு அவன் தனியாக இருந்தபோது அந்த வனதேவதை அவன் எதிரே தோன்றினாள். "குமாரா, வருத்தப்படாதே. இந்தா, இந்தச் சங்கிலியை அணிந்துகொள். உனக்கு நன்மையே உண்டாகும். நீ தவறு ஏதாவது செய்தால் இது உனக்கு அறிவித்துவிடும். அதிலிருந்து உன்னைத் திருத்திக்கொள். நீ நல்வழி நடந்தால்தான் என் அன்புக்குப் பாத்திரமாவாய். இல்லையோ நான் உனக்கு உபகாரமே செய்ய மாட்டேன்" என்று கூறிவிட்டு வனதேவதை மறைந்து போனாள்.

ராஜகுமாரன் அது முதல் சந்தோஷமாய் இருந்தான். திடீரென்று ஒரு நாள் சாயங்காலம் முதல் தடவையாக அவன் அணிந்திருந்த சங்கிலி மெதுவாக ஊசி போலக் குத்திற்று.

ராஜகுமாரனுக்குக் காரணம் விளங்கவில்லை. சோலையில் இருந்த ஒரு பூஞ்செடியை மான்குட்டி ஒன்று தின்றுவிட்டது. ராஜகுமாரன் கோபம் கொண்டு அதை அடி கொடுத்து விரட்டி விட்டான். இது ஒரு குற்றமா?

'இவ்வளவு பெரிய தேசத்துக்கு நான் ராஜாவாய் இருந்துதான் என்ன பெருமை? ஒரு மான்குட்டியை அடித்து விரட்டக் கூட எனக்கு உரிமை இல்லையா? இது ஒரு தவறா?' என்று அவன் எண்ணினான்.

"ஆமாம்; தவறுதான்" என்றது ஒரு குரல். திரும்பிப் பார்த்தபோது வனதேவதை அங்கு நின்றிருந்தாள்.

"அன்பு காட்ட வேண்டிய அந்த எளிய பிராணியை நீ அடிக்கலாமா? உன் காவலாளி அல்லவா ஜாக்கிரதையாக இருந்திருக்க வேண்டும்? நீ என்னைவிட எளியவன். அதனால் நான் உன்னை அடித்து விடுவதா?"

ராஜகுமாரன், "இனி இப்படிச் செய்ய மாட்டேன்" என்று ஒப்புக் கொண்டு தன் மாளிகைக்குச் சென்றான்.

அது முதல் அடிக்கடி இப்படி ஏதாவது நடந்து கொண்டேயிருந்தது. அடிக்கடி சங்கிலி ஊசிபோலக் குத்திக் கொண்டேயிருந்தது. ஆனால் வனதேவதை வருவதேயில்லை. ராஜகுமாரனுக்கு எல்லாரும் அடி பணியப் பணிய அவனு

டைய கர்வம் மேலோங்கி வந்தது. அதிகாரம் செய்வதும் அட்டகாசம் புரிவதும்தான் ராஜகுமாரனுக்கு இயற்கையானது என்று அவன் நினைத்தான்.

அரண்மனையில் எவ்வளவு அடிமைகள் இல்லை! அவர்களில் ஓர் அடிமையை ஒரு சாட்டையை எடுத்து, ''சீச்சீ! என்னடா மரம் போல நிற்கிறாய்?'' என்று அவன் ஒரு நாள் இரண்டு இழுப்பு இழுத்து விட்டான்.

அடிமை அலறினான். அன்று சங்கிலியும் அவனைப் பலமாகக் குத்தி விட்டது. ரத்தம்கூட வந்து விட்டது.

''சனியன் பிடித்த சங்கிலி! இதைப் போட்டுக்கொண்டால் தானே என்னை அடிக்கடி இப்படி வதைக்கும்? கழற்றி வைத்து விடுகிறேன்'' என்று ஆத்திரங் கொண்டு அதைப் பெட்டியில் வைத்துவிட்டான்.

பிறகு கேட்க வேண்டுமா, அவனுடைய அட்டகாசத்துக்கு? அண்டுவார், அடக்குவார் எது? போதும் போதாததற்குத் துர்ப்புத்தி நண்பர்கள் வேறு சேர்ந்து கொண்டார்கள்! அதனால் தந்தையின் காலம் முதல் உழைத்து வந்த முதல் மந்திரி சுமாலியின் பேச்சும் அவனுக்குக் கசந்தது.

இளமையும் அழகும் நிறைந்த ராஜ குமாரனை ஜனங்கள் நேசிக்க வேண்டியது போக வெறுக்கும்படியாக அவன் மாறிப்போனான். எல்லாரும் அவனைத் துஷ்டன் என்று நிந்தித்தார்கள். ராஜகுமாரன் இதற்காகச் சிறிதும் கவலைப்படவில்லை. இந்திர விழா என்றும் சந்திர விழா என்றும் கொண்டாடினான். அப்போது தான் அவன் ஸாரங்கி என்ற பெண்ணைச் சந்தித்தான். அவள் அழகிலே அவன் சொக்கிப் போனான். இத்தனைக்கும் அவள் ஒரு குடியானவப் பெண்தான். ஆனால் அத்தகைய சௌந்தரியம் எந்தக் கந்தர்வப் பெண்ணுக்குத்தான் உண்டு!

ராஜனுடைய ஆக்கினைப்படி அவள் அரண்மனைக்குக் கொண்டு வரப்பட்டாள். ஸாரங்கி முகம் வாட்ட மடைந்திருந்தது. "பெண்ணே! உன் முகம் வாட்டமடைய நான் என்ன செய்தேன்? நீ இந்தப் பெரிய ராஜ்யத்தின் ராணியாகப் போகிறாயே!" என்றான்.

ஸாரங்கி கணீரென்ற குரலில் பேசினாள்:

"ராஜாதி ராஜனே, ஏழையைக் கல்யாணம் செய்து கொண்டாலும் கொள்வேனேயல்லாமல் உங்களைக் கல்யாணம் செய்துகொண்டு ராணியாக மாட்டேன்."

"ஏன்? என்னைப் பிடிக்கவில்லையா உனக்கு? உனக்கேற்ற அழகு இல்லை என்று நினைக்கிறாயா?" என்றான் ராஜகுமாரன்.

ஸாரங்கி அரச குமாரனைப் பார்த்தாள். அந்தப் பெரிய ராஜ மாளிகையைப் பார்த்தாள். விலை மதிப்பற்ற அதன் ஆடம்பரங்களைப் பார்த்தாள். சிங்கார ஜோடனைகளைப் பார்த்தாள்.

"இதெல்லாம் இருந்து எனக்கு என்ன பிரயோஜனம்? இந்தப் பெரிய பதவிக்குரிய குணம் உங்களுக்கு இல்லையே!" என்று மிடுக்காகக் கூறினாள்.

ராஜகுமாரனுக்கு ரௌத்திராகாரமான கோபம் பிறந்தது. "கொண்டு போய் இவளைக் கொட்டடியில் அடையுங்கள்" என்று கர்ஜித்தான். அடுத்த கணமே இரண்டு வாள் வீரர்கள் அவள் கையில் விலங்கு

பூட்டி வெளியே இழுத்துக் கொண்டு போனார்கள்.

அன்று மாலையே ராஜகுமாரன் தன் நண்பர் சிலருடன் சிறைக்கூடத்துக்குச் சென்றான். 'இவளுடைய கர்வமெல்லாம் அடங்கிப் போயிருக் ... போனதும் காலில் வந்து ...' என்று எண்ண ... யே உள்ளே எட்டிப் ... ன்.

... ல் ஸாரங்கியை அங்கே ... வில்லை. ராஜகுமாரனுக்கு ... பட்ட திகைப்புக்கும் ... பத்துக்கும் ஓர் எல்லை ... லை.

"... க்குத் தெரியும், இது ... னுடைய வேலைதான்!" ... ஒரு நண்பன்.

... குமாரன் சிறிதும் தயங்க ... லலை. யோசிக்கவும் இல்லை. "அப்படியா சேதி! யாரடா அங்கே? போய்க் கொண்டு வாருங்கள், அந்தக் கிழப்பயலை என் முன்னால்" என்று கட்டளையிட்டு விட்டுச் சென்றான்.

அரண்மனைக்குள் அவன் நுழைந்ததும் கலகலவென்று பெரிய சிரிப்பொலி கேட்டது. வனதேவதைதான். ராஜகுமாரன் திடுக்கிட்டான். "ஏ, ராஜகுமாரா! உன்னுடைய கொடுமையை இன்னும் காணச் சகிக்கமாட்டேன். பெரிய கருங்குரங்காக மாறி உன் கோபத்துக்குரிய தண்டனையை அநுபவி, போ!" என்று சபித்தாள் வனதேவதை.

ராஜகுமாரன் வாளை உருவிக்கொண்டு முன்னால் பாய்ந்தான். வனதேவதை மாயமாய் மறைந்து போய்விட்டாள்.

அடுத்த கணமே அவன் நடுக்காட்டில் பெரிய கருங்குரங்காய் மாறிப்போய் நின்றான். அப்பப்பா! என்ன பயங்கரம், என்ன கோரம்! அவனுக்கே ஓடையில் தன் உருவத்தைப் பார்த்துக் கொள்ளப் பயங்கரமாய் இருந்தது.

"ஹ - ஹ - ஹா! இப்பொழுது என்ன சொல்கிறாய்! உன் கோபம் எங்கே? உன் ராஜ்யம் எங்கே?" என்று கேலி செய்தாள் வனதேவதை.

கருங்குரங்கோ வெருண்டு ஓடியது. மரத்துக்கு மரம், கிளைக்குக் கிளை தாவியது. கீச் கீச்சென்று கூக்குரலிட்டுக் கரணம் போட்டது. கடைசியாக, காட்டைத் தாண்டி நகரத்தை அடைந்தது.

நகரமெங்கும் ஓரே அமளி குமளிப்பட்டுக்கொண்டிருந்தது. "தொலைந்தான் ராஜகுமாரன்! அவன் கொடுமை ஒழிந்தது!" என்று ஜனங்கள் பேசிக் குதூகலித்தார்கள். மற்றொரு புறம் வேறு மகிழ்ச்சிகரமான ஏற்பாடுகள் நடந்தன. சுமாலியின் தலையில் அரசபதவி

யைச் சுமத்தி ஜனங்கள் கிரீடத்தையும் சூட்டினார்கள். பட்டாபிஷேகத்தன்று அரண்மனையில் எள் போட்டால் எள் விழ இடமில்லை. கருங்குரங்கு மாளிகைச் சாளரத்தில் ஒளிந்து கொண்டு அந்த வைபவத்தைப் பார்த்துக்கொண்டிருந்தது. கம்பீரமான தோற்றத்துடன் சுமாலி சிம்மாசனத்தில் கொலுவீற்றிருந்தான்.

“அன்பார்ந்த பிரஜைகளே! இந்த மணி மகுடத்தை நான் மறுக்கமாட்டாமல் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் நம்முடைய ராஜகுமாரன் இறக்கவில்லை என்றே எனக்கு தோன்றுகிறது. அவன் சகவாச தோஷத்தினால் நம்மையெல்லாம் கொடுமைப் படுத்தினானே ஒழிய, வேண்டுமென்றே செய்யவில்லை. நாம் அவனுடைய நடத்தையைத்தான் வெறுக்கிறோம். அவனை வெறுக்கவில்லை. நாளைக்கே அவன் திரும்பி வந்து நம்மையெல்லாம் சரியாகப் பரிபாலிக்கக் கடவுள் அருள் புரியட்டும்” என்று சுமாலி மனமுருகப் பேசி முடித்தார்.

கருங்குரங்காய், அவலக்ஷணமாய் இருந்த ராஜகுமாரன் சுமாலியின் நல்ல குணத்தை அப்போதுதான் உணர்ந்தான். ‘ஆஹா, இவ்வளவு நல்ல மனிதரை மோசமாய் எண்ணினோமே’ என்று வருந்தினான். காலங் கடந்து வருந்தி என்ன பயன், அழுதுதான் என்ன பயன்?

திடீரென்று தெருவில் ஒரே ஆரவாரம் கேட்டது. பையன்களுடைய கண்ணில் கருங்குரங்கு தென்பட்டுவிட்டது. பிறகு அவர்களைக் கேட்கவேண்டுமா கல்லைப் பொறுக்கி விட்டெறி தார்கள். ஹாய், ஹூய் என்று சத்தம் போட்டார்கள். ஆன கருங்குரங்கு எல்லாவ பொறுத்துக்கொண்ட களில் முக்கியமாய் செய்த பையனை அது கொண்டே வந்தது. னுக்கோ உத்சாகத் கால் தெரியவில்லை. பாலத்தில் ஓரமாய் விட்டான். இன்னும் தான்! அவன் ஆற்றில் விடுவான். நுங்கும் மாகப் பெருகி ஓடு வெள்ளத்தில் விழுந்தா தொலைந்து போகவே தான். ‘அட பாவமே நம்மை அடித்து விட்டு போகட்டும். ஆற்றில் விழுந் தொலையப் போகிறானே. இவ எப்படிக் காப்பாற்றுவது என்று நினைத்தது குரங் அவ்வளவுதான். அடுத்த நிமிஷ அவன் மீது பாய்ந்து பாலத் லிருந்து வெளியில் கொண் வந்து அவனை விட்டது.

எங்கிருந்தோ அந்தக் குரா கின் காதில் ஒரு பேச்சுக்குர கேட்டது: “இதோ நீ செய் நன்மையின் பலன்!”

மறுநொடியில் குரங்கு உ வத்திலிருந்த ராஜகுமாரன் அ கிய நாயாக மாறினான் நாயாக இருந்தபோது ஒரு பி சைக்காரப் பெண்ணிடம் அ தாபம் காட்டியதால் அவன் மறுபடியும் வெண் புறுவா மாறிப்போனான். ‘சரி, இன

நமக்கு விரைவில் வனதேவதையின் அருள் கிட்டும்' என்ற நம்பிக்கை ஏற்பட்டு விட்டது அவனுக்கு. உடனே ஸாரங்கியின் நினைவும் வந்தது. அவன் ஸாரங்கியைத் தேடி அன்ன ஆகாரம்கூட இன்றி எங்கெல்லாமோ பறந்தான்.

பெரிய மலை; அதன் அருகே ஓர் ஓடை. அங்கே ஸாரங்கி உட்கார்ந்திருந்தாள். வெண்புருவின் ஆனந்தத்துக்குக் கேட்க வேண்டுமா? "ஸாரங்கி, ஸாரங்கி! நான் செய்ததெல்லாம் தப்பு. என்னைப் பார்! நான் முன்போல இனி இருக்கமாட்டேன்" என்று சொல்ல நினைத்தான். ஆனால் அவன்தான் புருவாக இருக்கிறானே!

ஸாரங்கி அந்த அழகிய புரு... கைகளில் ஏந்தி, சீராட்டி... "நீதான் எவ்வளவு அழ... ...ிருக்கிறாய்! என்னைத்தேடி ...கைகளில் அமர்ந்த உன்னை நான் என்றும் பிரியேன்."

திடீரென்று எங்கிருந்தோ இனிமையான கீதம் ஒலித்தது. எதிரே வனதேவதை தோன்றி அந்தப் புருவைத் தொட்டாள். புரு ராஜகுமாரனாக நின்றான். ஸாரங்கி திகைத்துப் போனாள். "ஸாரங்கியைச் சிறையிலிருந்து மீட்டது, நான்தான் ராஜகுமாரா. உன் உருவம் மாறுதல் அடைந்துவிட்டது. இனி எப்போதும் நல்லவனாகவே இருப்பாய் என்று நம்புகிறேன். நீங்கள் என்றென்றும் அந்நியோந்நியத்துடன் சுகமாய் வாழ்ந்திருங்கள்" என்று ஆசீர்வாதம் செய்தாள்.

ராஜகுமாரன் ஸாரங்கியின் கைகளைப் பற்றினான். வனதேவதையின் அருள் அவர்களுக்குக் கிடைத்தது. ராஜ்யத்துக்குத் திரும்பினார்கள். ராஜ்யமும் கிடைத்தது. சுமாலிதான் கொடுக்கக் காத்துக்கொண்டிருந்தாரே!



சித்திரம் : தாணு

இரு சகோதரர்கள்
மந்திரமும் மாயமும் நிறைந்திருந்த காலம் அது. தீரமும் வீரமும் கலந்த சாகசச் செயல்களுக்குத்தான் மதிப்பு இருந்தது. அதனால் தந்திரமும் சூழ்ச்சியும் அதிக-மாயிருந்தன. அந்தக்காலத்தில் சிற்றன்னையின் கொடுமை தாங்காமல் தேசத்தை விட்டு வெளியேறின இரு ராஜகுமாரர்களுடைய கதை இது....
முன்னொரு காலத்தில் ஒரு ராஜாவுக்கு குமார் சுகுமார் என்று இரண்டு புத்திரர்கள் இருந்தார்கள்
பாவம், அந்த இரண்டு குழந்தைகளையும் பெற்ற அரசி இறந்து போனாள்
ராஜாவின் மறுமண வைபவங்கள் பிரமாதப்-பட்டன!
சித்தியின் கொடுமை தாங்காமல் நாட்டை விட்டு வெளியேறினார்-கள்
மரியாதை கெட்ட கழுதைகளா! போட்டதைத் தின்-கிறீர்களா, இல்லையா?
சாதமெல்லாம் ஒரே மண்ணு... சித்தி
வழியில் ஒரு பெரிய பாறை-யில் தங்கிக் களைப்பாறும் போது......
.... ஒரு பூதம் எதிரே தோன்றியது
இந்த மாயக்கல்லில் வந்து அமர்ந்தவர்களில் மூத்தவன் ராஜா ஆவான். இளையவன் மந்திரி ஆவான்
பூதம் மறைந்த உடன் அவர்கள் மீண்டும் புறப்பட்டார்கள்
அடடா! பாறையிலே குதிரைச்சவுக்கை மறந்து வைத்து விட்டேன்!
சரி, அண்ணா நீ இறங்கி நடந்து கொண்டே இரு நான் போய் குதிரைச் சவுக்கைக் கொண்டு வருகிறேன்

சுகுமார் பாறைக்குச் செல்லும் வழியில்
சுகுமார பாம்பிடம் அகப்பட்டு இப்படி தவித்துக்கொண்டிருக்கையில் குமார் கால்நடையாகவே, பக்கத்து நகரை அடைந்தான். அந்த நாடெங்கும் ஒரே பரபரப்பு
என்னப்பா விசேஷம்?
எங்க ராஜா செத்துட்டாரு
கோட்டை வாசல்தாண்டி கூட்டத்தில் நுழைந்தான் குமார்
குமார் அருகில் வந்ததும் யானை அவன் கழுத்தில் மாலையை போட்டு
அவன் முன் மண்டியிட்டது
யானையின் தீர்ப்பின்படி இனிமேல் நீங்கதான் எங்களுக்கெல்லாம் ராஜா

குமார் அந்த நாட்டு ராஜா ஆகிறான்
எங்கும் தேடிப் பார்த்து விட்டோம். குதிரையோ, அந்த தம்பியோ காணோம்
சுகுமாரன் என்ன ஆனான் என்று பார்ப்போம்
பாம்பினால் கொல்லப்பட்டு சுகுமாரன் கீழே சுருண்டு கிடந்தான்
ஒரு மந்திரவாதியும் அவன் மனைவியும் அங்கே வருகிறார்கள்
பெரிய மந்திரவாதி என்று சொல்லிக்கிறேளே. எங்கே, இவனைப் பிழைக்க வையுங்கள் பார்க்கலாம்
நான் ஒரு வேலை செய்கிறேன். பார்!
போய் அந்த குட்டையிலிருந்து ஜாடியில் ஜலம் கொண்டுவா
வா! என்ன ஆச்சரியம் அந்தக்குட்டை ஜலமெல்லாம் இந்த ஜாடியில் வந்துடுத்தே!
ஓம், ராம் ரீம், ரைம் ....
அந்த கணம் அங்கே ஒரு பாம்புக் கூட்டம் வருகிறது
குட்டையில் ஒரு சொட்டு ஜலம் கூட இல்லையே! நீங்கதான் எப்படியாவது எங்களுக்கு ஜலம் கிடைக்கும்படி செய்யவேண்டும்
அப்படியானால் இதோ இவனுடைய உயிரைத் திருப்பிக் கொடுங்கள்
பாம்புகள் சுகுமாரனைச்சுற்றி வந்தன. சுகுமாரன் எழுந்திருக்கிறான்.

அண்ணன் குமார் போன வழி தெரியாமல் சுகுமாரன் எங்கெல்லாமோ சுற்றிவிட்டு ஒரு ராஜ்யத்-துக்குப் போய்ச் சேருகிறன்
பாட்டீ, பசியாயிருக்கு. ஏதானும் ஆகாரம் கிடை-க்குமா?
பாட்டீ, ஏன் வருந்தமாயி-ருக்கிறய்? என்ன விசேஷம்?
அதை ஏன் கேக்கருய்? இந்த ஊரிலெ ஒரு ராக்ஷஸன் இருக்கான். அவனுக்கு ஒரு பையன், ஒரு ஆடு, ஒரு கூடை தோசை தினம் பலி கொடுத்தாகணும். இன்னி-க்கு என்முறை. நான் பையனுக்கு எங்கே போக?
ஏன் பாட்டீ இந்த ராக்ஷ-ஸனை யாரா-வது கொல்லப் படாதோ?
ராக்ஷஸனைக்-கொல்லறவாளுக்கு தன் பெண்ணையும் பாதி ராஜ்யத்தையும் கொடுப்பதாகக்கூட ராஜா சொல்லியிருக்-கார். ஆனுல் ஒருவரா-லும் முடியவில்லெ
இன்னிக்கு நான் போறேன் பாட்டீ. எனக்கு ஒரு கத்திமட்டும் கொடு...
ராக்ஷஸன் பொல்லாதவன், ஜாக்கிரதை!
கத்தியுடன் ராக்ஷஸன் குகை வாசலில் காத்திருக்கிறன் சுகுமாரன்
அகப்பட்டயா, பயலே இதோ ஒரே முழுங்கு

84199

ஹர் — ஹர்
தொலைந்தயா ராக்ஷஸப்பதரே
நானேக்கு ராஜ குமாரியும் பாதி ராஜ்யமும் எனக்குக் கிடைக்கும்
களைப்பா யிருக்கு கொஞ்சம் தூங்கி விட்டு, பிறகு ராஜாவைப் போய்ப் பார்க்கலாம்.
அவ்விடம் ஒரு தலையாரி வந்தான்
ஆ! ராக்ஷஸன் தலை! இதை ராஜாவிடம் நான் கொண்டு போய் விடுகிறேன்
நானாயிலேருந்து நான் ராஜா— எனக்கு ஒரு ராணி
நீயா கொன்றுய், என்னல் நம்பமுடியவில்லையே!
ஆமாங்க, நான் தான் கொன்றேன் அதிலென்ன சந்தேகங்க?
இவன் கொன்றிருப்பானு? இவனுக்கா நம் பெண்ணைக் கொண்டு போய்க் கொடுப்பது!
அப்பா தலையாரி! ராஜ்யத்தில் பாதி எடுத்துக்கொள்.. ஆனல் என் பெண்ணுக்கு ஒரு விரதம். ஒரு வருஷம் போகட்டும். கல்யாணம் செய்து கொடுக்கிறேன்
உத்தரவுங்க
தலையாரி ராஜாவாகிறன்

ஐய்யோ, ராக்ஷஸன் தலையைக் காணோமே!
நீ சொல்வதை யார் நம்பப்போகிறு! யாரோ ஒரு தலையாரியாம், ராக்ஷஸன் தலையைக் காட்டி, ராஜாவாயிட்டாளமே.
வஞ்சகன்!
சுகுமார் பாட்டி வீட்டிலேயே தங்குகிறுன். சிற்பவேலை பழகிக்கொள்கிறுன்
நகரசோதனையின் பொழுது, தலையாரி ராஜா அவனைப்பார்க்கிறுன்.
ஓ! இந்தப்பையன் இங்குதான் இருக்கிறுனு? இவன் இருப்பது ஆபத்து!
வாணிபம் செய்யும் சில வியாபாரிகள் தலையாரி ராஜாவைப் பேட்டிகாண வருகிறுர்கள்.
துறைமுகத்தில் சாமான்கள் ஏற்றி கப்பல்கள் காத்துக்கிடக்கின்றன. சரியான காற்று வீச வில்லை. நரபலி கொடுத்தால்தான், கப்பல் நகருமாம்
எனக்கு நம் நாட்டுமக்களைப் பலிகொடுக்க இஷ்டமில்லை.... ஆ..... ஞாபகம் வருகிறது சிற்பவேலை செய்யும் ஒரு இளைஞன் இருக்கிறுன். அவன் வெளிதேசத்தவன். அவனைக் கொண்டுவர ஏற்பாடு செய்கிறேன்
நரபலிக்காக சுகுமாரைக் கப்பலுக்கு இழுத்துச் செல்கிறுர்கள்
கொஞ்சம் அவகாசம் கொடுங்கள். நான் நொடியில் காற்றை வர வழைக்கிறேன்
அப்படியானுல் அவனை அந்த அறையில் தனியாக இருக்க விட்டு, காவல் இருங்கள்
அறைக்குள்
இவர்களுக்கென்ன ரத்தம்தானே வேண்டும் இதோ.......
என்று சொல்லிக்கொண்டு விரலை நறுக்கிக்கொள்கிறுன்
என்ன மாயமிது காற்று திரும்பி விட்டதே. கப்பல் எல்லாம் நகருகிறதே
எல்லாம் இந்தப்பையன் வேலை தான்!

உன்னிடம் ஏதோ ஓர் அற்புத சக்தி இருக்கிறது— நீ எங்களுடனேயே இருக்க வேண்டும் ...... சரிதானே?
கப்பல் எங்கெல்லாமோ சுற்றி விட்டு, கடைசியாக ஒரு ராஜ்யத்தை அடைந்து துறைமுகத்தில் நங்கூரம் பாய்ச்சி நின்றது ...
வியாபாரவிஷயமாக அந்நாட்டு மந்திரி கப்பலுக்கு விஜயம் செய்கிறார். அவருடன் அவர் குமாரி மஞ்சுளாவும் வருகிறாள்
சுகுமாரனையும் அவன் சிற்பவேலைகளையும் மந்திரிகுமாரி காண்கிறாள்
ஆஹா, என்ன அழகான சிற்பங்கள். இதை எல்லாம் நீங்களா செய்தீர்கள்?
இந்தப்பாலையாவது கொஞ்சம் குடியம்மா!
தோழியின் உதவியால் மஞ்சுளாவும் சுகுமாரனும் ரகஸ்யமாகச் சந்தித்துவந்தார்கள்.
யாரோ ஒரு நாடோடி; அவனைப் போய் நீ அடிக்கடி சந்திப்பதாவது. எல்லாம் எனக்குத் தெரியும்.........
உன் தந்தை ஆக்ஷேபிக்கும் போது நீ இப்படி வருவது உனக்கும் ஆபத்து, எனக்கும் ஆபத்து
மஞ்சுளா கப்பலுக்குத்தான் போயிருப்பாள். அவளை இழுத்து வாருங்கள். அந்தப் பயலையும் தொலைத்து விடுங்கள்
ஹா! ஹா!! ஹா!!!
தத்தளித்துக் கரை வந்து சேருகிறான் சுகுமாரன்
இந்த நேரத்தில் நீதியே கிடையாதா? நேரில் அரசனிடம் போய் புகார் செய்யலாம்.

ஆராய்ச்சி மணி! யாரங்கே? உள்ளே அழைத்து வாருங்கள்.
ஹா! என் தம்பி..... சுகுமார்!
ஹா! அண்ணா
ஹா! இந்தச் சிறுபி நம் அரசரின் தம்பியா? தெரியாமல் போய்விட்டதே!
குமாரும் சுகுமாரும் நடந்த வைகளை எல்லாம் பேசிக் கொண்டிருக்கையில்.....
விபரீதமாய்ப் போய்விட்டதே இப்போது என்ன செய்வது?
இது தான் நடந்த கதை அண்ணா!
ரொம்ப ஆச்சரிய-மாக இருக்-கே!
அரசே! உங்கள் தம்பி என்று தெரியாமல் தவறாக நடந்துகொண்டு விட்டேன். மன்னிக்க வேண்டும்....
நான் செய்த தப்புக்குப் பிராயச்சித்த-மாக மந்திரிப்பதவியிலிருந்து விலகிக்-கொள்கிறேன். உங்கள் தம்பியே மந்திரி ஆகட்டும். மஞ்சுளாவை அவருக்கே மணம் செய்து கொடுக்கத்தயார்
கல்யாணத்துக்கு முன் அந்தத் தலையாரி ராஜாவை ஒரு கை பார்த்து விட்டு வருகிறேன்
சீக்கிரம் வந்து-விடுகிறேன். கவலைப்படாதே மஞ்சுளா!
தூங்கும் போது தலையைத் திருடின தலையாரிப்பயலே! எடுத்துக்கொள் உன் கத்தியை
என்ன அசி-ரோட விட்டு-டப்பா. நான் எங்கேயாவது ஓடிப் போயிடறேன்
தலையாரிக்குப்பாதி ராஜ்யம் கொடுத்த ராஜா வீரன் சுகு-மாரனை வரவேற்று...
....என் வாக்குப்-படி பாதி ராஜ்யத்தை-யும் பெண்ணையும் உனக்கு...
இல்லை. என் அண்ணாவுக்கே உங்கள் பெண்-ணையும் பாதி ராஜ்யத்தையும் கொடுத்து விடுங்-கள்
இரு சகோதரர்களும் மணம் புரிந்து கொண்டு நீடூழி

கிளிகளின் தேசபக்தி

பெ. தூரன்

பச்சைக்கிளி பார்ப்பதற்கு எத்தனை அழகாக இருக்கிறது! பவழம் போல் சிவப்பான வளைந்த மூக்கு. வட்டவட்டமாகக் கண்கள். பச்சையான உடம்பு. கிளியின் பேச்சைக் கேட்கக் கேட்க ஆனந்தம். 'அக்கக்கா, ரங்க ரங்கா' என்று அது என்ன வெல்லாமோ பேசும்.

இப்படிப் பேசக்கூடிய அழகான ஆயிரம் பச்சைக் கிளிகள் ஒரு பெரிய ஆலமரத்திலே உட்கார்ந்திருந்தன. எல்லாம் உற்சாகமாகப் பேசிக்கொண் டிருந்தன.

ஒரு கிளி சொல்லியது: "அக்கக்கா, தோழர்களே! நாம் இன்றைக்குக் கிழக்குத் திசையிலே போவோம். இங்கிருந்து பன்னிரண்டு மைல் போனால் அங்கே ஓரிடத்திலே நெல் ஏராளமாக விளைந்திருக்கிறது. அவற்றைக் கொண்டு வந்துவிடலாம்" என்று அந்தக் கிளி சொல்லியது.

இன்னொரு கிளி, "அது நல்ல சம்பா அரிசியாகுமா? நமது அரசன் பாரிவேளுக்கும், அவருடைய வீரர்களுக்கும் நாம் தினமும் அரிசியிலே முதல்தரமான கிச்சிலிச் சம்பாவாகத்தான் கொண்டு வந்து கொடுக்கவேண்டும். நமது தாய்நாடாகிய பறம்பு மலையை அவர்கள் தங்கள் உயிரைக் கொடுத்தும் காப்பாற்றத் தயாராக இருக்கிறார்கள். நாம் அவர்களுக்கு நல்ல சோறு தேடிக் கொடுக்க வேண்டாமா? அது நம்முடைய கடமை அல்லவா?" என்று அந்தக் கிளி ஆவேசமாகப் பேசிற்று.

"ஆமாம் ஆமாம், நல்ல சோறு கொடுக்க வேண்டும்" என்று 999 கிளிகள் உரக்கக் கூவின.

ஆயிரம் கிளிகளில் ஒரு கிளி மட்டும் பேசாமல் மற்றக் கிளிகளைக் கவனித்துக்கொண் டிருந்தது. அந்தக் கிளிதான் சேனாதிபதி. அதன் உத்தரவுப்படிதான் மற்றக் கிளிகள் நடக்க வேண்டும். அந்தச் சேனாதிபதிக் கிளி, "ஹாய், வீரர்களே! நீங்கள் சும்மா பேசிக்கொண் டிருந்தால் நெல் கிடைத்துவிடுமா? நம் அரசர் பாரிவேளின் படைவீரர்களுக்கு உணவு கிடைக்குமா? வெறும் பேச்சால் ஒரு காரியமும் நடக்காது. ஆகையால் உடனே கிழக்குப் பக்கம் புறப்படுங்கள். நமது சாரணனாக இருக்கும் கிளி சொல்லியபடி அங்கே நெல் நன்றாக விளைந்திருக்கிறது. உடனே புறப்படுங்கள். ஒவ்வொருவரும் எத்தனை கதிர்களை உங்கள் மூக்கிலே எடுத்து வர முடியுமோ அத்தனை கதிர்களை எடுத்துக் கொண்டு, பறம்பு மலைக்கோட்டையில் உள்ள தானியக் களஞ்சியத்துக்கு வந்து சேருங்கள். ஒரு நெல்கூடக் கீழே விழாமல்

பார்த்துக்கொள்ள வேண்டும். இந்தச் சமயத்திலே ஒவ்வொரு நெல்லும் முக்கியமானது. ஆகையால் ஜாக்கிரதை!" என்று பேசியது.

உடனே எல்லாக் கிளிகளும் கிழக்குத் திசையை நோக்கி வேகமாகப் பறந்து சென்றன.

நமது தமிழ் நாட்டில், புதுக்கோட்டையில்தான் இருக்கிறது பறம்பு மலை. இந்த மலைக்கும் இதைச் சுற்றியிருக்கும் பிரதேசங்களுக்கும் ஒரு காலத்திலே பாரி என்பவர் அரசராக இருந்தார். அவர் புலவர்களுக்கும் மற்றவர்களுக்கும் தாராளமாகப் பரிசு கொடுத்து வந்தார். பறம்பு மலையைத் தவிர அவருடைய ராஜ்யத்திலே இருந்த மற்ற முந்நூறு ஊர்களையும் அவர் புலவர்களுக்குக் கொடுத்துவிட்டார். கடைசியிலே பறம்புமலையும் அதன் மேலிருந்த கோட்டையுமே மீதியிருந்தன.

இப்படி அவர் பாட்டுப் பாடுகின்ற கவிஞர்களுக்கெல்லாம் நிறையப் பரிசு கொடுத்ததால் அவரை எல்லோரும் வள்ளல் என்று வாழ்த்தினார்கள். 'கொடுப்பதிலே சிறந்தவர் பாரி' என்று எங்கும் பெயராகிவிட்டது. புலவர்களெல்லாம் அவரைப் புகழ்ந்து அநேக பாட்டுக்கள் பாடினார்கள். அந்தப் பாட்டுக்கள் தமிழ்நாடு முழுவதும் பரவி, பாரிக்குப் பெரும்புகழ் உண்டாயிற்று. அந்தக் காலத்திலே தமிழ்நாட்டில் சேரன், சோழன், பாண்டியன் என்ற மூன்று பெரிய அரசர்கள் ஆண்டு வந்தார்கள். தமிழ் நாட்டையே மூன்று பாகமாக்கிக்கொண்டு அவர்கள் அரசாட்சி செய்தார்கள். பாரி இவர்களுக்குக் கீழேயிருந்த ஒரு சிறிய அரசர் தான். சேர சோழ பாண்டியர்களைப் புகழ்ந்து பேசுவதைவிட அதிகமாக மக்கள் பாரியைப் புகழ்ந்து பேசினார்கள். அதனால் அவர்களுக்குப் பாரியின் மேல் பொறாமை ஏற்பட்டது. அவரை எப்படியாவது சிறுமைப்படுத்திவிட வேண்டுமென்று நினைத்தார்கள்; கொன்றுவிடலாம் என்றுகூட நினைத்தார்கள்.

சேர சோழ பாண்டியர்கள் பாரியின் பறம்பு மலையிலுள்ள கோட்டையைச் சுற்றி வளைத்துக்கொண்டார்கள். இப்படியே கொஞ்ச காலத்துக்குக் கோட்டையை முற்றுகையிட்டால் பாரி பணிந்துவிடுவார் என்று நினைத்தார்கள். கோட்டைக்குள்ளேயே பல நாட்கள் அடைபட்டுக் கிடந்தால் கோட்டையிலுள்ள தானியமெல்லாம் தீர்ந்து போகும். பிறகு அவர்களுக்குச் சோற்றுக்கு வழியில்லை. கோட்டைக்குள்ளே விவசாயம் பண்ணி மற்றத் தானியங்களும் உற்பத்தி செய்ய இடமில்லை. அதனால் அவர்கள் பட்டினியாகக் கிடந்து சாகவேண்டியதுதான்; இல்லாவிட்டால் மூவேந்தர்களுக்குப் பணிந்து அவர்களிடம் உயிர்ப்பிச்சை கேட்க வேண்டும். வேறே வழி கிடையாது. இம்மாதிரி நினைத்துக் கொண்டு அவர்கள் கோட்டையை முற்றுகையிட்டிருந்தார்கள்.

பாரி இதற்கெல்லாம் கலங்கவேயில்லை. அவருடைய வீரர்கள் கோட்டைச் சுவரைப் பாதுகாத்து நின்றார்கள். வெளியிலே

இருக்கும் பகைவர்களுடைய சேனையின்மீது அம்புகளை எய்து தீரத்தோடு சண்டை செய்தார்கள்.

இவ்வாறு சண்டை எத்தனையோ நாட்கள் நடந்தன. மூவேந்தர்களுடைய பெரிய சேனையால் கோட்டைக்குப் பக்கத்தில் போக முடியவில்லை. ஆனால் கொஞ்சங் கொஞ்சமாகக் கோட்டைக்குள் வைத்திருந்த உணவுப் பொருளெல்லாம் குறைந்து கொண்டே வந்தது. கடைசியில் அரிசியே இல்லாமல் போய்விட்டது.

இப்படி ஒரு காலம் வரும் என்றுதான் சேர சோழ பாண்டியர் எதிர்பார்த்திருந்தார்கள். எவ்வளவு வீரமிருந்தாலும் சோறில்லாமல் சண்டை செய்ய முடியுமா? ஆகையால் பாரி தாமாகவே பணிந்துவிடுவார் என்று அவர்கள் நினைத்தார்கள்.

ஆனால் பாரி ஒரு தந்திரம் செய்தார். அவர் ஆயிரக்கணக்கான கிளிகளைப் பழக்கி வைத்திருந்தார். அந்தக் கிளிகளை வெளியே விட்டதும் அவைகள் வெளி தேசங்களுக்குப் போய் நெல் கதிர்களைக் கொண்டுவந்து கோட்டைக்குள் சேர்க்கும்.

அப்படி நெல்கதிர் கொண்டு வரப்போகிற ஒரு நாள் காலை நேரத்தில்தான் முன்னால் சொன்னபடி கிளிகள் பேசிக்கொண்டிருந்தன.

இவ்வாறு தினம் தினம் பச்சைக் கிளிகள் கொண்டுவரும் தானியத்தை வைத்துக்கொண்டு உணவு தயார் செய்து கோட்டைக்குள் இருந்த வீரர்களும் பாரியும் சாப்பிட்டார்கள். கிளிகளின் தேசபக்தியைக் கண்டு வீரர்களுக்கு இன்னும் உற்சாகம் அதிகமாய்விட்டது. நன்றாகச் சண்டை செய்தார்கள்.

ஒளவைப் பாட்டியை உங்களுக்குத் தெரியுமா? அவர் பெரிய தமிழ்ப் புலவர். 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்று அவர்தான் பாடினார். அவர் ஒரு நாள் பறம்பு மலைக் கோட்டைக்கு வந்தார். அவரிடத்திலே பாரிக்கு ரொம்ப மரியாதை உண்டு. அவரைப் பாரி எதிர்கொண்டு அழைத்தார். ஒளவையார் சண்டையைப்பற்றிப் பாரியிடம் விசாரித்தார். கிளிகள் நெல்கதிர் கொண்டு வருவதைப் பார்த்த ஒளவையாருக்கு ஒரே ஆச்சரியமாகப் போய்விட்டது. அந்தக் கிளிகளைப் பார்க்க வேண்டுமென்று ஆசை கொண்டார்.

ஆயிரம் கிளிகளுக்கு ஒன்றாகப் பத்தாயிரம் கிளிகளுக்குப் பத்துச் சேனாதிபதிக் கிளிகள் இருந்தன. இந்தப் பத்துக்கும்

மேலே பெரிய சேனாதிபதியாக ஒரு பெரிய கிளி இருந்தது. அது ஒரு நாள் எதிரிகள் என்ன செய்துகொண்டிருக்கிறார்கள் என்று ஓர் உயரமான மரத்தின் மேலிருந்து பார்த்துக்கொண்டிருந்தது. அந்தச் சமயத்திலே ஒரு பகைவன் அதன் மேலே அம்பை விட்டான். அது வேகமாக வந்து கிளியின் மூக்கில் பட்டதால் அதன் மூக்கில் வளைந்து கூர்மையாக இருக்கும் பாகம் ஒடிந்து போய்விட்டது. "அடே, என் மேலேயா அம்பைப் போட்டாய்? உன் மேலே சீக்கிரம் எங்கள் அரசர் பாரியின் அம்பு பாயப்போகிறது" என்று கூறிவிட்டுக் கோட்டைக்குள் பறந்து வந்தது. மூக்கிலே கொஞ்சம் ரத்தம் வடிந்துகொண்டிருந்தது.

பாரிக்கு அதைப் பார்த்ததும் பகைவர் மேலே கடுங்கோபம் வந்துவிட்டது. இருந்தாலும் கோபத்தை அடக்கிக் கொண்டு அந்தக் கிளிக்கு வைத்தியம் பண்ணினார். அதன் வளைந்த மூக்கைப் போலவே தங்கத்தால் செய்து அதில் வைரம் ஒன்றைப் பதித்து அந்தக் கிளியின் மூக்கில் ஒட்டவைத்து விட்டார். அதிலிருந்து எல்லோரும் அதை, 'தங்கமூக்கன்' என்று பெருமையாகப் பேரிட்டு அழைத்தார்கள்.

அந்தத் தங்கமூக்கனைப் பார்த்து ஒளவையார் சந்தோஷமடைந்தார். "தங்கமூக்குச் சேனாதிபதியே, உனது வீரத்தையும், உன்னுடைய படையில் உள்ள கிளிகளின் தேசபக்தியையும் புகழ்ந்து ஒரு கவி பாட வேண்டுமென்று எனக்கு ஆசையாக இருக்கிறது" என்று ஒளவையார் சொன்னார்.

அதற்குத் தங்கமூக்கன், "பாட்டி, எங்களைப் பற்றியெல்லாம் நீங்கள் பாடவேண்டியதில்லை. எங்கள் அரசரைப் பற்றியே நீங்கள் பாடுங்கள். அவரை யாராலும் வெல்ல முடியாதென்று அந்தச் சேர சோழ பாண்டியர்களுக்குச் சொல்லி அவர்களை வந்த வழியைப் பார்த்துக்கொண்டு திரும்பிப் போகச் சொல்லுங்கள்" என்றது.



ஒளவையார் சந்தோஷத்துடன், "உங்கள் அரசரை யாரும் வெல்லவே முடியாதா? இது உண்மைதானா?" என்று கேட்டார்.

"அவரைப் போரிலே யாரும் வெல்ல முடியாது. ஆனால் அவருடைய பறம்பு மலையும் இந்தக் கோட்டையும் வேண்டுமென்றால் சுலபமாக அவரிடமிருந்து

யார் வேண்டுமானாலும் பெற்றுக் கொள்ள முடியும்'' என்று தங்க மூக்கன் பதில் கூறியது.

''அதெப்படிச் சுலபமாக முடியும்?''

''பாட்டுப் பாடிக்கொண்டு வந்தால் அவர் பரிசிலாகக் கொடுத்துவிடுவார். அவர் தமக்கென்று எதையும் வைத்துக் கொள்ள மாட்டார். இந்த மூவேந்தரையும் பாட்டுப் பாடிக் கொண்டு வரச் சொல்லுங்கள். அவர்களுக்கு இந்த மலை உடனே கிடைக்கும்'' என்று தங்கமூக்கன் சொல்லிற்று.

''பெரிய சேனாதிபதியே, நீ சொல்லுகிறபடியே சேர சோழ பாண்டியரிடம் நான் போய்ச் சொல்லுகிறேன்'' என்று கூறிவிட்டு ஔவையார் அந்தக் கிளியின் முதுகைத் தடவிக் கொடுத்தார்.

பிறகு ஔவையார் கோட்டையை விட்டு வெளியே வந்து மூவேந்தர்கள் இருக்கும் இடத்துக்குச் சென்றார். எல்லா அரசர்களும் அவரை வரவேற்றார்கள். மூவேந்தர்களை ஔவையார் பார்த்து, ''நீங்கள் பாரியைச் சண்டையால் வெல்லவே முடியாது. அவரிடம் இருக்கும் பத்தாயிரம் கிளிகள் தினந்தோறும் நூறு மைல், இருநூறு மைல் போய் நெல்கதிர் கொண்டு வந்து கோட்டைக்குள்ளே உணவுப் பஞ்சம் இல்லாமல் செய்கின்றன. ஆதலால் பேசாமல் உங்கள் நாட்டுக்குப் போய் விடுங்கள். பாரியிடம் சண்டையிட்டு அவருடைய பறம்புமலையை நீங்கள் அடையமுடியாது; ஆனால் அவரிடம் பாட்டுப் பாடிச் சென்றால் பரிசிலாக எதை வேண்டுமானாலும் கொடுத்துவிடுவார்'' என்று சொன்னார்.

மூவேந்தர்கள் கிளிகளுடைய தேசபக்தியைக் கண்டு ஆச்சரியமடைந்தார்கள். இனிமேல் சண்டை செய்து பயனில்லை என்று திரும்பிப் போய்விட்டார்கள்.

மூவேந்தர்கள் இவ்வாறு போனதை அறிந்து, கிளிகள் மிகவும் சந்தோஷமடைந்தன. அவைகளையெல்லாம் கூப்பிட்டுப் பாரி ஒரு பெரிய விருந்து நடத்தினார்; மாம்பழம், வாழைப்பழம் என்று இப்படி வகைவகையான பழங்களையெல்லாம் கொடுத்தார்.

அவைகளுக்குப் 'பறம்பு மலைகாத்த வீரர்' என்று பாரி பட்டம் கொடுத்தார். பெரிய சேனாதிபதியான தங்கமூக்கனுக்கு 'வீரசேனாதிபதி' என்று பட்டம் கிடைத்தது.

கண்ணன் கழக அங்கத்தினர்கள்

(N) 70. நாச்சியார் அம்மாள், P., ஸ்ரீவைகுண்டம். 71. நடராஜன், ஐயம், நீலா, R., ஜம்ஷெட்பூர். 72. நடராஜன், S., புதுக்கோட்டை. 73. நடராஜன், C. S., ஈரோடு. 74. நாராயணமூர்த்தி, பத்மா, S. V., சேலம். 75. நவநீதகிருஷ்ணன், S., சாத்தூர். 76. நாகேசுவரன், V., சுன்னுகம். 77. நாகராஜன், P. S., சுப்பிரமணியன், திருப்பத்தூர்.

(P) 59. புஷ்பவல்லி, கமலவல்லி, A. R., மதுரை. 60. பெருமாள், S. S. P., வள்ளியூர். 61. பரமேசுவரன், S., யாழ்ப்பாணம். 62. பிச்சம்மாள், லலிதா, K., குடியாத்தம். 63. புருஷோத்தமன், P. S., மேலக்காவேரி. 64. பாச்சியண்ணன், R., சூலூர். 65. பத்மாவதி, M., பரமாதி. 66. பழனியப்பன், ஷண்முகம், P., நாகர்கோயில். 67. பெருமாள், V., சென்னை-20. 68. பத்மாவதி, சௌமிய நாராயணமூர்த்தி, கௌசல்யா, S., ஜான்ஸி. 69. பத்மநாபன், A., அனுராதபுரம். 70. பத்மாசனி, K., தியாகராயநகர். 71. பத்மநாபன், P., யாழ்ப்பாணம். 72. பரமசெல்வம், S., தண்டையார்குளம். 73. பொன்னம்பலநாதன், A., திருநெல்வேலி. 74. பார்வதி, ராமநாத், பாக்கியம், S., பம்பாய்-19. 76. பரமேசுவரன், K. S., கோயம்புத்தூர். 77. பழனிசாமி, P., விருதுநகர். 78. புருஷோத்தமன், கண்ணன், N., திண்டிவனம். 79. பழனிசாமி, R., பல்லடம். 80. பழனியப்பன், மகாலிங்கம், T. S., திருச்செங்கோடு. 81. பரமசிவம், K. A., கந்தப்பாளையம். 82. பத்மாவதி, A. V., கோயம்புத்தூர். 83. பத்மநாபன், S., சென்னை-1. 84. பார்த்தசாரதி, K., சிலோன். 85. பொன்னுசாமி, R., கொழும்பு. 86. பெரியசாமி, S., ஒட்டன்சத்திரம். 87. பத்மா, பரிமளா, வசந்தா, சேலம். 88. பத்மா, சாந்தா, K. N., கோட்டயம். 89. பத்மநாபன், M., சிவகாசி. 90. பத்மாவதி, முரளீகிருஷ்ணன், பாரதி, கோபாலகிருஷ்ணன், V. N., அல்லாப்புரம். 91. பத்மா, T. S., திருச்சி. 92. பார்த்தசாரதி, M., சைதாப்பேட்டை, வேலூர். 93. பிரேம்ஜி, G., கோயம்புத்தூர். 94. பிள்ளையார், S., மாரிமுத்து, வேலாயுதபுரம். 95. பங்கஜம், பிரேமா, புனா-3. 96. பிரேம் பியாரன், S., தா. கல்லுப்பட்டி. 97. பிரேமா, சாந்தா, விழுப்புரம். 98. பரமேசு

இங்கே கத்தரியுங்கள்.

கண்ணன் கழகம்

அங்கத்தினர் பதிவு கூபன்

(கட்டணம் இல்லை)

பெயர் ....

விலாசம் ....

....

பிறந்த தேதி ....

(தேதி, மாதம், வருஷம்)

நவம்பர் '50 கூபன் கெ!

வரன், S., யாழ்ப்பாணம். 99. பழனிவேல், V. B., பெரம்பூர்.

(R) 126. ராமசாமி, T. S., கொல்லம். 127. ரேவதி, S., பம்பாய்-19. 128. ராஜ லக்ஷ்மி, D., திருப்பூர். 129. ருக்மிணி, N. I., பெங்களூர்-5. 130. ராம்மோஹன், காந்தி, R., சென்னை-6. 131. ரேவதி, M.N., ராயப்பேட்டை. 132. ராஜமோகன், A., சிதம்பரம். 133. ராமு, N., மொரையூர். 134. ராஜேந்திரன், திருமங்கலம். 135. ராமலக்ஷ்மி, A, ராஜபாளையம். 136. ராமநாதன், M., கள்ளக்குறிச்சி. 137. ராமமூர்த்தி, சாந்தா, ராஜேசுவா, K., சென்னை-18. 138. ருக்மிணி, V., (ஊர் எழுதவில்லை). 139. ராதா, K., திண்டிவனம். 140. ராஜரத்தினம், பட்டாபு, சரோஜா., (ஊர் எழுதவில்லை.) 141. ராமநாதன், ரகுநாத், சத்தியநாத், A. R., புதுடில்லி. 142. ரங்கசாமி, V., அறந்தாங்கி. 143. ரமணி, சாந்தா, V., கபிஸ்தலம். 144. ரங்கநாதன், U. S., வேலூர். 145. ராஜமாணிக்கம், S., ஆண்டிப்பட்டி. 146. ராஜகோபாலன், P., அம்மையப்பன். 147. ராஜேந்திரன், R., திருநெல்வேலி ஜங்ஷன். 148. ராமசாமி, வீரப்பன், K. V., சென்னை-17. 149. ராஜேசுவரி, S. பெங்களூர்-1. 150. ராஜீவாக்ஷி, R., பெஙகளூர்-1.

(S) 109. சம்பத், V.K., சேத்துப்பட்டு. 110. சங்கர், M. Y., மதுரை. 111. சுப்பிரமணியன், P., சென்னை-4. 112. சரஸ்வதி, N., கோயம்புத்தூர். 113. சுந்தரமூர்த்தி, C., சென்னை-4. 114. சப்தரிஷி, சுப்பிரமணியன், கமலா, M., ஓமலூர். 115. சேஷாத்திரி, மைதிலி, N.S., ஸ்ரீரங்கம். 116. சேஷாத்திரி, ஜயராமன், ஜானகி, வெங்கட்டராமன், M., ராமநாதபுரம். 117. சர்மா, N.T., காரைநகர். 118. சிங்காரம், R.M., புதுக்கோட்டை. 119. சின்னதுரை, S., சோமரசம்பேட்டை. 120. சோபனு, வேப்பேரி. 121. சகஸ்ரநாமம், அர்ஜுனன், ஜகத்ராமன், V.K., திருவல்லிக்கேணி. 122. சுகன்யா, S., திருப்பத்தூர். 123. சம்பத்து, R., சேலம். 124. சீனிவாசராகவன், சந்தானகோபாலன், அனந்தநாராயணமூர்த்தி, மிஸ் கனகசுந்தரவல்லி, V.N., திருப்பத்தூர். 125. சரவணன், மணப்பாறை. 126. ஸ்ரீராம், T.S., சென்னை-14. 127. ஸ்ரீகரன், சந்தானமுகுந்தன், L., மாரிக்குப்பம். 128. சேகர், மிஸ் சாந்தகுமாரி, சந்திரலேகா, M. C., காசி. 129. சேகர், ராஜாராம், R., தாம்பரம். 130. சக்திவேல், T.S., புதுப்பட்டி.

(மீதி அடுத்த இதழில்)

★★★★★★★★★★★★★★★

கண்ணன்

மாதந்தோறும்

இங்கிலீஷ் 1-ஆம் தேதி

வெளிவரும்

★★★★★★★★★★★★★★★

பாண்டியாட வாராயோ!

கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை

பாங்கி தோழி பங்கஜம்
பாண்டி யாட வாராயோ!
பாட்டி எனக்குப் பரிசளித்த
பல்லாங் குழியைப் பாரிதோ

மாமா நேற்று வாங்கித்தந்த
மாணிக் கத்தைப் பாரிதோ
அத்தை தந்த கட்டிமுத்தின்
அழகை வந்து பாரிதோ

சேர ருக்கு மங்களங்கள்
செப்பி விளை யாடலாம்
சோழ ருக்குச் சோபனங்கள்
சொல்லி விளை யாடலாம்
பாண்டி யர்க்குப் பல்லாண்டு
பாடி விளை யாடலாம்
உண்ணும் பாண்டி யாடலாம்
ஓய்ந்து விட்டால் நிறுத்தலாம்
கட்டும் பாண்டி யாடலாம்
களைத்து விட்டால் நிறுத்தலாம்
எய்யாப் பாண்டி யாடலாம்
எய்த்து விட்டால் நிறுத்தலாம்
பசும் பாண்டி யாடலாம்
பசித்த வுடன் நிறுத்தலாம்
பாங்கி தோழி பங்கஜம்
பாண்டி யாட வாராயோ!

இந்த வருஷத் தீபாவளி

"இந்த வருஷத் தீபாவளியை எப்படிக் கொண்டாடப் போகிறீர்கள்?" என்ற கேள்விக்கு இந்த எட்டுக் குழந்தைகளின் பதிலைப் பாருங்கள். இதேபோலத்தானே நீங்களும் கொண்டாடப்போகிறீர்கள்? ஜமாயுங்கள்!

V. நிர்மலா, 9 வயது.



V. S. சிவசுந்தர், 10 வயது.

முதலில் நான் எழுந்தவுடன் எண்ணெய் தேய்த்து குளித்துவிட்டு புது வஸ்திரங்களை உடுத்துக் கொள்வேன். பிறகு வாங்கி வைத்திருந்த பட்டாசுகளையும், மத்தாப்பூகளையும் கொளுத்துவேன், பின்பு நாங்கள் எல்லோரும் கோவிலுக்குப் போவோம் போன வருஷம் எழுந்தவுடன் குளித்துவிட்டு அணுகுண்டுகளை காலையில் ஒன்றும், இரவு ஒன்றுமாகக் கொளுத்தினேம், பிறகு சாப்பிட்டு விட்டுத் தூங்கினேம், மறுநாள் காலையில் எங்களுக்கு பள்ளிக்கூடம் திறப்பார்கள். நாங்கள் பள்ளிக்கூடத்திற்கு வந்தவுடன் எங்கள் உபாத்தியாயர்கள் நாங்கள் தீபாவளி கொண்டாடியதைப்பற்றிக் கேட்பார்கள்.

நான் காலை 4 மணிக்கு எழுந்து $4\frac{1}{2}$-க்குள் எண்ணை தேய்த்துக்கொண்டு, பட்டாஸ் டப் டப் டம், டுப், டிப் என்று வெடிப்பேன் வான வேடிக்கைகள் முதலியன செய்வேன். போன தடவை ஒரு மலைபண்ணி அதில் ஓட்டைசெய்து எரிமலைபோல் செய்து அந்த ஓட்டையில் நெருப்பு கொளுத்தி பட்டாஸ் போட்டோம். அது வெடித்தது. பிறகு மீதிவைத்து அதை வேரு ஒருநாள் வெடித்தேன். பிறகு கேப் 1 டஜன் வாங்கினேன் அதை தினமும் கேப் கன்னில் போட்டு வெடித்தேன்.

அன்று எங்கள் வீட்டில் லட்டு, குலோப்ஜான் முந்திரி பருப்பு, பருப்பு பாயசம் எல்லாம் சாப்பிடுவேன்.



C. N. ஸ்ரீநிவாஸன், 9 வயது.

S. சரோஜா, 12 வயது.

நாங்கள் தீபாவளிக்கு காலை 4 மணிக்கு எழுந்து எண்ணை தேய்த்து குளிப்போம். அப்பொழுது வீதியில் மேளக்காரன் டம், டம் என்றும், ஊதுபவன் பிபிப் பீபீ என்றும் ஸ்வரத்தைபாடுவான். அதை பார்து விட்டு தூங்குபவர்களை எழுப்புவேன். முதலில் பூமதாப்பை கொளுத்துவோம். மேளகாரனுக்கு பணம் குடுத்து விட்டு, ஊசிபடாஸ் கொளுத்தி வோம். பிறகு 8 மணி வரை படாஸையே கொளுத்தி விட்டு விளையாடச் செல்வோம் 9 மணிக்கு ஒரு யானைவெடியை வெடித்து வெடிப்போம். பிறகு 11 மணிக்கு உணவு உண்டோம் லட்டு, ஜாங்கிரி பாதாம் பாயசம், மைசூர்பாக்கை யும் தின்போம்.

போன வருடம் புது சில்க் சொக்காய் டிவீட் நிக்கர். இந்த வருடம் அச்கன் ஜிப்பா, பைஜாமா வெஸ்டு இவைகளை தெய்துக்கொள்வேன். 9 ரூபாய்கு படாஸ் வாங்குவேன். பிறகு அதை வெடித்து, சந்தோஷமடைவேன். கற்பனை ஓடவில்லை அதனால் நிறுத்திவிட்டேன்.

நான் இந்தவருஷம் கொண்டாடப் போகும் திபாவளி எங்களுக்கு எங்கள் அப்பா நிறைய பட்டாசுகள் வாங்கிக் கொடுப்பார்கள் போன வருஷம் எங்கள் மாமா பல வெடிகளை வெடித்தார் அதைக் கண்டு நான் பயந்து போனேன் இதனால் எனக்கு பட்டாசு என்றால் பயம் அதனால்தான் ஜாஸ்தியாக பட்டாசுவிட மாட்டேன் தீபாவளியின்போது எங்கள் அப்பா எங்களுக்கு 4 ரூபாய் கொடுப்பார்கள் அதில் நாங்கள் பல பொருள்கள் வாங்கி விளையாடுவோம் எங்களுக்கு திபாவலி வந்தால் எங்களுக்கு ஒரு சந்தோஷம் இந்த வருஷம் திபாவளி நன்றாக நடக்க வேண்டுமென்று நான் கடவுளிடம் கேட்டுக் கொள்வேன்.

K. K. ஜயராமன், 10 வயது.

தீபாவளியன்று நான் ஊருக்கு போவேன், வீட்டிற்குபோய் தங்கை, தம்பி இவர்களுக்கு சுரசுரா வத்தி, மத்தாப்புப் பெட்டி முதலியவைகளைத் தந்து விட்டு காலையில் எழுந்து எண்ணை தேய்த்து ஸ்நாம் செய்து புது ஆடை உடுத்திக்கொண்டு ஏரோப்பிளேன், யானை வெடி. குதிரை வெடி சீன வெடி முதலிய டப்பாசுகளை நன்ருய்கொளுத்து வேன். இன்னும் எலக்டிரிக் பட்டாசு விஷ்ணு சக்கரம் இவை களை கொளுத்துவேன் போன திபாவளிக்கு 5-6 ரூபாய்கே பட்டாசு கொளுத்தினேன். போன திபாவிளியை விட இந்த திபாவிளிக்கு மிகவும் சந்தோஷ மாய் இருப்பேன். எனென்ருல் திபாவளியன்று கண்ணன் மிக வும் அழகாய் மேள தாளங்களு டன் வெளிவரப் போகிறது. அப் பொழுது நான் அதை மிகவும் சந்தோஷமாய் கண்ணனை வாங்கி ஆர்வமாய் படிப்பேன். இத் துடன் கண்ணன் ஆசிரியருக்கு என்னுடைய மனமார்ந்த வணக் கத்தை தெரிவித்துக் கொள் கிறேன்.



S. சகுந்தலா, 9 வயது.

நான் தீபாவளியில் வீட்டில் விளகுகள் வய்து அழகாக பண்ணுவேன். எரப்பிலேன் டபாஸ்கள், கேப்புகள், விஷ்ணு சக்கரம், பாம்புகள், விடுவோம். புது துனிகளை அனைந்துகோள் வேம். பாம்பு டபாஸ்கள் நக்ஷத்திர டபாஸ்கள் விடு வோம். பக்ஷனங்களை சாப்பிடு வேன். புது வளைகளை போட்டுக் கொள்வேன். 5 மனியிலிருந்து 3 மனிவரையில் டப்பாசுகள் விடுவேன், வீட்டில் இருக்கும் குழந்தைகளோடு டப்பாசுகள் விடுவேன். எங்கள் வீட்டை பார்தால் மிக அழகாக இருக்கும், கைகளை கழுவி சாப்பிட்டு தூங்க போவேன்-ஜெய் ஹிந்து.

T. R. சிங்காரவேல், 10 வயது.

நான் தீபாவளி அன்று தலை முழுகிவிட்டு ஒரு வேட்டிக் கொண்டு இருப்பேன். பிறகு என்னுடைய அம்மா பலகாரங்கள் செய்வாள் எனது அப்பா எங்களை எல்லோரையும் கூப்பிட்டு பட்டாசுகளை கொடுப்பார். இதில் ஒரு சன்டை உண்டாகும். இதெல்லாம் முடிந்த பிறகு பகைாரங்களை சுவாமிக்கு வைத்து படைத்து எல்லோருமாக உட்கார்ந்து சாப்பிடுவோம். பிறகு பட்டாசுகளை எடுத்துக் கெண்டு போய் வெடிப்போம். ஒரு பையன் ஏரோப்பிளேன் பட்டாசை வைத்து அதன்மேல் ஒரு தகர டப்பாவை வைத்து விடுவான் அந்த எரோப்பிளேன் பட்டாஸ் மேலே கிளம்பும்போது அந்த தகர டப்பாவும் மேலே போகும் இதில் ஒரு வேடிக்கை உண்டாகும் என்னவென்ருல் ஒருவன் அதை பார்த்துக்கொண்டே இருப்பான் அது அவன் தலைமேல் வந்து விழும். என் தம்பி புஸ் வானத்தைப் பார்த்து-அயையோ நட்சத்திரம் கிழ விழுது-என்று கத்துவான் இப்படியாக நாங்கள் ஒவ்வொரு தீபாவளியையும் கழிப்போம்.

R. அன்னபூரணி, 9 வயது

தீபாவளியின்போது நான் பட்டுபாவாடை பட்டுசட்டை எல்லாம் அணிந்துகொள்வேன். பட்டாசு முதலியவைகளை வாங்கி விடுவேன் ஒருதடவை தீபாவளியின்போது பட்டாசுகளை அடுப்பில் காயவைத்துவிட்டு குளித்து கொண்டு இருந்தோம் அப்போது பட்டாசுகள் வெடித்துவிட்டது. ஏரோப்ளேன் வண்ம் மேலே போய்விட்டது. நாங்கள் பயந்து விட்டோம். பிறகு திருப்பி பாட்டசுகள் வங்கிவந்தார்கள். இந்த தீபாவளிக்கு நீலப்பாவாடை அணிந்துகொண்டு கடைய்கு போய் தீபாவளிமலர் கண்ணன் வாங்குவேன்.

ஊசிப் பட்டாசு

கே. ஆர். ராமசந்திரன்

"ஹல்லோ! யார் பேசறது? ஜம்புநாதையரா? நான்தான் ஹரிசிங் சேட் பேசறேன். தீபாவளிக்குக் கொழுந்தைகளுக்குப் புதுத் துணிகள்... என்ன? கடைக்கு வரவே டைம் இல்லையா?... அதனால் என்ன சார்! நீங்க வராட்டா என்ன?... ரெடிமேடிலே புது வெரைட்டிகள் வந்திருக்குது. நம்ம பையன் கிட்டுவுக்கும் குழந்தை உஷாவுக்கும் ஆளுக்கு ஒரு 'ஸெட்' இருக்கட்டுமே என்று வீட்டுக்கு அனுப்புச்சுட்டேன். என்ன?... போன மாதம் வாங்கியதே இருக்கா? அதனால் என்ன சார்... நீங்க இப்ப வாங்காட்டால் அடுத்த மாதமும் இல்லே......துணிதானே! கெட்டா போறது? பரவாயில்லே சார்... அதை அப்புறம் போட்டுக்கட்டுமே! ...... சரி— ரொம்ப 'பிஸி'யா இருப்பேள் - ... அப்புறம் பேசிக்கலாமா? 'குட் ஈவினிங்'......"

டக்... டிங்.

"ஹல்லோ... ஹரிசிங் சேட் கடையா? யாரு? ஓ! சேட் தான் பேசறதா? நான்தான் ஜம்புநாதையர் பேசறேன்... ஆமாமாம். ஆபீசிலிருந்துதான்! எஸ், சேட்... குட் ஈவினிங்... ஏதோ ரெடிமேட் புதுசா வந்திருக்காமே!... என்ன? நல்ல வேலை... நம்ம கிட்டுவுக்கும் உஷாவுக்கும்... என்ன? சைஸ் தெரியுமா? ஓஹோ! போன மாதம் வாங்கித்தோ?... சரி - ஆமாம். அதே சைசில் ஆளுக்கு ஒரு செட் புது உடுப்புக்கள்... நல்ல ரகமாய் அனுப்பிச்சுடறேளா?... சரி, வேறு விசேஷமா? நீங்கதான் சொல்லணும்? தீபாவளி சேல்ஸ் எல்லாம் ரொம்ப பலமாக்கும்? பொய் சொல்லாதீர்கள் சேட்... சரி... குட் ஈவினிங்..."

டக்.. டிங்.

கிட்டு டெலிபோன் ரிஸீவரைக் கீழே வைத்துவிட்டுத் தன்னைத் தானே பெருமிதத்துடன் பார்த்துக்கொண்டான். 'அடேயப்பா! எவ்வளவு சாதுரியமாகக் காரியத்தைச் சாதித்துவிட்டோம்!' என்று நினைக்கும்போது அவனுக்கே ஆச்சரியமாய் இருந்தது.

'கிரீச்......'

கதவைத் திறந்துகொண்டு உஷா உள்ளே வந்தாள்.

"ஏண்டா கிட்டு - வேலை முடிஞ்சுதா?"

"எல்லாம் ஒரு மாதிரியா முடிஞ்சுது. அப்பா மாதிரி

ஸர்க்கஸ்காரன்: ஏ பையா! யானை கிட்ட போகாதே. விலகிப்போ!

பையன்: பயப்படாதே! உன் யானையை நான் முழுங்கிட மாட்டேன்.

பேசும்போதுதான் கொஞ்சம் பயமாய் இருந்தது. நான் உருப் போட்டதெல்லாங்கூட மறந்து போச்சு! என்னென்னவோ கேட்க ஆரம்பித்துவிட்டான் சேட். எப்படியோ எதையோ சொல்லித் தப்பிச்சுனுட் டேன்னு வச்சுக்கோ!"

"ஆமாண்டா! என்னவோ தீபாவளி - சேல்ஸ் என்றெல் லாம் சொன்னியேன்னு நான் கூட ஏதாவது உளறிடுவ யோன்னு பயந்தேன்."

"சரி சரி... இனிமேல்தான் ஜாக்கிரதையாய் இருக்கணும். நான் போன் பண்ணும்போது அம்மா வரல்லியே?"

"அடே போடா, பயந்தாங் கொள்ளி! நான்தான் கதவைச் சாத்திண்டு வாசப்படிக்குப் பக்கத்திலேயே காவல் காத் திண்டிருந்தேனே! அம்மா உன்னைத் தேடிண்டு வந்த போதுகூட, 'வாசல்லே போயிருக்கான்' என்று சொன்னேன் 'சரி'ன்னு போயிட்டாளே?"

"சரி, சேட்டின் பையன் இப்போ புதுத் துணியெல்லாம் கொண்டு வந்துடுவான். அப் பாவுக்கும் அம்மாவுக்கும் சந் தேகமே வராதபடி இருக்க வழி செய்யணும்."

"ஆமாண்டா! அது வேறே இருக்கே! அம்மாகிட்டத் தானே கார்த்தாலேகூட, 'நம்ப இரண்டுபேருக்கும் புதுசு அப் புறம் வாங்கலாம். கடைக்குப் போக டைம் இல்லே - தீபாவளிக்குப் போன மாதம் வாங்கியதில் மீதி ஒரு செட் டையே போட்டுக்கணும்' என்று அப்பா சொன் னாரே!"

"அதற்கெல்லாம் பயப்படாதே! நான் கவனிச்சுக்கறேன். நீ மட்டும் காலை வாரி விடாமெ இருந்தியானா நமக்கு 'ஸென்ட் பர் சென்ட்' ஜயம்."

"அது சரிடா! நான் இப்போ என்ன செய்ய?"

"நீ ஒண்ணும் செய்ய வேண்டாம். பேசாமெ மாடிலே நம்ம ரூமுக் குப் போயி புஸ்தகத்தை எடுத்து வச்சுக்கோ! போறும்! நான் கூப் பிடற வரைக்கும் வரக் கூடாது."

" அவ்வளவுதானே!

சரிடா! நான் போறேன்... டேய், கடைப் பையன் வந்ததும் கூப்பிடணும் - கேட்டியா?"

உஷா கிடுகிடுவென்று மாடிப் படிகளின் மேல் ஏறி ஓடினாள். கிட்டு கூடத்துக்கும் வாசலுக்குமாக நடக்க ஆரம்பித்தான். அவன் மனம் மேலே நடக்கவேண்டிய ஏற்பாடுகளைப் பற்றித் திட்டமிட்டுக்கொண்டிருந்தது.

* * *

கிட்டுவின் அப்பா ஜம்புநாதையர் ஒரு பாங்கில் மானேஜர். கிட்டுவும் உஷாவும் செல்லக் குழந்தைகள். என்ன கேட்டாலும் 'இல்லை' என்னுமல் வாங்கிக் கொடுத்துவிடுவார். கிட்டுவின் தங்கை உஷா மிகவும் குறும்புக்காரி. ரொம்ப ரோஷக்காரியும் கூட. ஒன்று சொல்லிவிட்டால் பொறுக்காது.

தீபாவளிக்கு முன் தினம் வரை இருவருக்கும் புது உடுப்புகள் ஒன்றுமே வாங்கவில்லை ஜம்புநாதையர். அவர் என்ன செய்வார், பாவம்! ஆபீஸ் தொந்தரவு! வீட்டில் தங்குவதே இல்லை. அன்று காலை கிட்டுவின் அம்மா கேட்டதற்குக்கூட முந்திய மாதம் வாங்கியதையே போட்டுக்கொள்ளச் சொல்லிவிட்டுப் போனர்.

ஆனல் கிட்டுவுக்கும் உஷாவுக்கும் இதில் ரொம்ப மனத்தாங்கல். தீபாவளிக்கு என்று வாங்கிய புது உடுப்புக்களை மற்ற நண்பர்கள் காண்பிக்கும் போது தங்களுக்கு மட்டும் ஒன்றுமே இராதே! போன மாதம் வாங்கியதைக் காண்பித்தால், 'சே இதுதானு! இதுதான் போன மாதமே வச்சிண்டு இருந்தயே' என்று சொல்லிக் கேலி செய்வார்களே!

'அப்பாவுக்கு வேலை அதிகமானல் அதற்காக நமக்குத் துணி வாங்காமல் இருப்பதா? சே! இந்த அப்பா ரொம்ப மோசம்!'

'மேலும் தீபாவளிக்கு, புதுசு போட்டுக்கற பண்டிகைக்கு, போன மாதம் வாங்கியதையா போட்டுக்கொள்வது? கூடவே கூடாது!'

'புது உடுப்புக்கள் கண்டிப்பாக அப்பாவை வாங்க வைக்க வேண்டும்' என்றெல்லாம் இருவர் மனத்திலும் எண்ணங்கள் ஓடின. அதுவுமல்லாமல் அன்றுதான் கிட்டு, அவர்கள் வீட்டில் எப்போதும் வாங்கும் ஹரிசிங் சேட் கடையில் புது ரெடிமேட் தினுசு வந்திருப்பதைப் பார்த்தான். பிறகு கேட்க வேண்டுமா? புது உடுப்புக்கள் நாளைக்குத் தீர்ந்து போய்விட்டால்?

எப்படியாவது ஆளுக்கு ஒரு செட் வாங்கிக்கொள்வது என்று இருவரும் கங்கணம் கட்டி கொண்டார்கள். அதற்கான உபாயத்தை யோசித்து யோசித்துக் கடைசியில் ஒரு தீர்மானத்துக்கும் வந்தார்கள்.

அந்தத் தீர்மானத்தின் பலனைத்தான் இருவரும் ஆவலுடன் எதிர்பார்த்தார்கள்.

"சார் - சார்!"

"டேய் கிட்டு - யாருடாது! யார் என்று பாரேண்டா" என்று அம்மா சமையல் அறையிலிருந்து குரல் கொடுத்தது, கூடத்தில் ஊஞ்சலில் உட்கார்ந்திருந்த கிட்டுவின் காதில் விழுந்தது.

அவனுக்கா தெரியாது, யார் வந்திருக்கிறார்கள் என்று? அவன்தான் சேட்டின் கடைப் பையனை எதிர்பார்த்துக் கொண்டு, 'என் பையனை இன்னும் காணோம்?' என்று மனசில் திட்டியவாறே உட்கார்ந்திருக்கிறானே!

'நல்லபடியாக ஒருவருக்கும் சந்தேகமில்லாமல் நினைத்தது நடக்கவேண்டுமே!' என்று கடவுளைத் தியானித்துக்கொண்டான் கிட்டு. பாதி பயத்துடன் வாசல் பக்கம் சென்று கதவைத் திறந்தான்.

"இந்தாங்கோ அம்மா! இதைச் சேட் கொடுத்துவிட்டு வரச் சொன்னாரு!" என்று பையன் உள்ளே வருவதற்கும் அம்மா உள்ளிருந்து கூடத்துக்கு வருவதற்கும் சரியாக இருந்தது.

"என்னடாது பையா?"

"இந்தாம்மா! ஐயா ஆபீஸிலிருந்து போன் பண்ணிக் கடையிலேருந்து சின்ன ஐயாவுக்கும், பெண்ணுக்கும் புது உடுப்புக் கொண்டாரச் சொன்னாரு!"

"என்ன? போன் பண்ணினாரா, எப்போ?"

"இப்பத்தாம்மா! ஒரு மணி முன்னாடி!"

"எங்கே போன் பண்ணினார்?"

"நம்ம கடைக்குத்தாம்மா?"

"என்னடாது? 'நேரில் பார்க்காமல் வாங்கினால் சரிப்படாது. இப்போ டைம் இல்லே. அப்புறம் பார்த்துக்கலாம்' என்று கார்த்தாலேகூடப் போகும்போது சொல்லிட்டுப் போனாரே. இதுக்குள்ளே மனசு மாறிடுத்தாக்கும்! சரி சரி, வச்சுட்டுப் போ!"

உஷா கீழே வந்தாள்.

கிட்டுவும் உஷாவும் மூட்டையைப் பிரித்தார்கள். அப்பப்பா! கண்ணைப் பறிக்கும் வர்ணங்களில் புது உடுப்புக்கள்!

"அம்மா! இதோ பாரம்மா! எவ்வளவு நன்னா இருக்கு!" என்று இருவரும் அம்மாவிடம் ஓடினார்கள்.

இரவு அப்பா வந்தார்.

"கடைசியில் புதுசு வாங்கிட்டாப்போலே இருக்கு. நல்ல வேளை, புதுசு வாங்கினேளோ, பொழசசேன்! இல்லாவிட்டால் இதுகள் பண்ற ரகளையிலே வீடே இரண்டு ஆயிடும்."

"என்னவோ, சேட் 'புதுசு வந்திருக்கு அனுப்பிச்சுட றேன்' என்ருன் - 'சரி'ன் னேன் - அது கிடக்கட்டும் இப்போ எனக்குச் சாதம் போடு, பசிக்கிறது!"

நல்ல வேளை; அப்பாவுக்கும் தங்கள் காரியம் தெரியவில்லை. கிட்டுவும் உஷாவும் நிம்மதியாகத் தூங்கினர்.

மறுநாள் தீபாவளி. எல்லாம் புத்தம் புதிதாகப் போட்டுக் கொண்டு, நண்பர்களிடமெல்லாம் பெருமையடித்துக் கொண்டு கிட்டுவும் உஷாவும் வாசலில் பட்டாசு விட்டுக் கொண்டிருந்தார்கள்.

"பட் - பட் - பட் - படார் - பட் - பட் படார்."

உஷாவின் ஊசிசரத்தைக் கிட்டு எடுத்துக் கொளுத்தி எறிந்துவிட்டான். அவ்வளவுதான்!...ரோஷக்காரி உஷாவுக்கு வந்த கோபத்தைப் பார்க்கவேண்டுமே!

"இருடா - இரு. நீ நேற்றுப் போன் பண்ணியதை அப்பா கிட்ட சொல்றேன், பாரு!" என்று உள்ளே ஓடினுள்.

"டீ - டீ - வேண்டாண்டி..." என்று பின்தொடர்ந்தான் கிட்டு.



உள்ளே சென்ற இருவருக்கும் பகீர் என்றது.

ஊஞ்சலில் அப்பா எதிரில் சாவகாசமாக உட்கார்ந்து பட்சணம் தின்றுகொண்டிருந்தார், ஹரிசிங்சேட்!

கிட்டுவையும் உஷாவையும் பார்த்ததும் சேட் பேச ஆரம்பித்தார்:

"நல்ல வேளை சார்! நீங்களாகவே நேற்று போன் செய்திருக்காவிட்டால் குழந்தைகள் ஞாபகமே எனக்கு இருந்திருக்காது! இந்த உடுப்புக்கள் இவர்களுக்கு எவ்வளவு அழகாயிருக்கின்றன!"

"என்ன சேட் - நீங்கள் தானே எனக்குத் திடீர்னு போன் பண்ணினேள்?"

கிட்டுவும் உஷாவும் ஒருவரை ஒருவர் பார்த்தார்கள்.

"என்ன நீங்களே போன் செய்துவிட்டு மறந்துட்டீங்களே!"

"என்ன அப்படிச் சொல்றேள் - நீங்கதானே........"

"அதெல்லாம் இல்லேப்பா - இந்தக் கிட்டுதாம்பா போன் பண்ணினான்!"

"இல்லேப்பா! இந்த உஷா தான் 'போன் பண்ணு' என்று 'ஐடியா' சொல்லிக்கொடுத்தாள்." கிட்டுவின் அப்பாவுக்கும் சேட்டுக்கும் உடனே விஷயம் விளங்கியது.

"அடேயப்பா! என்ன குறும்புக்காரர்கள்! எவ்வளவு சாமர்த்தியமா ஏமாற்றியிருக்கிறார்கள்!" என்று சொல்லிச் சிரித்துக்கொண்டிருக்கும் போது உள்ளிருந்து வந்த கிட்டுவின் அம்மா விஷயத்தைக் கேட்டாள்.

"ஓஹோ! அதுதான் நேற்று மத்தியான்னம் பூராக் கூடிக் கூடிக் குசுகுசு என்று பேசிண்டே இருந்தேளா! என்னடாதுன்னு பார்த்தேன்!" என்று கூறி அம்மாவும் சேர்ந்து சிரித்தாள்.

"பொல்லாத குழந்தைகள்" என்று சொல்லி, ஊசி வெடி வெடிப்பது போலக் கடகட வென்று சிரித்தார் சேட்.



[கண்ணன் தபாலில் வெளியிட நூற்றுக்கணக்கான கடிதங்கள் வருகின்றன. அத்தனையையும் பிரசுரிக்க முடியுமா? பொறுக்கிச் சிலவற்றை மட்டுந்தான் பிரசுரிப்பது சாத்தியம். ஆகையால் ஒரு தடவை எழுதினது அடுத்த கண்ணனில் வராவிட்டால் அது பிரசுரத்துக்கு ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்று தெரிந்துகொள்ளுங்கள். வேறு விஷயங்கள் பற்றி நீங்கள் எழுதி அனுப்பலாம்.—ஆ-ர்]

* * * *

விடுகதைகள்

இரவு வேளையில் மலரும் பூ
எங்கும் ஒளியை வீசும் பூ
பரிதி வந்தால் மறையும் பூ
பைங்கிளியே பெயர் சொல்வாய்!

காணமுடியா அறையிலே
கட்டி வைத்த செல்வமரம்
துஷ்டரோடு கள்வர்கள்
விரும்பா இதன் பெயர் சொல்வாய்!

(விடை: சந்திரன்; கல்வி.)

T. K, ராமமூர்த்தி (R 429)

* * *

என்ன உறவு?

ஒரு பெண்ணும் ஒரு பையனும் வாசல் திண்ணையில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள். அப்போது ஒரு கிழவர் அங்கே வந்து அந்தப் பெண்ணைப் பார்த்து, "உங்கள் இருவருக்கும் என்ன உறவு?" என்று கேட்டார்.

அதற்கு அந்தப் பெண், "இவன் தகப்பனர் யாருக்கு மாமனரோ அவருடைய தகப்பனருக்கு நாட்டுப்பெண் நான்" என்ருள்.

உங்களுக்கு இந்த உறவு புரிகிறதா?

(விடை: அக்கா - தம்பி.)

T. K. ராமசந்திரன், திருச்சி.

* * * *

வேடிக்கைக் கணக்குகள்



1 முதல் 12 எண்ணுக்குள் நீங்கள் ஓர் எண்ணை மனசில் நினைத்துக் கொள்ளுங்கள். நான் ஒவ்வொரு நம்பராகக் காட்டுவேன். நீங்கள் எந்த எண்ணை மனசில் நினைத்தீர்களோ அதற்குமேல் ஒவ்வொன்ருகக் கூட்டிக் கொண்டே வரவேண்டும். நீங்கள் கூட்டிக் கொண்டே வருவது சரியாக 20 ஆகும் போது நீங்கள் நினைத்த எண்ணை நான் குறிப்பிடுகிறேன் பாருங்கள்.

(இதைக் கண்டுபிடிக்கும் விதத்தைக் கடைசிப் பக்கத்தில் பாருங்கள்)

* * * *

என் பிரியமான ஆசிரியருக்கு, வணக்கம்.

தாங்கள் எழுதிய கடிதம் கிடைத்தது. என் கண்ணன் கழக நம்பரை அறிந்துகொண்டேன். நான் ஜூலை கூபனை அனுப்பி விட்டேன். ஆகஸ்டு கூபனை அனுப்பவில்லை. ஏன் என்ருல் என் சிநேகிதனுக்குப் படிக்கக் கொடுத்திருந்தேன். கு(கொ)டுத்தது கு(கொ)டுத்ததுதான். திரும்பி என் கண்ணுல் நான் அந்த(க்) கண்ணனைப் பார்க்கவேயில்லை. "டேய் நாளைக்குத் தருகிறேண்டா பிளீஸ்!", "என் தம்பி எங்கேயோ வைத்தாண்டா", "எங்க அத்தை பிள்ளை எடுத்துண்டு போயிருக்காண்டா", "எங்க மாமா பெட்டியில் இருக்குடா", "இங்கு இருக்குடா, அங்கு இருக்குடா" என்று ஏமாற்றினன். 'ஊம், நமக்கு(க்) கிடைக்கா'தென்பதை அரி(றி)ந்து கொண்டேன். பிளாக்மார்க்கெட்டில் கூபனை வாங்கவேண்டி வந்தது. வாங்கவும் வாங்கினேன். இரண்டு கூபனையும் அனுப்பிவிட்டேன். நான் ஒரு பாட்டு எழுதியிருக்கிறேன். மன்னிக்கவும், மன்னிக்கவும்.

அதைக் கண்ணனில் வெளியிடுவீர்கள் என்று நினைக்கிறேன். 'கண்ணன் வாழ்க!' ஹா..ஹா..ஹா....எவ்வளவு அருமையான பெயர்!

இப்படிக்கு, M. ராமசந்திரன், (R. 811) பம்பாய்.

*　*　*　*

ஒரு மூலையிலுள்ள கறுப்பு நக்ஷத்திரத்தில் ஆரம்பித்து, மற்றொரு மூலையிலுள்ள நக்ஷத்திரத்தைப் பன்னிரண்டே நேர்க்கோடுகளில் மொத்தம் 49 நக்ஷத்திரங்களை இணைக்கவேண்டும். முடியுமா? (முடியாவிட்டால் விடையை வேறுபக்கத்தில் பார்க்கலாம். ஆ-ர்.)

—சோமசுந்தரன், கோவை.

*　*　*　*

தக்காளிப்பழ ஜாம்

தக்காளிப் பழங்கள் பெரியதாகவும் சதைப்பற்றுள்ளதாகவும் இருக்கவேண்டும். பழம் சரியான பக்குவத்தில் இருக்க வேண்டும். தண்ணீரை வாய் அகலமான ஈயம் பூசின பாத்திரத்தில் விட்டுக் கொதிக்க வைத்துக் கொள்ளவேண்டும். இதில் பழங்களை அப்படியே முழுசாகப் போட்டு ஒரு நிமிஷம் ஆனதும் கீழே இறக்கிக் கொள்ளவேண்டும். பழங்களை ஒரு சுத்தமான கூடையிலே கொட்டித் தண்ணீரை வடித்துவிட வேண்டும். பழத்தின் மேல் தோலை உரித்து விடவேண்டும். பிறகு வாய் அகலமான பாத்திரத்துக்கு மேல் பிடித்து இரண்டாக வெட்டவேண்டும். உள்ளே இருக்கும் சாற்றையும் விதைகளையும் அப்புறப்படுத்தி விடவேண்டும். இவ்விதம் எடுக்கப்பட்ட பழங்களின் அளவுக்குச் சமபங்கு சர்க்கரை சேர்த்து அடுப்பில் வைத்துக் கொதிக்கவிட்டு நன்றாகச் சேர்ந்து ஜாம் பதம் வந்ததும் இறக்கிக் கொள்ளவேண்டும். (ஜாம்பதம் கொஞ்சம் தட்டில் விட்டு ஆறினதும் மெதுவாக உரைவதே.) அதிகம் காய்ச்சிவிட்டால் கல் மாதிரி ஆகிவிடும். மிகவும் இளம்பாகாக எடுத்துவிட்டால் நாள் நிற்காமல் புளித்துவிடும்.

S. சுமதி, (S. 32.) புதுச்சேரி.

*　*　*　*

கண்ணன் ஆசிரியர் அவர்களுக்கு என் மனமார்ந்த வணக்கம்.

நான் கதை எழுதி அனுப்பலாமா? ஒரு ஜோரான துப்பறியும் கதை எனக்குத் தெரியும். ஆனால் அதிலே நடுவில் கல்யாணம் வந்துவிடுகிறது. அப்படியானால் போடுகிறீர்களா?

நான் கண்ணன் கழக மெம்பர்தான். அனுப்பட்டுமா? ஸ்டாம்பு வைத்து அனுப்பட்டுமா? வைக்காமல் அனுப்பட்டுமா?

அனுப்பினுல் போடுவீர்களா? பிழையிருந்தால் மன்னித்து, திருத்தித் போடுவீர்களா?

த. ம. கோபாலகிருஷ்ணன், மேலராஜவீதி, தஞ்சை.

[ஸ்டாம்பு வைத்து அனுப்பினுல் திருப்பித் தபாலிலாவது, நன்ருய் இருந்தால் பத்திரிகையிலாவது, இரண்டும் இல்லாவிட்டால் கூடையிலாவது நிச்சயம் போடுவேன். சந்தேகப்படாதே. ஆ-ர்.]

* * * *

கண்ணன் மாமாவே,

எனக்கு (க்) கண்ணன் பு(பி)டிக்கிறது. ஆனு (ல்) உங்களைத்தான் பு(பி)டிக்க(வி)ல்லை. கதையெல்லாம் பிடிக்கிறது. ஏன் தெரியுமா? எங்க(ள்) ஊரிலே கூட்டம் போடமாட்டேன் என்கிறீர்களே. அதனுலேத(ா)ன்.

மீனுட்சி, தெற்கு வெளிவீதி, மதுரை.

* * *

விடைகள்

ஏழு நம்பர்கள் எதை வேண்டுமானுலும் மாற்றி மாற்றிக் காட்டலாம். ஆனுல் எட்டாவது நம்பரை 12 முதல் தலைகீழாகக் காட்டி வரவேண்டும். நீங்கள் நினைத்த நம்பருடன் ஒவ்வொன்ருக 20 வரையில் கூட்டிக்கொண்டுவந்தால், 20-ஆம் எண் வரும்போது நீங்கள் நினைத்த எண்ணில் தான் என் கைவிரல் இருக்கும்.

ஜே. சாமிநாதன, மந்தைவெளி.



* * * *

49 நக்ஷத்திரங்கள்



JL 03102/N5K1 N50 84199

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM
AT THE MADRAS LAW JOURNAL PRESS, MADRAS, 4.